விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 25 திங்கட்கிழமை (11.12.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 357

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைய வாய்ப்பு

## - மனோ கணேசன்



(கண்டி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இணைவதற்கான வாய்ப்பு காணப்படுவதாக தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். மஸ்கெலியாவில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட அமைச்சர் மனோ கணேசன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க கூடிய வாய்ப்பு இருக்கிறது எனத் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர் மீதான தாக்குதலாளிகளுக்கு மறியல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் மீதும் மாங்குளம் சந்தியில் வைத்து பிறிதொரு இளைஞர் மீதும் தாக்குதல் நடத்திய குழுவைச் சேர்ந்த மூவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத் 23

## ரயில்வே ஊழியருக்கு இன்றுவரை அவகாசம்

(கொழும்பு)

தொடருந்து உதவியாளர்களை இணைத்துக்கொள்வது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு தொடருந்து சாரதிகள் சங்கமானது, கடந்த புதன்கிழமை நள்ளிரவு முதல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது. 23

## யாழில் 50 பவுண் நகை திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதிப் பகுதியிலுள்ள வீடொன்றிற்குள் புகுந்த திருடர்கள், 50 பவுண் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அருகிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்திற்கு ஞாயிறு 24

## சுரேஷ் அணியுடன் இணைந்தது ஈரோஸ்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட தரப்பினரினால் அமைக்கப்பட்ட, புதிய கூட்டணியுடன், ஈரோஸ் (ஈழவர்ஜனநாயகமுன்னணி) இணைந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் 24

## புதிய அரசியலமைப்பு வரும்வரை மத்திய அரசுடன் இணையோம்!

### சுமந்திரன் விளக்கம்



(வவுனியா)

புதிய அரசியலமைப்பின் ஊடாக அதிகாரங்கள் மக்களுக்கு கிடைக்கும் வரை மத்திய அரசுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள மாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரி. 24

## வாள்வெட்டுக் குழு மீண்டும் அட்டூழியம்



(யாழ்ப்பாணம்)

முகங்களை கறுப்பு துணிகளால் கட்டியபடி வாள்களுடன் வந்த வாள் வெட்டுக்கும்பல் ஒன்று ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதி 24

## இளைஞர்களை ஆயுதமேந்த வைத்ததில் தமிழரசுக் கட்சிக்கு பெரும் பங்குண்டு

### இடையில் அரசியலுக்கு வந்தவர்களுக்கு அது பற்றி தெரியாதென்கிறார் சுரேஷ்



(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர்கள் ஆயுத மேந்திப் போராட அழைத்துச் சென்றதற்கு தமிழரசு கட்சிக்கும் பெரும் பங்குண்டு என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 24

## யாழ். மண்ணைவிட்டு விடைபெறவுள்ளேன்!

### நீதிபதி இளஞ்செழியன் உருக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு நான் வருகை தந்ததற்கான நோக்கம் நிறைவேறிவிட்டது. விரைவில் யாழ் மண்ணை விட்டு விடைபெறவுள்ளேன் என யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்துள் 24

## படித்த சிங்களவர் கூட்டாட்சியை வரவேற்பர்

### முதலமைச்சர்

(யாழ்ப்பாணம்)

அரசியல்வாதியல்லாது ஒவ்வொரு படித்த சிங்கள மகனும் இந்த நாட்டில் அனைத்து சமூகங்களும் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும் சமாதானத்துடனும் வாழ்வதற்கு அனுமதிக்கும் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளைக் கொண்ட கூட்டாட்சி நிர்வாக அலகை வரவேற்கிறார்கள் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 23

## கூட்டு எதிரணி எம்.பி அரச பக்கம் தாவினார்

(கொழும்பு)

கூட்டு எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திகாமடுல்லை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேயவிக்ரம, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்க இணைந்துள்ளார். 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தமிழ்த் தேசியக் கூட்ட...

இதேவேளை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தை தொடர்பில் கருத்து வெளியிடப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கட்டுக்கோப்பாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச் சந்திரன் கருத்து வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சரியான நேரத்தில் அரசை விட்டு வெளியேறுவோம் என மூத்த சுதந்திர கட்சி அமைச்சர் ஜோன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தில் இருந்து சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் வெளியேறுவதா இல்லையா என்ற தீர்மானம் இன்னும் மூன்று வாரங்களில் மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ரி.பி எக்க நாயக்கவும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு நிலையில் அரசாங்கத்தில் இருந்து சுதந்திரக் கட்சி வெளியேறினால், அமையவுள்ள ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைவதற்கான வாய்ப்பு காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (மு-1)


**வீட்டுப்பணிப் பெண் தேவை**

இரு வைத்தியர் கொண்ட குடும்பத்துக்கு தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய பணிப்பெண் உடன் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்

0771271134, 0772425208

(1678)



**இடமாற்றம்**

இல.109கண்டி வீதி, கிளிநொச்சியில் இயங்கிவந்த இரத்தினாஸ் மோட்டஸ் கனகபுரவீதியில் அப்பன் மோட்டஸுக்கு அருகாமையிலும் ஹரே கிருஸ்ணா ஹாட்வெயாருக்கு முன்பாகவும் 13.12.2017 புதன் கிழமை முதல் இயங்கவுள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

-அ.இராசேஸ்வரன்

(சி-654)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## 1 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகளுடன்...

### நாகலிங்கம் அமுதலிங்கம் (அமுது)

தோற்றம் 02 - 01 - 1962

மறைவு 23 - 11 - 2016



ஆண்டு ஒன்று ஆனது அண்ணா
உங்கள் எழில் வதனம் கண்டு
ஆண்டு பல சென்றாலும் ஆறாது ஆறாது
நெஞ்சம் கனத்திட கண்கள் குளமாகிட
கூட்டம் ஒன்று வந்ததோ உம்மை சுமந்து செல்ல
கரங்கள் வலித்திட கவிதை உரைத்திட
காலம் ஒன்று வந்ததோ அண்ணா

(1602)

*நீங்கா நினைவுகளுடன்*

அம்மா:பரமேஸ்வரி, மனைவி:மாலா,
மகன்:தவப்பிரியன், சகோதரம்:முத்துலிங்கம்,
ஞானலிங்கம், யோகலிங்கம், தனபாலலிங்கம்,
வரதலிங்கம், சாந்தலிங்கம், நேசலிங்கம்

*மயிலங்காடு, சுன்னாகம்*

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி சுவாம்பிள்ளை ஆரோக்கியம்

தோற்றம்:-12.03.1940 மறைவு:-10.12.2017

எமது பாடசாலையில் கடமையாற்றி வரும் ஆசிரியர் திரு.சு.இக்னேசியஸ் கிளானி அவர்களின் அன்புத் தாயார் சுவாம்பிள்ளை ஆரோக்கியம் அவர்கள் 10.12.2017 அன்று காலமான செய்தி அறிந்து துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(சி-658)

பாடசாலைச் சமூகம்,
யா/சென் ஜேம்ஸ் ம.வி. குருநகர், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி மகாதேவா



(சி-659)

'கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி மகாதேவா அவர்கள் 10.12.2017 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பவளம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற மகாதேவா அவர்களின் பாசமிகு மனைவியும், றிசாநந்தி, பார்த்தீபன் அவர்களின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மணியர்பதி வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்:-
தே.ஜெயக்குமார்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் மாணிக்கம் கனகரத்தினம்

(யாழ்.குருநாதர் வித்தியாலய ஓய்வுபெற்ற அதிபர், அகில இலங்கை சமாதான நீதவான், முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர்-ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)



(1675)

கடந்த 11.11.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. 11.12.2017 இன்று திங்கட்கிழமை அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாவலர் வீதி சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T) காலை 11.00 மணியளவில் நடைபெறும்.

இந் நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திப்பதுடன் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

82/11, 3ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்
021 222 3310

# “சர்வதேச விசாரணையும் தலையீடும் எமக்கு தேவை”

# நீதியை நிலைநாட்ட வலியுறுத்தி யாழில் கவனயீர்ப்பு











படங்கள்:- பொ.சோபிகா

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச மனிதவுரிமைகள் தினத்தை முன்னிட்டு வடக்கு-கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட வலியுறுத்தி சர்வதேச விசாரணையும் தலையீடும் எமக்குத் தேவை எனும் கோரிக்கையுடன் கவனயீர்ப்புப் போராட்டமும் பேரணியும் நேற்று யாழில் முன்னெடுக்கப்பட்டது.**

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட இந்த கவனயீர்ப்பு போராட்டம் நேற்று காலை யாழ். மாவட்ட செயலக முன்றலில் ஆரம்பித்து, யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐ.நா. தூதரக அலுவலகம் வரை பேரணியாக சென்று ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகருக்கான மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட உறவுகள் கருத்து தெரிவிக்கையில்,

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்து போராடி வருகிறோம்.

ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் பொய்த்துப்போன நிலையில் விரக்தி அடைந்துள்ளோம்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டதற்கு சாட்சிகள் நாங்கள்தான். இந்த நிலையில் எமக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. நாம் ஒன்றிணைந்து கடந்த பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதியில் இருந்து எமது உறவுகளை தேடி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறோம். எமது உறவுகளின் உண்மை நிலையை கண்டறியும் வரை எமது போராட்டத்தை தொடர்வதாகவும் அறிவித்துள்ளோம்.

இந்த நிலையில் எமக்கு உரிய பதிலை வழங்கும் அதிகாரத்தில் உள்ளவர்கள் அலட்சியமாக இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. இறுதியாக ஜனாதிபதியிடம் நம்பிக்கையுடன் சென்றும் அவருடைய பதில் எமக்கு ஏமாற்றத்தையே அளித்துள்ளது.

எனவே இலங்கையில் எமக்கான நீதி முற்றாக மறுக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேசத்தை நாடியுள்ளோம். எமது கோரிக்கைக்கு சர்வதேசம் நிச்சயம் செவி சாய்க்கும் என நம்புகிறோம்.

மனித உரிமைகள் தினமான இன்று (நேற்று) எமது போராட்டம் சர்வதேச மயப்படுத்தப்படுவதுடன் சர்வதேச விசாரணையும் தலையீடும் எமக்கு தேவை என்ற கோரிக்கையை முன்வைக்கிறோம்.

எமது உறவுகளின் நிலையை சர்வதேசம் விசாரித்து அறிந்து எமக்கு நீதி வழங்கும் என்று நம்புவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில் வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-9)

# கிழக்கிலும் மாபெரும் பேரணி





(ஏறாவூர்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் அரசாங்கத்தை, அதற்கு ஆதரவு வழங்குமாறு கோரியும், கிழக்கு மாகாணத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மாபெரும் பேரணியை, நேற்றுக்காலை நடத்தினர்.

இந்தப் பேரணியானது கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி ஊர்வலமாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் சென்றது.

அங்கு மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டதுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மட்டக்களப்பு அலுவலகத்திலும் மகஜர் ஒன்று வழங்கி வைக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் கிழக்கு மாகாணத்திலுள்ள வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இணையத்தின் பிரதிநிதிகள், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (இ-7)

# கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்துக்கு நேற்று பலத்த பாதுகாப்பு



(கொழும்பு)

கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்துக்கு நேற்று பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், புனித ஜெருசலம் இஸ்ரேலின் தலைநகர் என அறிவித்ததையடுத்து, உலகம் பூராகவும் அமெரிக்காவுக்கு எதிராக எதிர்ப்பு வலுத்துள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

# மொழிப்பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணலாம்

# அமைச்சர் மனோ நம்பிக்கை

(கொழும்பு)

கூட்டணிக்கு ஒரு இணக்கப்பாடு இல்லையென்றால் தனித்து போட்டியிட தமிழ் முற்போக்கு கூட்டணி தயாராகவுள்ளது. எமக்கு சின்னம் முக்கியம் இல்லை. எண்ணம் தான் முக்கியம் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

மஸ்கெலியா நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்வதற்காக வருகை தந்தபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு இந்த நாட்டில் சிங்கள மொழி மட்டும் என்ற சட்டம் மாற்றப்பட்டு தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக உள்வாங்கப்பட்டது. இப்பொழுது 30 வருட காலமாகிவிட்டது. இந்த பிரச்சினையை தீர்ப்பதில் ஏனையவர்கள் தூங்கி கொண்டு இருந்தார்களா என்று கேட்க விரும்புகின்றேன். நான் இப்பொழுது இந்த விடயத்தை பொறுப்பேற்றுள்ளேன். எனக்கு தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்று மொழிகளும் தெரியும். இது இப்பொழுது பேசும் பொருளாக மாறியுள்ளது. இது எனக்கு வெற்றியளித்துள்ளது. இந்த பிரச்சினையை வெகுவிரைவில் தீர்க்க முடியும். 30 வருட பிரச்சினையை 30 நாட்களில் தீர்க்க முடியாது. இது முட்டாள்தனமான விடயமாகும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு இன பிரச்சினையை தீர்ப்பதற்காக கடந்த பல வருட காலமாக பல அரசாங்கங்களுக்கு ஆதரவளித்துள்ளது. இந்திய அரசாங்கத்திற்கும் ஆதரவளித்துள்ளது. எனினும் இனப்பிரச்சினை தீர்ந்துவிட்டதா என்று கேட்க விரும்புகின்றேன். அவர்களுக்கு ஒரு சட்டம். எனக்கு ஒரு சட்டமா? இனப்பிரச்சினைக்கு காரணம் [illegible] தான் என்று [illegible]. மொழிப் [illegible] தீர்க்கப்பட்டு அதிகார [illegible] வழங்கப்பட்டால் [illegible] இனப்பிரச்சினைக்கு தீர்வு [illegible] முடியும். [illegible] வோம். அதற்கு முன்னோடியாக மொழிப்பிரச்சினை தீர்க்கப்படும் என அவர் மேலும் [illegible]. (இ-7)

## தொடர்ச்சியான 12 தோல்விகளுக்கு பின் முதல் வெற்றி

# லக்மலின் 4/13 பந்துவீச்சு பெறுதி கைகொடுக்க

## தரம்சாலாவில் இந்தியாவுக்கு வேட்டுவைத்தது இலங்கை



வேகத்துக்கு சாதகமான ஆடுகளம் என்றால், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கு உதறல் எடுக்கிறது. இது, தரம்சாலாவில் நேற்று நடந்த முதல் ஒரு நாள் போட்டியிலும் அம்பலமானது.

இலங்கை 'வேகங்கள்' போட்டுத் தாக்க, இந்திய அணி 112 ஓட்டங்களுக்கு சுருண்டது. தோனி மட்டும் தனிநபராக போராடி அரைச்சதம் கடந்தார். பின் பந்து வீச்சாளர்களும் ஏமாற்ற, இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இந்தியாவ்க்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நேற்று இமாச்சலப்பிரதேசத்தில் உள்ள தரம்சாலாவில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சை தேர்ந்தெடுத்தது. இந்திய ஒரு நாள் அணிக்கு ரோகித் முதல் முறையாக தலைமை தாங்கினார். இந்திய அணியில் ரகானே நீக்கப்பட்டு ஸ்ரேயாஸ் ஐயர் அறிமுக வாய்ப்பு பெற்றார்.

**அதிர்ச்சி ஆரம்பம்**

இலங்கை 'வேகத்தில்' இந்தியா ஆரம்பத்திலேயே ஆட்டம் கண்டது. மத்யூஸ் பந்தில் தவான் 'டக்' அவுட்டானார். லக்மல் தன் பங்கிற்கு 'அடி' கொடுத்தார். இவரின் 'வேகத்தில்' ரோகித் 2 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 'தல' தடுமாறியதால், அவரது வழியில் அடுத்தடுத்து வீரர்கள் கிளம்பினர்.

**'பவர் பிளே' வீண்**

இப்படி துடுப்பாட்ட வீரர்கள் சொதப்ப, 'பவர் பிளே' ஓவரில் (முதல் 10) இந்தியா 3 விக்கெட்டை இழந்து 11 ஓட்டம் மட்டுமே எடுத்தது. 'வேகத்திற்கு' சாதகமான ஆடுகளத்தை இலங்கை அணியினர் கச்சிதமாக பயன்படுத்திக் கொணடனர். மீண்டும் வந்த லக்மல் இம்முறை மணிஷ்பாணடேவை (2) திருப்பி அனுப்பினார். 'வழமையான தலைவர் ஹோலியும் இல்லாததால், நடுத்தர வரிசை தடுமாறியது. அறிமுக வீரர் ஸ்ரேயாஸ ஐயரும், 9 ஓட்டங்களில் நடையைக் கட்டினார்.

இதனால், இந்தியா 13.2 ஓவரில் 16 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டை இழந்து தத்தளித்தது. இந்த நெருக்கடியால், இதமான இமயமலை சூழலிலும் இந்திய ரசிகர்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

**தல தோனி ஆறுதல்**

பாண்டயா (10) அணியை கைவிட்டார். லக்மலின் பந்தில் புவனேஷ்வர் 'டக்' அவுட்டானார். இந்த இக்கட்டான நிலையில், 8 ஆவது விக்கெட்டுக்கு தோனி- குல்தீப் யாதவ் ஜோடி போராடியது. 300 போட்டிகளுக்கு மேல் விளையாடிய அனுபவம் கைகொடுக்க, தோனி சாதுர்யமாக செயல்பட்டார். அகில தனஞ்செய பந்தில் குல்தீப் (19) ஆட்டமிழந்தார். நம்பிக்கை இழக்காமல் போராடிய தோனி, பின் வரிசை வீரர்களுடன் 'கூட்டணி' வைத்தார். பிரதீப் வீசிய 36ஆவது ஓவரில் ஒரு சிக்சர், பவுண்டரி விளாசிய இவர் அரைச்சதம் கடந்து ஆறுதல் தந்தார். இவரது தயவால், அணி 100 ஓட்டங்களை எட்டியது. திசரா பெரேரா பந்தில் தோனி (65) ஆட்டமிழக்க, போராட்டம் முடிவுக்கு வந்தது.

இந்திய அணி 38.2 ஓவரில் 112 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இலங்கை சார்பில் அதிகபட்சமாக லக்மல் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

**எளிய இலக்கு**

வெறும் 113 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலககை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை ஆரமபத்தில் கொஞ்சம் திணறியது. பும்ரா பந்தில் குணதிலக ஒரு ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். திரிமன்னே டக்-அவுட்டானார். இதனால், 'வேகத்தில்' இலங்கை துடுப்பாட்ட வீரர்களும் சிக்குவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அனுபவ மத்யூஸ்-உபுல் தரங்க சேர்ந்து அணியை எளிதாக கரை சேர்த்தனர்.

**தரங்க அபாரம்**

தரங்க 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பும்ரா பந்து வீச்சில் மத்யூஸ் இரண்டு பவுண்டரி விளாசினார். தன் பங்கிற்கு பாண்ட்யா பந்தை டிக்வெல பவுண்டரிக்கு அனுப்பி, வெற்றியை எளிதாக்கினார. இலங்கை அணி 20.4 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 114 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மத்யூஸ் (25), டிக்வெல்லா (26) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய அணி, தொடரில் 0-1 என பின்தங்கியது. ஆட்டநாயகன் விருதை இலஙகையின் லக்மல் வென்றார். 2 ஆவது போட்டி வரும் 13 ஆம திகதி மொகாலியில் நடக்கிறது.

**இப்பவே கண்ண கட்டுதே...**

தரம்சாலா ஆடுகளத்திலேயே இந்த நிலை என்றால், அடுத்த ஆண்டு தென்னாபிரிக்க மண்ணில் நடக்க உள்ள தொடரை நினைத்தால் சாமான்ய ரசிகருக்கு இப்பவே கண்ண கட்டுகிறது. அங்குள்ள ஆடுகளங்களில் பந்துகள் எகிறும். இதற்கேற்ப பயிற்சி முறையை உடனடியாக மாற்ற வேண்டும்.

**இலஙகை நிம்மதி**

இலங்கை அணி கடந்த ஜூலையில் சிம்பாப்வே அணிக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் வெனறது. இதன்பின், அதே தொடரில் இரண்டு போட்டி மற்றும் இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிராக தலா 5 என மொத்தம் 12 ஒரு நாள் போட்டிகளில் தொடர்ந்து வீழ்நதது. இதற்கு, நேற்று வெற்றி கண்டு நிம்மதி பெரு மூச்சுவிட்டது.

இந்த ஆண்டில் சர்வதேச அரங்கில் இந்திய அணிக்கு எதிராக முதல் வெற்றியை இலங்கை பதிவு செய்தது. இதற்கு முந்தைய, டெஸ்ட (0-3), ஒரு நாள் (0-5), ஒரு 'ரி20 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியாவுக்கு எதிராக வீழ்ந்திருந்தது. தவிர, சமீபத்தில் இந்திய மண்ணில நடந்த டெஸ்ட் தொடரையும் 0-1 என இழந்திருந்தது.

## ஹமில்டன் டெஸ்ட்

# நியூசிலாந்தின் வேகங்கள் அசத்த 2ம் நாள் நிறைவில் மே.தீவுகள் 8/215



ஹமில்டனில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் ஆட்டநேர நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளது.

நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கு பற்றுகிறது.

இத்தொடரின் முதல் டெஸடில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றிருந்த நிலையில், 2ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹமில்டன் செடான் பார்க்கில் நேற்று முன்தினம் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பொறுப்புத் தலைவர் பிராத்வைட் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார். ஒரே வருடத்திற்குள் இரண்டு முறை மெதுவாக பந்துவீசியதால் வழமையான அணித் தலைவர் ஹோல்டருக்கு ஒரு போட்டியில் விளையாட தடைவிதிக்கப்பட்டது. இதனால் பிராத்வைட் மேற்கிந்தியத் தீவுகளுக்கு தலைமை தாங்கினார்.

முதல் இன்னிங்ஸை தொடங்கிய நியூசிலாந்து அணி ரவெல் (84), கிராண்டஹோம் (58) ஆகியோரின் அரைச்சதத்தால் நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர நிறைவில் 87 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 286 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

பிளண்டெல் 12, வோக்னர் ஒரு ஓட்டத்துடன் களத்தில் இருந்தனர்.

நேற்று 2ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. பிளணடெல் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். வோக்னர் நேற்று எடுத்திருந்த ஒரு ஓட்டத்தோடு வெளியேறினார். இறுதி விக்கெட்டுக்காக இணைந்த சௌதி - போல்ட் ஜோடியின் 61 ஓட்ட இணைப்பாட்டம் கைகொடுக்க நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 373 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

சௌதி 31 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்த போல்ட் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் கேப்ரியல் 4, ரோச் 3, கம்மின்ஸ் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நியூசிலாந்து அணியின் நேர்த்தியான பந்துவீச்சில் விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

அணித் தலைவர் பிராத்வைட்டை தவிர மற்றைய வீரர்களான பவல் (0), ஹெட்மையர் (28), ஷாய் ஹோப் (15), சேஸ் (12), அம்ப்ரிஸ் (2) ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

டவ்ரிச் 35, பிராத்வைட் 66 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தனர்.

இந்நிலையில் நேற்றைய 2ஆவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வர மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை எடுத்துள்ளது.

களத்தில் ரெய்ஃபெர் 22, கம்மின்ஸ் 10 ஓட்டங்களுடன் உள்ளனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பில் சௌதி, போல்ட், கிராண்ட்ஹோம், வோக்னர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

போட்டியின் 3ஆம் நாளாட்டம் இன்றாகும். இப்போட்டி இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

# சரியான நேரத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம்

## ஜோன் செனவிரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

சரியான நேரத்தில் அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போவதாக தொழில் உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு வார இறுதி பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியை தோற்கடித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை வெற்றியடையச் செய்ய நிபந்தனைகள் விதிக்கப்படக் கூடாது. நிபந்தனைகள் எதனையும் விதிக்காது கூட்டு எதிர்க் கட்சி இணைந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இணைந்து கொண்டால் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திலிருந்து விலகிக் கொள்வர். மலர் மொட்டுக்குத் தேவையான வகையில் அரசாங்கத்தை விட்டு விலகி விடமுடியாது.

அரசாங்கம் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது. தேவையான நேரத்தில் ஆளும் கட்சியிலிருந்து சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் விலகிக் கொள்வார்கள்.

அனைவரும் இணைந்து கட்சியை வெற்றி பெறச் செய்யவே முயற்சிக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசு திறமைசாலிகளை புறக்கணித்துவருகின்றது

## கோத்தபாய குற்றச்சாட்டு



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கம் நாட்டிற்கு நன்மை பயக்கும் திறமைசாலிகளை புறக்கணித்து வருவதாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாரஹேன்பிட்டவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

"அதிகாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்காமை மற்றும் அவர்களின் கருத்துக்களுக்கு செவிமடுக்காமையே அரசாங்கத்தின் நெருக்கடி நிலைக்கு காரணம்.

தற்போதைய ஊடக சுதந்திரம் என்பது சேறு பூசும் சில ஊடகங்களின் வளர்ச்சியே ஆகும். கடந்த ஆட்சியின் போது திறமைசாலிகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு அவர்களின் முயற்சிகளுக்கு இடமளிக்கப்பட்டது. எனினும் தற்போதைய அரசாங்கம் திறமைசாலிகளை புறக் கணித்து வருகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


# வீட்டுக் கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 11.11.2017 சனிக்கிழமை
அன்று இறைபதம் அடைந்த
எமது அன்புத் தந்தை

அமரர் **தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (இந்துமதி)**

அவர்களின் அந்தியேட்டி நிகழ்வுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் சாட்டி வெள்ளைக்கடற்கரையில் நடைபெற்றது.
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 11.12.2017 இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.
அத்தருணம் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

(1663)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இருபாலைச் சந்தி, பேச்சியம்மன் கோயிலடி.
தொ.இல: 077 548 8919


# பகிரங்க கேள்விகள் மூலம் விற்பனை செய்தல்

## மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

கீழே குறிப்பிடப்பட்ட பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான பொருட்களை விற்பனை செய்வது தொடர்பாகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப்படிவங்களை 2017.12.27 திகதி பி.ப.12.30 வரை யாழ்ப்பாண மேல்நீதிமன்றக் கணக்குக் கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 100/= ஐ செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பிடப்பட்ட பொருட்களை குறிப்பிட்ட நீதிவான் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும். வாகனம் தொடர்பான விபரங்களும் மீளளிக்கக்கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகை விபரங்களும் பின்வருமாறு.

| விபரம் | மீளளிக்கக்கூடிய வைப்பு (ரூபா) | பார்வையிடக்கூடிய நீதிவான் நீதிமன்றம் |
|---|---|---|
| 1. பவுன் சங்கிலி (11.6g-22 கரட்) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், பருத்தித்துறை. |
| 2.T.V.S மோட்டார் சைக்கிள் | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 3.Bajaj Pulsor மோட்டார் சைக்கிள் | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 4.Bajaj Pulsor மோட்டார் சைக்கிள். | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 5.Auto Mahendra முச்சக்கரவண்டி | 2000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 6. Isusi Elf (250 கன்ரர்) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 7. Hero Honda (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 8. Hero Honda (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 9. Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 10. Bajaj (Red) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 11. Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 12.Bajaj (Black) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |
| 13. Mahendra(Silver) | 1000.00 | நீதிவான் நீதிமன்றம், யாழ்ப்பாணம். |

கேள்விப் பத்திரங்களை மேல்நீதிமன்ற நீதிபதி, மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் உறையிலிட்டு ஒட்டப்பட்டு சீலிடப்பட்டு 2017.12.27 திகதி பிற்பகல் 12.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக மேல் நீதிமன்றக் கணக்கீட்டுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) இடுதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பகிரங்க கேள்வி மூலம் "பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான கேள்விப்பத்திரம் -2017" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

தவிசாளர்/மேல் நீதிமன்ற நீதிபதி,
மேல்நீதிமன்ற பெறுகைக்குழு,
மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

(C-650)

# இராசி பலன்

11.12.2017
கார்த்திகை 25, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
அட்டமி காலை 6.54 மணிவரை
நவமி பின்னிரவு 6.13 மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.17 மணிவரை
சுபநேரம் 12.19-1.49 மணிவரை
இராகுகாலம் 7.49-9.19 மணிவரை
சுப்பிரமணிய பாரதியார் நினைவுதினம்
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| - | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அவிட்டம்- சதயம் | | ராகு |
| கேது | | | |
| | சூரி, சுக்<br>சனி, புத | குரு,<br>செவ் | சந் |

**மேடம்:** தொலைபேசி வழியால் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள், உடல் நலன் சீராகும்.

**இடபம்:** மன மகிழ்ச்சியோடு செயற்படுவீர்கள், சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவுக்கு வரும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்:** கூட்டு முயற்சிகள் கைகூடும், பொருளாதார நலனில் அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிம்மம்:** சுப செய்திகள் வந்து சேரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், உறவினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியத்தில் முன்னேற்றம் கிடைக்கும், பணத்தேவை கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்க வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சஞ்சலங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு:** குடும்ப ஒற்றுமை மேலோங்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள்.

**மகரம்:** குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விரயங்கள் கூடும்.

**மீனம்:** விஷ்ணு வழிபாடு காரிய வெற்றி தரும், நீண்டநாள் விருப்பம் ஒன்று நிறைவேறலாம், சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள்.





யாழ்.புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீதுர்க்கா சனசமூக நிலைய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் உரையாற்றுவதையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மு.செல்வகுமார் பதக்கம் அணிவித்து கௌரவிப்பதையும் அருகில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 9 ஏ எடுத்த மாணவர்கள் பிரதேச செயலருடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சக்தி)




சண்டிலிப்பாய் மணிமேகலை முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பும் கடந்த புதன்கிழமை ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் வ.நந்தீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை உள மருத்துவ சேவையாளர் இ.வாகீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெண்களுக்கு எதிரான குற்றங்களை முற்றிலுமாக தடுத்துநிறுத்த முடியும்

## மாகாண மகளிர் விவகார அமைச்சர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூகப் பொறுப்புள்ளவர்களாக நாம் ஒவ்வொருவரும் மாறுவதன் மூலமே பெண்களுக்கு எதிரான குற்றங்களை முற்றிலுமாக தடுத்து நிறுத்த முடியும் என்று வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலையின் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த 6ஆம்திகதி நடைபெற்றது. ஐந்தாம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான தேசிய வெட்டுப் புள்ளிக்கு மேல் பெறுபேறுகளைப் பெற்ற ஆறு மாணவர்களுக்கான சிறப்பு பரிசில்களையும் கடந்த கல்வி ஆண்டில் சிறந்த கல்வி செயற்பாடுகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி சிறப்பித்த அமைச்சர் அங்கு மேலும் உரையாற்றுகையில், அமிர்தலிங்கம் அவர்களின் காலத்திற்குப் பின்னர் வட்டுக்கோட்டை மற்றும் மானிப்பாய் தொகுதிகளில் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லையே என்ற ஏக்கம் பலருக்கும் இருக்கின்றதைப் போன்று எனக்குள்ளும் இருந்தது. அதனை நிவர்த்தி செய்யும் வகையில் எனது பணிகளை செய்துவருகின்றேன். இவ்வாறான நிகழ்வுகளுக்கு வருவதன் மூலமாகவே குறித்த பிரதேசங்களில் நிலவும் குறைகள், தேவைகள் என்பவற்றை நேரடியாக பார்க்க முடிகின்றது.

ஆயுத மௌனிப்பிற்கு பின்னர் பெண்களுக்கு எதிரான வன்முறை மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் துஷ்பிரயோகங்கள் தமிழர் தாயகத்தில் அதிகரித்துள்ளதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினைகளை சட்டத்திற்குட்பட்டு ஓரளவு தீர்வு கண்டுவிடலாம் என்ற போதிலும் அவற்றை சரிசெய்வதில் எங்களது சமூகத்திற்கு பாரிய பொறுப்பிருப்பதனையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

எமது கலாசார, பண்பாட்டு விழுமியங்களுக்கு அமைவாக எங்களுக்கு ஒரு கூட்டுப் பொறுப்பு உள்ளது. சமூக வன்முறைகளில் இருந்து பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கு நாம் எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். அவ்வாறு சமூகப் பொறுப்புடன் இவ்விடயங்களை சரிசெய்வதில் எத்தனை பேர் தாமாக முன்வந்துள்ளார்கள் என்பதை பார்த்தோமானால் ஏமாற்றமே மிஞ்சுகிறது.

அரச அலுவலகங்களில் பணிசெய்யும் பெண்கள் ஏதோ ஒரு வகையில் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு வருவதனை காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறு பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் தமக்கு இழைக்கப்படும் அநியாயங்களை தட்டிக்கேட்காது அடங்கிப்போவதே மீண்டும் மீண்டும் அவ்வாறான குற்றங்கள் இடம்பெற வழிவகுத்து விடுகிறது.

தமக்கு இழைக்கப்படும் அநியாயத்திற்கு நீதி கேட்க முற்படும்போது அச்சுறுத்தல்களையும் அவமானங்களையும் அப் பெண்கள் சந்திக்க வேண்டியுள்ளதாலேயே பெரும்பாலானவர்கள் தயங்குவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இருந்தாலும் பாதிக்கப்படும் ஒவ்வொரு பெண்ணும் தனக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நீதிகேட்க துணிவுடன் முன்வருவதன் மூலமே அடுத்தவருடைய பிரச்சினைக்காக குரல்கொடுக்கும் சூழலை ஏற்படுத்த முடியும்.

பிள்ளைகளுக்கான முதல் பாதுகாப்பு தாய்தான். அதன்



பின்னர்தான் தந்தை, ஆசிரியர், சமூகம் என்ற கட்டமைப்பிற்கு பொறுப்பு உள்ளது. மகளிர் விவகார அமைச்சராக இருக்கின்ற போதிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே பணியாற்றி வருகின்றேன். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இதைவிட ஆயுத மௌனிப்பின் பின்னர் குடும்பப்பிரிவு என்பது அதிகரித்து வருகின்றது. தமிழர் தாயகம் கடந்து புலம்பெயர் தேசங்களிலும் அதன் தாக்கம் அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகின்றது. இவ்வாறான குடும்பபிரிவென்பது பிள்ளைகளை அநாதரவான நிலைக்கு இட்டுச்செல்கின்றது. குறிப்பாக பிரிவைச் சந்தித்துள்ள குடும்பங்களிலுள்ள வளர்ந்த பெண்பிள்ளைகளே பெரிதும் பாதிக்



கப்படுபவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் இன்னொருவரால் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகும் நிலைமைக்கு குடும்பப் பிரிவுகள் தள்ளியுள்ளது.

இவ்வாறு பெண்களுக்கு எதிரான வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் குறித்த முறைப்பாடுகள் வருகின்ற போது நாங்கள் பெரும் தவறிழைத்து விட்டோமோ என்று நினைக்குமளவிற்கு பாரதூரமான பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இவ்வாறு பாதிப்பிற்குள்ளாகும் பெண்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து தாயிடம் கலந்துரையாடும்சூழலை ஒவ்வொரு குடும்பங்களும் ஏற்படுத்த வேண்டும்.

என்னுடைய அம்மா எனக்கு பலமாக இருப்பார் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு பெண்களிடத்திலும் பெற்றோர் ஏற்படுத்த வேண்டும். அதன் மூலமே தனக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நீதிகேட்கும் துணிச்சலை பாதிக்கப்படும் பெண்களுக்கு ஏற்படுத்த முடியும். அத்துடன் சமூகப் பொறுப்புடையவர்களாக நாம் எல்லோரும் மாறுவதன் மூலமே இவ்வாறான குற்றங்களையும், வன்முறைகளையும், துஷ்பிரயோகங்களையும் முற்றிலுமாக தடுக்க முடியும் என்று அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (இ-4)

# பயிற்சி நூல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

கணித பாட ஆசிரியர்களான வி.குகநாதன், வ.பாலமுரளி ஆகியோர் எழுதிய புதிய பாடத்திட்டம் கணிதம் தரம்-8 என்னும் பயிற்சி நூல் வெளியீட்டு விழா கடந்த 7 ஆம் திகதி வியாழக்கிழமை தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக மண்டபத்தில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர சிவம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் கலந்து கொண்டார்.

வைத்திய கலாநிதி வை. தியாகராசா முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். (இ-78)





புத்தூர் மேற்கு கலைமதி கிராமத்தின் மக்கள் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "பிணம் எரியும் முற்றம், கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வின் போது...

# பௌத்த மதத்தை உலகம் முழுவதிலும் வியாபிக்க வேண்டும்

## பிரதமர் ரணில் விருப்பம்



(கொழும்பு)

பௌத்த மதத்தை உலகம் முழுவதிலும் வியாபிக்க வேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பன்னிப்பிட்டி பெலன்வத்த விஹாரையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர்இதனைத் தெரிவித்துள்ளார்.

பௌத்த மதத்தை இலங்கையில் மேம்படுத்தும்அதே வேளை, உலக அளவில் பௌத்த மதத்தை வியாபிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

வரலாற்றுக்காலம் முதல் இலங்கை தேரவாத பௌத்த மதத்தை பாதுகாத்து, உலகின் பல நாடுகளுக்கு பௌத்த மதத்தை வியாபித்துள்ளதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

மல்லாகத்தில்...
தரம் 06 – 11 ஆங்கிலமொழி மூலவிஞ்ஞானவகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
0788184204
(1646)

# மைத்திரி-மகிந்தவை இணைக்க மகாநாயக்கர்கள் களத்தில்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன தரப்பையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பையும் ஒன்றிணைக்கும முயற்சியில் மகாநாயக்கர்களும் ஈடுபட்டுள்ளதாக சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இரு தரப்பையும் இணைப்பதற்கு முன்னெடுக்கப்பட்ட பேச்சு வார்த்தைகள் யாவும் தோல்வியுற்றுள்ள நிலையில், மகாநாயக்கர்கள் இவ் விடயத்தில் ஆர்வம் காட்டி வருவதாக குறித்த செய்தியில் தெரிவிக்கப்ப ட்டுள்ளது.

மகிந்த அணியினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் மைத்திரி தரப்பால் நிராகரிக்கப்பட்ட நிலையில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தாம் தனி த்து போட்டியிடவுள்ளதாக மகிந்த தரப்பு குறிப்பிட்டிருந்தது. ஐ.தே.க.வுடன் கூட்டிணைந்துகொண்டு நடத்தப்படும் எவ்வித பேச்சுக்கும் தயாரில்லை என்றும் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

எனினும், இரு தரப்பின ருக்கும் இடையில் இரகசிய மான முறையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவ தாக தகவல்கள் கசிந் துள்ளன. குறிப்பாக, கொழு ம்பில் நேற்று முன்தினம் மகிந்த தரப்பில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்ும் மைத்திரி தரப்பில் அத்துரலிய ரத்ன தேரரும் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த கலந் துரையாடலில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் இரு தரப்பினருக்கும் தெளிவு படுத்தப்படவுள்ளதோடு, அதனைத் தொடர்ந்து அடுத்த கட்ட பேச்சுவார்த்தை இடம் பெறும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

யாரிடம் பேசுவது?
யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ...
என்பன போன்ற எண்ணங்களா?
எம்முடன் பேசுங்கள்.
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)

சேவைநலன் பாராட்டு
திரு. சொக்கலிங்கம் சுவசுதன்
(வருமான பரிசோதகர் தரம் II
நகராட்சி மன்றம், சாவகச்சேரி)



உள்ளூராட்சி மன்றத்தின் பணியே மகத்தான பணி என்று மக்கள் மனதினை வென்ற சேவகனே.
மனதார உண்மை வாழ்த்தும்
வடமாகாண வருமான பரிசோதகர் தொழிற்சங்கம்
(1639)

# Invitation for Bids (IFB)

**Department of Probation and Child Care Services, Northern Province**

**Procurement of Cleaning Services and Security Services**

1.The Chairman, Procurement Committee on behalf of Department of Probation and Child Care Services, Northern Province now invites sealed bids from eligible and qualified bidders for the items listed below.

| S.No | Bid Number | Item | Bid Security Amount |
|---|---|---|---|
| 01 | NPC/ 30/02/02/CS/2017 | Cleaning Services | 20,000 |
| 02 | NPC/ 30/02/02/SS/2017 | Security Services | 20,000 |

2.Bidding will be conducted through National Competetive Bidding Procedure.

3.To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the following requirements;

a. Bidders shall have valid business registration
b. and approval of the Ministry of Defense to provide security service
c. and shall have its registered office or branch in Northern Province

4.To qualify for award of the Contract, bidders shall meet the minimum qualifying ceiteria if given in Section 2- Bidding Data.

5.Interested bidders may obtain further information from Department of Probation & Child care Services- Northern Provincial Council, Meenachi Amman Road, Pannai, Jaffna and inspect the bidding documents at Department of Probation & Child Care Services from 09.00hrs to 15.00 hrs on working days.

6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Commissioner, Department of Probation & Child Care Services, NP from 12 December 2017 to 26th December 2017 from 09.00 hrs to 15.00 hrs. Upon payment of a non - refundable fee Rs.1,000.00. The method of payment will be cash.

7.Bids shall be delivered to Department of Probation & Child Care Services- Northern Provincial Council Meenachi Amman Road, Pannai, Jaffna on or before 10.00 AM on 27th December 2017. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.

8.All bids shall be accompanied by a Bid-Security of Rs. 20,000.

9.The Chairman reserves the right to accept or reject or partially accept any bid and to annual the bidding process and reject all bids at any time with out there by incurring any liability to the bidders.

**Mr.T.Viswarupan**
**Chairman-DPC, Department of Probation and Child Care Services- Northern Province,**
**Meenachi Amman Road,**
**Pannai, Jaffna,**
**Phone: 021 205 7102, Fax: 021 205 7103**

(C-649)

கல்யாணமாலை
சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 32 செவ் 1 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்
தொ.இ: B/8035

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 44 செவ் 7 இல்
தகைமை/தொழில்:A/L/ பிரான்ஸ் PR
தொ.இ: B/8037

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:MBBS/ வைத்தியர்
தொ.இ: B/8041

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 8 செவ் 2 இல்
உயரம்: 180cm
தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்
தொ.இ: B/8044

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Diploma/ லண்டன் PR
தொ.இ: G/8094

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: சூரிசெவ் 9 இல்
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/8096

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 39 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: BSc/ பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/3957

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 14 1/2
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: மருந்தாளர்
தொ.இ: G/3959

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# நீதிமன்ற அபராதங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சிப் பகுதியில் மதுபோதையில் பொலிஸாரின் சமிஞ்கையை மதிக்காது வாகனம் செலுத்தியவருக்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதியனுமதிப்பத்திரம் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தியதுடன், பொலிஸாரின் சைகையை மதிக் காத நபருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சிப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ,ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து ஏழாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதியனுமதிப்பத்திரத்தை ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சி பளைப்பகுதியில் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்தியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதியனுமதிப்பத்திரம் ஒருவார காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பளைப்பகுதியில் ஆபத்தான முறையில் வாகனம் செலுத்திச் சென்ற ஒருவரை கைது செய்து அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்த பளைப் பொலிஸார் குறித்த நபரை கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ,ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து மூவாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், சாரதியனுமதிப் பத்திரத்தை ஒரு வாரகாலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறும் உத்தர விட்டுள்ளார்.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

கிளிநொச்சியில் சாரதியனுமதிப்பத்திரமில்லாத ஒருவருக்கு மோட்டார்சைக்கிள் செலுத்தக்கொடுத்தவருக்கு ஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சிப்பகுதியில் சாரதியனுமதிப்பத்திரமில்லாத ஒருவருக்கு மோட்டார் சைக்கிளை செலுத்துவதற்கு கொடுத்த ஒருவரை கைதுசெய்து அவருக்கு எதிராக வழக்குப்பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்துஆறாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢➢

முல்லைத்தீவு வன்னிவிளாங்குளம் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் மீதும் மாங்குளம் சந்தியில் வைத்து பிறிதொரு இளைஞர் மீதும் தாக்குதல் நடத்திய ஆவா குழுவைச் சேர்ந்த மூவரையும் எதிர்வரும் 21ம்திகதி வரைக்கும் விளக்க மறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 8ஆம் திகதி இரவு 8.45 மணியளவில் மல்லாவிப் பகுதியில் இருந்து வாள் மற்றும் கொட்டன் ஆகியவற்றுடன் இலக்கத்தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இளைஞர்களால் பாலைப்பாணிச்சந்திக்கு அண்மித்த பகுதியில் ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து மாங்குளம் சந்திக்குச்சென்ற குறித்த குழுவினர் உணவகம் ஒன்றின் முன்பாக நின்ற இளைஞரை சரமாரியாகத் தாக்கி படுகாயப்படுத்திய நிலையில் குறித்த இளைஞர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலை அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தாக்குதல் நடத்திய குறித்த குழுவினர் மாங்குளம் பகுதியில் பொதுமக்கள் துரத்திச் சென்ற ஒருவரை மடக்கிப்பிடித்து அவர்கள் பயணித்த இலக்கத்தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளையும் மாங்குளம் பொலிஸாரிடம் கடந்த 8ஆம் திகதி ஒப்படைத்திருந்தனர்.

இதனையடுத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் மாங்குளம் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புபட்ட மேலும் இருவரை கைது செய்து மூவரையும் நேற்று முன்தினம் பிற்பகல் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியதையடுத்து மேற்படி மூவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் குறித்த மூவரும் இலக்கத்தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் வாள் மற்றும் உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களுடன் பயணித்து இருவர் மீது தாக்குதல் மேற்கொண்டிருப்பது தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டிருப்பதாகவும் தற்போது வடபகுதியில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட ஆவா குழுவைச் சேர்ந்தவர்களாவோ அல்லது போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களாகவோ இருக்கலாம் என பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-315)

# கிடைக்கப்பெற்றுள்ள வாய்ப்பை மக்கள் சரியாக பயன்படுத்த வேண்டும்

## வவுனியாவில் டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு



(வவுனியா)

கிடைக்கப்பெற்றுள்ள இந்த வாய்ப்பை எமது மக்கள் சாதகமாகப் பயன்படுத்தும் பட்சத்தில் அவர்களது வாழ்வில் நிச்சயம் நாம் மாற்றத்தைக் கொண்டுவருவோம் என ஈழ மக்கள்ஜனநாயக கட்சியின்செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தின் நான்கு உள்ளூராட்சி மன்ற கட்சியின் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் உள்ளூராட்சி சபைகளை நாம் வென்றெடுத்த பிரதேசங்களில் உட்கட்டுமானங்கள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளை செயற்படுத்திக் காட்டியுள்ளோம்.

எமது கட்சி ஒரே கொள்கை வழிநின்று மக்களுக்கான சேவைகளை முன்னெடுப்பதில் ஒருபோதும் தயங்கியது கிடையாது.

அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்து எமது மக்களின் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை காண்பதில் நாம் தொடர்ச்சியாக அயராது உழைத்து வருகின்றோம்.

அந்தவகையில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது அருமையான சந்தர்ப்பமாக எமது மக்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த அரிய வாய்ப்பை மக்கள் சரியாகப் பயன்படுத்தி பலத்தை தருவார்களேயானால் அதற்கூடாக இம்மாவட்டத்தில் பிரதேச சபைகளை வென்றெடுப்பதனூடாக கட்சியினூடான பணிகளையும் சேவைகளையும் முன்னெடுக்க நாம் தயாராக இருக்கின்றோம் அதற்கு கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிக்காக உழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன்போது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசுபதி சீவரத்தினம், கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாக செயலாளர் திலீபன் ஆகியோர் உடனிருந்தனர். (2)




# வடக்கு மகளிர் விவகார அமைச்சரினால் 10 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள்



(பரந்தன்)

கிளிநொச்சியில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனினால் மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனினால் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற பத்து மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குயின்சன், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்கள்எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312)


# வாழ்வாதார விவசாய உள்ளீடுகள் 100 குடும்பங்களுக்கு வழங்கி வைப்பு

(பூநகரி)

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் ஐக்கிய அமெரிக்க மக்களின் நிதியுதவியுடன் வாழ்வாதார விவசாய உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் பூநகரி செம்மன்குன்று, தெளிகரை, பள்ளிக்குடா ஆகிய இடங்களில் மீள்குடியேறிய சுமார் 100 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான உள்ளீடுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலாளர் சி.ச. கிருஸ்ணேந்திரன், நிறுவன இணைப்பாளர் ந.சுகிர்தராஜ், கிராம அலுவலர் ம.இராசகோபால் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-84)

# ஒட்டுசுட்டானில் பேருந்து தரிப்பிடம் அமைக்குமாறு மக்கள் கோருகின்றனர்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஒட்டுசுட்டான் பகுதியில் ஒட்டுசுட்டான்.முல்லைத்தீவு மற்றும் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு வீதிகள் ஒன்றிணையும் பகுதியில் பேருந்து தரிப்பிடம் ஒன்றை அமைத்து தருமாறு மக்கள் கோருகின்றனர்

குறித்த பகுதியில் எந்தவொரு பேருந்து தரிப்பிடமும் இல்லாத நிலையில் மழை நேரங்களில் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மழை நேரத்தில் பேருந்து தரிப்பிடம் இல்லாததால் அருகிலுள்ள உணவகத்துக்குள் தரித்து நிற்க வேண்டிய நிலை ஏற்படுவதோடு சிறுவர்கள், முதியோர்கள், கைக்குழந்தையுடன் வரும் தாய்மார் என பலரும் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

எனவே பயணிகளது நன்மை கருதியும் பயணிகளால் உணவக உரிமையாளருக்கு ஏற்படும் இடையூறுகளை கருத்தில் கொண்டும் உடனடியாக குறித்த பகுதியில் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோருகின்றனர். (2-281)

# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(முல்லைத்தீவு)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் காணாமலாக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 91 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த கால யுத்த நிலைமைகளின் போது தாய், தந்தை, சகோதரர்கள் காணாமலாக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலும் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த மிகவும் பொருளாதார ரீதியாக பின்தங்கிய குடும்பங்களிலுள்ள பாடசாலை மாணவர்கள் 91 பேருக்கே கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து அப்பியாசக் கொப்பிகள் மற்றும் கணித உபகரணப்பெட்டிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வில் வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்கள் கலந்து கொண்டு பொருட்களை வழங்கினர். (2)

# தண்ணீர் முறிப்பு நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான விடுதிக்காணி படையினர் வசம்

## குளத்தை பராமரிப்பதற்கு பாரிய இடர்பாடு

(கண்டாவளை)

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்பு குளத்தின் பகுதியில் இராணுவத்தினர் வசமுள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான விடுதிக் காணியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு தண்ணீர் முறிப்புக்குளத்திற்குட்பட்ட நீர்ப்பாசனத் திணைக்கள விடுதிக்குச்சொந்தமான காணியை படையினர் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர்.

இதனால் நீர்ப்பாசனத் திணைக்கள விடுதி அமைக்கப்படாத நிலை காணப்படுகின்றது. குளத்தை பராமரிக்க வேண்டிய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் செயற்பாடுகளில் பாரிய இடர்பாடுகள் காணப்படுகின்றன.

அத்துடன், இப்பகுதியில் படையினர் நிலை கொண்டிருப்பதுடன், குளத்தின் அணைக்கட்டுப்பகுதியில் காவலரண்களை அமைத்தும் குளத்தைப் பராமரிக்கின்ற ஊழியர்கள் மீதும் இக்குளத்தின் கீழ் மீன்பிடியை மேற்கொண்டு வரும் தமிழ் முஸ்லிம் மீனவர்கள் மீதும் படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்த இப்பகுதி மக்கள் இப்பகுதியிலுள்ள இராணுவ முகாமை வேறு இடத்திற்கு மாற்றி குளத்திற்கு அருகில் உள்ள நீர்ப்பாசனக்காணியை விடுவிக்குமாறு பல்வேறு தரப்புக்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (2-315)

# சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு



(பரந்தன்)

சர்வதேச மனித உரிமைகள் தினம் நேற்று கிளிநொச்சியிலும் அனுஷ்டிக்கப்பட்டது. கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் குறித்த நிகழ்வு முற்பகல்10 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது கிளிநொச்சி மாவட்டத்தில் மனித உரிமை செயற்பாட்டில் ஈடுபட்டு படுகொலை செய்யப்பட்ட அருட்தந்தை கிளி அடிகளார் மற்றும் துணுக்காய் பிரதேச செயலாளர் ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு ஈகச் சுடர் ஏற்றப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் செயலாளர் தி.சிவரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வணக்க உரையுரையை தென்னிந்திய திருச்சபையினுடைய பங்குத்தந்தை எஸ். ஜெ. துரைரட்ணம் ஆற்றினார்.

தொடர்ந்து அமரர் நாகலிங்கம் நந்தகுமார் தொடர்பான நினைவுரையை யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரைவுரையாளர் கே. ரதிதரன் நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் அமரர் நாகலிங்கம் நந்தகுமாரின் துணைவியார் அவரது மகள் மற்றும் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு உரைகள் இடம்பெற்றன. அருட்தந்தை மனித உரிமை செயற்பாடுகள் தொடர்பில் கருத்து தெரிவித்தார். இதே வேளை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான நிமலராஜன் உள்ளிட்டோரையும் அவர் நினைவு கூர்ந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து உலகத் தமிழ் பேரவையின் உறுப்பினர் சச்சிதானந்தம் கருத்து தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசம் மௌனமாகவே இருந்ததாகவும், அவர்கள் எவ்வித அழுத்தங்களையும் கொடுக்கவில்லை எனவும் கருத்து தெரிவித்திருந்தார்.(2-312-315)

# மூவின இளைஞர்,யுவதிகள் பங்கேற்ற புதிய அரசியல் அமைப்பு கருத்தாடல்



(குருமன்காடு)

அன்புக்கும் நட்புக்குமான இளைஞர் வலையமைப்பின் ஏற்பாட்டில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தை சேர்ந்த மூவின இளைஞர்களை ஒன்றிணைத்து மனித உரிமைகள் மற்றும் புதிய அரசியல் அமைப்பு தொடர்பான கருத்தாடல் நிகழ்வு வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது.

மனித உரிமைகள் தினமான நேற்று அன்புக்கும் நட்புக்குமான அமைப்பின் தலைவர் ரவீந்திர டி சில்வா தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கலந்து கொண்டதுடன், மனித உரிமைகள் மற்றும் புதிய அரசியல் அமைப்பு தொடர்பாக கருத்துரை வழங்கியதுடன் இளைஞர், யுவதிகளினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் பதில் வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக, இளைஞர், யுவதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)




# ‘பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம்’

## உலக மனிதவுரிமைகள் தினத்தில் முல்லையில் கருத்தரங்கு



(பனிக்கன்குளம்)

உலக மனித உரிமைகள் தினமான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்களுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்குவோம் என்னும் தொனிப்பொருளில் யாழ். சமூக மேம்பாட்டு மையத்தினால் கருத்தரங்கு ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாடு கார்த்திகை 25 தொடக்கம் மார்கழி 10 வரை நடைபெற்றுள்ளது. உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அடையாளம் காணப்படுவதோடு பெண்களுக்கான சுதந்திரமான வன்முறையற்ற சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கோடு பல் வேறுபட்ட செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் பிரதம விருந்தினராக மேற்கு ஆபிரிக்க நாடுகளின் ஐக்கிய நாடுகள் பிராந்திய அலுவலகத்தின் முகாமைத்துவ நிபுணர் வி.பிரதீபன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற சட்டத்தரணி சுபா விதுரன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் வன்முறைகள் என்பவற்றை கட்டுப்படுத்த எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கருத்தாளர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (2-281)

## மனித உரிமைகள் தினத்தில்

# காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் கவனயீர்ப்பு போராட்டம்



(குருமன்காடு)

மனித உரிமைகள் தின் மான நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

290 ஆவது நாளாக வவுனியா தபால் நிலை யத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மதியம் இக் கவனயீர்ப்பு போராட் டத்தில் ஈடுபட்டதுடன் தமது பிள்ளைகளை காணாது தாம் தவித்து வரும் நிலையில் இதுதானா இலங்கையின் மனித உரிமை என கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதேவேளை தமது பிள்ளைகளுக்கான முடிவு கிடைக்கும் வரையில் தமது போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். (2-250)

# கஞ்சா சிறுபொதிகளுடன் இளைஞன் கைதானான்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள குழுமாட்டுச்சந்தி கள்ளுத் தவறணைக்கு அருகாமையில் வைத்து கேரளக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவரை 50 கிராம் கேரளாக் கஞ்சாவுடன் கைது செய்துள்ளதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

குழுமாட்டுச்சந்தி, காத்தான்கோட்டம் , தாஸ் கோட்டம் , ஊர்மிளா கோட்டம் , கூமாங்குளம் ஆகிய கிராம பகுதிகளில் கேரளக் கஞ்சா விற்பனை தொடர்ச்சியாக நடைபெறுவதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தின் 024 -324 2467என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்து புலன் விசாரணைகளில் ஈடுபட்டிருந்த நெளுக்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம். எஸ். அத்தநாயக்க தலைமையில் பொலிஸ் சார்ஜனட். பொலிஸ் கொஸ்தாபல்கள் ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரே குழுமாட்டுச் சந்தி கள்ளுத் தவறணைக்கு அருகாமையில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காத்தான் கோட்டம் பகுதியை சேர்ந்த 32 வயதுடைய இளைஞர் ஒருவரை கேரளக் கஞ்சாவுடன் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து 10, கிராம் வீதம் 5 சிறு பொதிகளிலிடப்பட்டிருந்த 50 கிராம் கேரளக் கஞ்சாவை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்பதுடன் கைதான சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் பொலிஸ் பிணையில் சந்தேக நபர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் மீண்டும் நீதிமன்றத்தின் நடவடிக்கைகளுக்காக வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளதாக நெளுக்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# கசிப்பு வைத்திருந்தவர்கள் கைது நாளைமறுதினம் நீதிமன்றில் ஆஜர்

(மல்லாவி)

மல்லாவி பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள பாண்டியன் குளம் கிராமத்தில் சட்ட விரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட கசிப்பை தமது உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர்கள் இரண்டு, பேரைக் கைது செய்துள்ளதாக மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ஜ. பி. இராஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.


மல்லாவி பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட பாண்டியன் குளம் பொலிஸ் சோதனைச் சாவடி பொலிஸார் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது, சந்தேகத்திற் கிடமான வகையில் காணப்பட்ட இரண்டு சந்தேக நபர்களை சோதனையிட்ட போது அவர்கள் தமது உடைமையில் மறைத்து வைத்திருந்த 1500 மில்லி லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதனை வைத்திருந்த நபர்களும் கைது செய்யப்பட்டு மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடை பெற்று முடிந்த நிலையில் அவர்கள் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் நாளை மறுதினம் புதன் கிழமை தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்த வுள்ளதாகவும் மல்லாவி பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி ஜ. பி . இராஜநாயக்க தெரிவித்துள்ளார். (2-15)



மல்லாவி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வரும் ஆலங்குளம் கிராம அலுவலர் பிரிவிற்குப் பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தர் ஆர். தர்சன் தனது நிதியில் இருந்து மு/ஆலங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வு பாடசாலை அதிபர் ரீ. லோகேஸ்வரன் தலைமையில் கடந்த 8 ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. (படம் : மல்லாவி செய்தியாளர்)



யாழ்ப்பாணம் இன்னர் வீல் கழகம் மற்றும் கொழும்பு நகர் மையத்தின் ஏற்பாட்டில் போதை மற்றும் புகைத்தலுக்கு எதிராக விழிப்புணர்வு நடைபவனி நேற்று யாழில் நடைபெற்றது. "போதை இல்லை என்று சொல்வோம்" என்ற தலைப்பில் யாழ்.முற்றவெளி பகுதியில் ஆரம்பமாகிய நடைபவனி யாழ்.வீரசிங்கம் மண்டபத்தை வந்தடைந்தது.அங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன், இன்னர்வீல் மாவட்டம் 3220 இன் தலைவர் திருமதி விஜயலக்ஷ்மி கேதீஸ்வர் உட்பட பொலிஸார், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-சோபிகா)

# மாணவர்கள் மீது அரசு அக்கறை

## அகிலதாஸ் சுட்டிக்காட்டு



(கரணவாய்)

இலவச கல்வியை வழங்கிய இலங்கை அரசு இன்று இலவச காப்புறுதித் திட்டத்தினையும் மாணவர்களுக்கு வழங்கியிருப்பது மாணவர்கள் மீது நல்லாட்சி அரசு கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதாக சுதந்திர கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளரும் வட மாகாணசபை உறுப்பினருமான சி.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாணவர்களுக்கான சுரக்ஷா காப்புறுதித் திட்டத்தினை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் கல்வி அமைச்சு மாணவர்களின் நன்மை கருதி அவர்கள் கல்வி பயிலும் காலம் முழுவதும் அவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கு சுரக்ஷா எனும் காப்புறுதி திட்டத்தினை நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கியிருக்கின்றது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் கல்வி அமைச்சும் இணைந்து இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துள்ளது. இதன் நன்மை என்னவெனில் மாணவர்கள் கல்வி கற்றும் காலப்பகுதி முழுவதும் அவர்கள் எதிர்கொள்கின்ற மருத்துவதேவைகளையும் மற்றும் ஏனைய அனுகூலங்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. விபத்தின் போது ஒரு மாணவன் அங்கங்களை இழக்க நேர்ந்தாலோ மரணமடைந்தாலோ அவருக்கான காப்புறுதி விசேடமாக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் உள்ள பாடசாலை மாணவர்கள் இந்த சுரக்ஷா காப்புறுதித் திட்டத்திற்குள் உள்வாங்கப்படுகின்றார்கள். இந்த ஆரம்ப நிகழ்வில் கல்வி பயின்ற நெல்லியடி மத்திய கல்லூரியில் பிரதம விருந்தினராக வருகை தந்திருப்பதையிட்டு நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். தற்போது கல்வி கற்கின்ற மாணவர்கள் மட்டுமல்ல எதிர்வரும் ஆண்டு ஆரம்பப் பிரிவில் இணையவுள்ள மாணவர்களும் இந்த காப்புறுதித் திட்டத்தில் உள்வாங்கப்படுவார்கள். இந்த காப்புறுதி தொடர்பில் மாணவர்களின் பெற்றோர் ஆகிய நீங்களும் அக்கறையுடன் செயற்பட்டு அது தொடர்பில் பாடசாலை அதிபர் மற்றும் ஆசியர்களுடன் கலந்துரையாடி உங்களது பிள்ளைகளுக்கு இந்த காப்புறுதியினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் ஜி.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-60)

# யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் மாணவர் ஒன்றுகூடலும் கௌரவிப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை தரம் 5 மாணவர்களின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு விழாவும்-2017 இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நீராவியடியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் டாக்டர் த.பிரபாகரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராசா, கௌரவ விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முதல்வர் நா.மகேந்திரராசா ஆகியோர் கலந்து கொள்வர். (இ)



இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்.கிளையின் தலைவர் பாலகிருஷ்ணன், உறுப்பினர் எம்.எல்.லாபிர், சுகாதார பரிசோதகர் விஜயபாலா ஆகியோர் யாழ். ஒஸ்மானியா கல்லூரிக்கு மீலாத் விழாவை முன்னிட்டு கழிவுகள் சேகரிக்கும் பிளாஸ்ரிக் கொள்கலன்களை கல்லூரி அதிபர் பிரதி அதிபரிடம் கடந்த வெள்ளிக் கிழமை வழங்கினார். (படம்:பாசையூர் செய்தியாளர்)

# வல்லரசு நாடுகளின் குப்பைக் கூடையாக இலங்கை மாற்றம்

## கலாநிதி ஜெய்சங்கர் விசனம்

(கொழும்பு)

வல்லரசு நாடுகளின் குப்பைக் கூடையாக இலங்கை மாறியுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி சி.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன் தினம் சனிக்கிழமை நடைபெற்ற சிறுகதைத்தொகுதி வெளியீட்டு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"வேறு சமூகங்களின் உற்பத்திப் பொருட்களை குரோதம் காரணமாக கொள்வனவு செய்யக்கூடாது என்று கூறி சர்வதேச உற்பத்தி நிறுவனங்களுக்கு வாய்ப்பளித்து விட்டு மௌனமாக இருந்து விடுகின்றோம். இலங்கை சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கையிலுள்ள எந்தச் சமூகமும் இலாபமடையவில்லை.

இலங்கை இப்பொழுது சர்வதேச வல்லரசு நாடுகளின் குப்பைக் கூடையாக மாறியுள்ளது. இதனைத்தான் நாம் இனவாதத்தால், மதவாதத்தால் சாதித்திருக்கின்றோம்.



இலங்கையைப் போல சிங்கப்பூரை ஆக்குவேன் என்ற அந்நாட்டு ஜனாதிபதி அதனை உலகம் வியக்கும் உயர்தரமான நாடாக மாற்றி விட்டார். ஆனால் நாம் இருந்த இலங்கையையும் இழந்து விட்டு இன்னமும் அழிவுக்கான பாதைகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்தி வருகின்றோம்.

எல்லாச் சமூகங்களும் படுதோல்வியையும் பயங்கரமான ஒரு வாழ்க்கை நிலைமையையும்தான் கட்டிவளர்த்திருக்கின்றோம்.

இத்தகையதொரு சூழ்நிலையில் எமது சிந்தனை, பேச்சு, எழுத்து, செயற்பாடு என்பவை இன, மத, சாதி, மொழி பிரதேச பேதம் கடந்து மனிதம் பேணுகின்ற ஒரு மனிதர்களாக எதையாவது செய்வதற்கு உதவ வேண்டும்.

உள்ளூரில் கிராமங்களில் மத நல்லிணக்கத்தைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கும் மதத் தலைவர்கள் என்று தம்மைக் கூறிக் கொள்வோர் தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் கைகளைக் கோர்த்துக் கொண்டு அரசியல் நடத்துகின்ற ஐக்கிய மத அனுஷ்டானங்களில் ஈடுபடுகின்றனர் எனவும் விமர்சித்தார். (இ-7)

# மகாகவி பாரதியாரின் பிறந்ததின நிகழ்வுகள்



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்தியத்துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் பிறந்ததின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (இ-7)

# இலங்கையில் கறுப்பு மழை

## மக்கள் அச்சம்

(கொழும்பு)

மொனராகலை மாவட்டம் சியபலாண்டுவ பிரதேசத்தில் பெய்த கறுப்பு மழை காரணமாக அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

நேற்று முன் தினம் சனிக்கிழமை கறுப்பு நிறத்தில் மழை பொழிந்ததை அவதானித்த மக்கள், அச்சமடைந்து அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, அப்பிரதேசத்திற்கு விரைந்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அதிகாரிகள் மற்றும் அதன் பணிப்பாளர் மழையின் மாதிரிகளை சேகரித்துள்ளனர்.

இந்நிலையில், நிறம் மாறியதற்கான காரணத்தை கண்டறிய குறித்த மழைநீர் ஆய்வுக்குட்படுத்தவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார். (இ-7)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 19.12.2017-28.03.2020



பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க பெரிதும் ஆர்வம் காட்டும் கடக இராசி நேயர்களே!

சந்திக்கும் நண்பர்களை எல்லாம் சிந்திக்க வைக்கும் விதத்தில் பழகும் உங்களுக்கு இதுவரை 5ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது 6ஆம் இடத்திற்கு வருகின்றார்.

உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். ஜாதகத்தில் 6, 8, 12 ஆகிய மூன்று இடங்களும் மறைவிடங்களாகக் கருதப்படுபவை. அந்த மறைவிடங்களுக்கு அதிபதி மறைவிடத்திலேயே சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்களைக் கொடுக்கும் என்பார்கள்.

ஆறாமிடம் என்பது எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் கொடுக்கும் இடமாகும். அந்த இடத்தில் சனி பகவான் சஞ்சரிக்கும் பொழுது மறைமுக எதிர்ப்புகள் மாறும். பகை பாராட்டிய உறவினர்கள் பாசம் காட்ட முன்வருவர். நகை, தோட்டம் என்று வாங்கிச் சேர்ப்பீர்கள்.

உடல் ஆரோக்கியத் தொல்லை அகலும். சஞ்சரிக்கும் சனியால் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டாலும் அஷ்டமாதிபதியாகி 6ஆம் இடத்தில் இருப்பதால் எளிதில் குணமாகிவிடும். ரத்த அழுத்தம், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்பட்டவர்கள் ஆரம்பத்திலேயே மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்வது நல்லது.

உத்தியோகத்தில் சிறப்பான முன்னேற்றம் கிடைக்கும். பலமுறை நேர்முகத் தேர்வுக்குச் சென்றும் பலன் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைப்பதற்கான நல்ல தகவல் வந்து சேரும். அலுவலகங்களில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வாகனம் வாங்க, வீடுகட்ட எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். உத்தியோகத்தில் நீண்ட நாட்களாக வராமலிருந்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் வரலாம். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே, இருக்கும் வேலையிலும் தொல்லைகள் அதிகரிக்கிறதே, விருப்ப ஓய்வில் வெளிவரவும் முடியவில்லையே என்றெல்லாம் கவலைப்பட்டவர்களுக்கும், பணி நிரந்தரம் பற்றிய தகவல் பரிசீலனையில் இருப்பவர்களுக்கும் காரியங்களுக்கு பொருளுதவி செய்வீர்கள். முன்னோர்கள் கட்டி வைத்த கோவிலைப் பராமரித்து புதுப்பிக்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

தோட்டம் வாங்கி பயிரிட்டு வரவைப் பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு ஒருசிலருக்கு உண்டு. சுயஜாதகத்தில் செவ்வாய் பலம்பெற்றிருந்தால் பூமி யோகம் கிட்டும். தொழில் நிலையம் நடத்துபவர்கள் வாடகை வீட்டை விலைக்கு வாங்கும் யோகம் உருவாகும். அலுவலகம், கடை போன்றவைகளை சொந்த இடத்தில் வைத்துக் கொள்ள ஆசைப்படுவர். புதிய வாகனங்கள் வாங்கி பயணிக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டவர்கள் இப்பொழுது புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு கைகூடிவரலாம்.

### குதூகலம் தரும் குருப்பெயர்ச்சிக் காலம்!

4.10.2018இல் விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகின்றார். அதன்பிறகு 28.10.2019இல் தனுசு இராசிக்கு குரு செல்கின்றார்.

விருச்சிக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது உங்கள் இராசியில் அவரது பார்வை பதிகின்றது. அது மட்டுமல்ல 9, 11 ஆகிய இடங்களிலும் அவரது பார்வை பதிகின்றது.



சனிப்பெயர்ச்சி சந்தோஷங்களை வழங்கும் பெயர்ச்சியாகவே இருக்கிறது. குடும்ப வருமானமும் கூடுதலாகவே கிடைக்கும். குடியிருக்கும் வீட்டை விலைக்கு வாங்கும் யோகமும் ஒருசிலருக்கு உண்டு. திருமணம் கைகூடும். பரிகாரங்கள் செய்வதன் மூலம் குழந்தை பாக்கியம் கிட்டும். புகுந்த வீட்டில் மதிப்பும், மரியாதையும் உயரும். சேமிப்புகளால் கணிசமான தொகை உங்கள் கைகளில் புரளும். கணவன்-மனைவிக்குள்

# ஆறாமிடத்தில் சனி ஆதரவு கூடும் இனி!

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது எட்டுக்கு அதிபதியான சனி பகவான் இப்பொழுது 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே அற்புதமான பலன்களை அள்ளி வழங்கப்போகின்றார். பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். கனவுகள் நனவாகும் நேரமிது. தொழில் வளர்ச்சியில் தொல்லை தந்தவர்கள் விலகுவர். உத்தியோகத்தில் உங்களுக்கு இனி நல்ல வாய்ப்புகள் வந்து சேரப் போகின்றன.

இதுபோன்ற நேரங்களில் சனி பகவான் மேலும் நன்மைகளைச் செய்ய ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதம்இருந்து சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. ஆதியந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் நீங்கள் ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும். தேனி அருகில் உள்ள குச்சானூர் சனி பகவான் ஆலயத்திற்குச் சென்று ஈஸ்வரனின் அருளைப் பெற்று வருவது நல்லது.

### அதிர்ஷ்டம் தருமா ஆறாமிடத்துச் சனி?

மிகப்பெரிய கிரகமான சனி பகவான் உங்கள் இராசிக்கு 8, 9ஆம் இடங்களுக்கு அதிபதியாவார். 8ஆம் இடம் என்பது இழப்புகள், விரயங்களைக் கொடுக்கும் இடமாகும். 9ஆம் இடம் என்பது பிதுர்ரார்ஜித ஸ்தானமாகும். அந்த இரண்டு இடங்களுக்கும் அதிபதியாக விளங்கும் சனிபகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது 'கெட்டவன் கெட்டிடின் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப ராஜயோகத்தை வழங்குவார்.

ஆறிலே சனிதான் வந்து
ஆட்சியை நடத்தும் நேரம்
பாரிலே புகழைப் பெற்றோர்
பலருமே பழக்கம் ஆவார்!
ஆர்வமாய் சனியைத்தொழுதால்
ஆதாயம் நமக்குச் சேரும்!
போராடும் உள்ளம்மாறிப்
பொருள் வளம் அதிகரிக்கும்!
என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

ளுக்கும், இக்காலத்தில் எதிர்பார்ப்புகள் நடைபெறும்.

### மந்தன் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்!


சனி பகவான் 6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அதன் பார்வை 3, 8, 12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எந்த கிரகங்களுக்கும் பார்வை பலன் உண்டு. அதே நேரத்தில் சனியின் பார்வைக்கும், குருவின் பார்வைக்கும் பலன் அதிகம். நமக்கு யோகம் தரும் கிரகமாக இருந்து பார்த்தால் நல்ல பலன் அதிகம் கிடைக்கும். நமக்கு தோஷம் தரும் கிரகமாக இருந்து பார்த்தால் பொருளாதாரப் பற்றாக்குறையும், மன நிம்மதியிழப்பும் உருவாகும். அந்த அடிப்படையில் சனி 3ஆம் இடத்தைப் பார்ப்பதால் சகோதர வர்க்கத்தினருக்குள் இருந்த சச்சரவுகள் அகலும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். சகோதரிகளுக்கு காலாகாலத்தில் கல்யாணம் நடைபெறவில்லையே என்ற கவலை இனி அகலும்.

சனியின் பார்வை 8ஆம் இடத்தில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தி ஆரோக்கியத்தைச் சீராக்கிக் கொள்ளுங்கள். ஏதேனும் சிறு தொல்லைகள் வந்தால் மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. இந்த நேரத்தில் விபரீத ராஜயோகம் செயல்படுவதால் மூடிக்கிடந்த தொழிலுக்கு இனி திறப்பு விழா நடத்துவீர்கள். முக்கிய நபர்களின் ஒத்துழைப்போடு கடன் சுமையை குறைத்துக் கொள்வீர்கள். நீண்டதூரப் பயணங்கள் செல்லப்போட்ட திட்டம் நிறைவேறும். உடன்பணிபுரிபவர்கள் எல்லாம் அமெரிக்கா, லண்டன் என்று சென்று கொண்டிருக்கிறார்களே, நம்மை மட்டும் ஏன் இன்னும் அனுப்பவில்லை என்று கேள்விக்கணை தொடுத்தவர்கள் இப்பொழுது சந்தோஷத்தோடு வெளிநாடு செல்லும் வாய்ப்பு கைகூடப்போகின்றது.

சனியின் பார்வை 12ஆம் இடத்தில் பதிவதால் திடீர் திடீரெனப் பயணங்கள் உருவாகும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரும். புண்ணிய

எனவே உடல் ஆரோக்கியம் சீராகும். உள்ளத்தில் உற்சாகமும், தெம்பும் கொடிகட்டிப் பறக்கும். பொருளாதார நிலையில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்படும். பெற்றோர் வழி ஆதரவு கிடைக்கும். தொழிலில் கூடுதல் லாபம் கிடைக்கும். பணி ஓய்விற்குப் பிறகும் மீண்டும் பணிபுரிய வாய்ப்புக் கூடிவரும்.

தனுசு இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது, இல்லத்தில் சுபகாரிய நிகழ்வுகள் கைகூடும். கல்யாண மாலை சூடும் வாய்ப்பும், வீடு, இடம், வாங்கும் யோகமும், வெளிநாடு செல்லும் யோகமும் உருவாகலாம். புதிய தொழில் தொடங்கும் முயற்சி கை கூடும். தொழிலில், பங்குதாரர்களை விலக்கி விட்டுத் தனித்து இயங்கும் வாய்ப்பும் உருவாகலாம்.




### இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!

13.2.2019இல் மிதுன இராசியில் இராகுவும், தனுசு இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். 12ஆம் இடத்தில் ராகு சஞ்சரிக்கப் போவது யோகம் தான். பயணங்களால் பலன் கிடைக்கும். பணிகளிலிருந்த தொய்வு நிலை அகலும். மறைந்த இராகுவால் நிறைந்த தனலாபம் உண்டு. புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

கேது பலத்தால் உத்தியோக மாற்றங்கள் உறுதியாகலாம். அரசு வேலை கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அழகான வீடுகட்டிக் குடியேறும் யோகம் உருவாகும்.

### பெண்களுக்கான மகத்தான பலன்கள்!

கடக இராசியில் பிறந்த பெண்களுக்கு

அன்பும், பாசமும் கூடும். தாய்வழி ஒத்துழைப்பு உண்டு. சனிப் பெயர்ச்சியின் தொடக்கத்தில் ஜென்ம இராகு, 9இல் கேது இருப்பதால் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்தால் நினைத்தது நிறை வேறும்.

### தொட்ட காரியங்களில் வெற்றி பெற வழிபாடு!

வெள்ளிக்கிழமை தோறும் சிவாலயத்திற்கு சென்று விநாயகப் பெருமானையும், சனிக்கிழமை தோறும் அனுமனையும் வழிபட்டு வாருங்கள். ஆதியந்த பிரபு வழிபாடும் உங்களுக்கு அனுகூலம் தரும். சிறப்பு வழிபாடாக சிவகங்கை மாவட்டம் கீழச்சிவல்பட்டி அருகிலுள்ள இரணியூரில் வீற்றிருந்து அருள் வழங்கும் ஆட்கொண்டநாதர் சிவபுரந்தேவியை வழிபட்டு அனைத்து யோகங்களையும் வரவழைத்துக் கொள்ளுங்கள்.

### சனியின் வக்ர காலம்!

25.04.2018 முதல் 21.8.2018 வரை மூல நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார். 8.5.2019 முதல் 3.9.2019 வரை மீண்டும் பூராட நட்சத்திரக் காலில் சனி வக்ரம் பெறுகின்றார்.

இதுபோன்ற வக்ர காலங்களில் உங்களுக்கு வளர்ச்சி கூடுதலாகவே இருக்கும். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவதால் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். அதே நேரத்தில் 7இற்கு அதிபதியாகவும் சனி இருப்பதால் வாழ்க்கைத் துணை வழியே பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மறுப்பர்.

பிள்ளைகளாலும், பிரச்சினைகள் வரலாம். மாமன், மைத்துனர் [illegible] மனக்கசப்பு ஏற்படும். [illegible] விற்கும் சூழ்[illegible] வீர்கள். மகிழ்ச்சி [illegible] மற்றவர்களை அனு[illegible] நல்லது.

([illegible])

ஜோதிடக் கலாமணி
- சிவல்புரி சி[illegible]




# பொலிஸ் நடுவுநிலை தவறினால் நீதிமன்றத்தில் முறையிடுவோம்

## தினகரன் தெரிவிப்பு



(சென்னை)

ஆர்.கே.நகரில் பொலிஸ் துறையினர் நடுவுநிலையுடன் இல்லாவிட்டால் நீதிமன்றில் முறையிடுவோம் என்று டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

கொருக்குப்பேட்டையில் டி.டி.வி. தினகரன் நேற்று நிருபர்களிடம் தெரிவிக்கையில்,

ஆர்.கே.நகர் தொகுதியில் நாங்கள் தேர்தல் பிரசாரம் ஆரம்பித்த 2 நாட்களிலேயே தேர்தல் நிறுத்தப்படும் என்று பா.ஜனதா சொல்வதில் இருந்து அவர்களது வேட்பாளர் டெபாசிட் கூட வாங்க மாட்டார் என்பதை உணர்ந்து கொண்டோம். பா.ஜனதாவுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. அதன் காரணமாகவே தேர்தலை இரத்து செய்ய பா.ஜனதா கட்சியினர் கோருகிறார்கள்.

அவர்களால் விரும்பப்படாத நான் வெற்றிபெற்று விடுவேன் என்பதாலும் இவ் வாறு சொல்லி வருகிறார்கள். தயவு செய்து அவர்கள் மக்களின் மனநிலையை உணர்ந்து பேச வேண்டும்.

ஆர்.கே.நகர் தொகுதி மக்கள் அம்மாவின் அரசாங்கம் மீண்டும் வரவேண்டும் என்பதற்காக இந்த தேர்தலிலே குக்கர் சின்னத்தில் வாக்களிக்க தயாராகி விட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

தேர்தல் அதிகாரி பிரவீன் நாயர் நேர்மையான முறையில் தேர்தலை நடத்துவார் என்று நம்புகிறேன். ஆர்.கே.நகரில் பொலிஸ் துறையினர் நடுநிலையுடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நீதிமன்றில் முறையிடுவோம் எனத் தெரிவித்தார். (இ-7)

# காணாமல் போனவர்களை ஆழ்க... வலியுறுத்தி மீனவர்கள் தொடர் ...



காணாமல் போன மீனவர்களை ஆழ்கடல் பகுதியில் தேடுமாறு வலியுறுத்தி மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கன்னியாகுமரியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரண்டாவது நாளாகவும் மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுப...

கடற்பன... தேடுதலை ... இறங்கி தேடு... டும் எனவும் ... பெண்கள்-க... மேற்கொண்...

அத்துடன... வரை போரா... ஆழ்கடலில் ... யாயின் கடற்... விக்காதமை... எழுப்பி, மீன... டுத்துள்ளனர்...

ஒகி புயல... போயுள்ள மீ... மீனவர்கள் ெ... குறிப்பிடத்தக்...

# ஜெருசலேம் விவகாரத்தில் அமெரிக்கா எடுத்துள்ள முடிவை ஏற்கமுடியாது

## ஐ.நா.பாதுகாப்புச் சபை நிராகரிப்பு

(நியூயோர்க்)

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்கா எடுத்துள்ள முடிவை ஏற்கமுடியாது என்று தெரிவித்துள்ள ஐ.நா பாதுகாப்புச்சபை அம்முடிவை நிராகரிப்பதாக அறிவித்துள்ளது.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்துள்ள அமெரிக்கா உலக அளவிலான எதிர்ப்பை சம்பாதித்துள்ளது. ஒட்டு மொத்த அரபு நாடுகள் மட்டுமல்லாது ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளும் எதிர்ப்பைப்பதிவு செய்துள்ளன. இது தொடர்பாக விவாதிப்பதற்காக ஐ.நா பாதுகாப்புச்சபையின் அவசரக்கூட்டம் கடந்த வெள்ளிகிழமை நடைபெற்றது.

15 நாடுகள் உறுப்பினர்களாகவுள்ள இந்த சபையில் அமெரிக்காவின் முடிவுக்கு எதிராக 14 நாடுகள் வாக்களித்தன. ஜெருசலேம் தொடர்பான தீர்மானங்கள் இதற்கு முன்னர் பாதுகாப்புச்சபையில் நிறைவேறியுள்ள நிலையில், அமெரிக்காவின் அறிவிப்பு அதற்கு விரோதமாக உள்ளதாக அந்த நாடுகள் விமர்சித்தன.

"கிழக்கு ஜெருசலேமானது பாலஸ்தீனின் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதி. ஒருங்கிணைந்த ஜெருசலேம் நகரம் இஸ்ரேல் - பாலஸ்தீனின் கூட்டுத் தலைநகராக இருக்க வேண்டும்" என்பதே எங்கள் நிலைப்பாடு என்று ஐ.நாவுக்கான பிரிட்டன் தூதர் மாத்யூ ரைக்ராப்ட் கூறினார்.

ஜெருசலேமில் இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதரகத்தை அமைக்கவும் அந்த நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரிக்கவும் எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவானது பல கவலைகளையும் கேள்விகளையும் எழுப்பும் என்று தெரிந்துதான் மிகுந்த யோசனைக்குப் பிறகு இந்த முடிவை அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார் என அந்நாட்டு தூதர் நிக்கி ஹாலே தெரிவித்தார்.

அந்தப் பிராந்தியத்தில் அமைதி நிலவ இந்த அறிவிப்பு உதவும். அனைத்துத் தரப்பினரும் ஒருவருக்கொருவர் நேர்மையுடன் நடந்து கொண்டால்தான் அமைதிக்கான முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் காண முடியும். தற்போதைய உண்மை நிலவரத்தின் அடிப்படையில் அமெரிக்காவின் அறிவிப்பு வெளியாகியுள்ளது. எது ஏற்கனவே வெளிப்படையாக உள்ளதோ, அதனை அமெரிக்கா அங்கீகரித்திருக்கிறது.

ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகர். டெல் அவிவ் நகரில் உள்ள இஸ்ரேலுக்கான அமெரிக்கத் தூதரகத்தை ஜெருசலேமில் அமைக்குமாறு வெளியுறவுத் துறை அமைச்சகத்துக்கு ஜானாதிபதி உத்தரவிட்டுள்ளார். இதை மட்டும்தான் ஜனாதிபதி செய்துள்ளார். ஜெருசலேம் நகர்ப்புற எல்லை வரையறைகள், எந்தப் பகுதியில் யார் யாருக்கு உரிமை உண்டு போன்ற விவகாரம் எதையும் ஜனாதிபதி அறிவிப்பு தொடவேயில்லை. அது இரு தரப்பு பேச்சுவார்த்தை மூலம் தீர்மானிக்கப்பட வேண்டியது என்று அமெரிக்கா இப்போதும் கூறுகிறது.

ஜெருசலேம் எல்லைக் கோடுகள் குறித்து ஜனாதிபதி எதுவும் கூறவில்லை. அப்பகுதியில் இரு தரப்பினரும் கோரும் இறையாண்மை குறித்து ஜனாதிபதி கருத்து வெளியிடவில்லை. அதையெல்லாம் இஸ்ரேலியரும் பாலஸ்தீனரும் பேசித் தீர்வு காண வேண்டும் என்பது அமெரிக்காவின் நிலைப்பாடு.

தற்போது மலைக் கோயில், அல்-அக்ஸா மசூதியில் நடைபெற்று வரும் நிர்வாகம், வழிபாடு ஏற்பாடுகளில் எந்த மாற்றத்தையும் ஜனாதிபதி ட்ரம்ப்பின் அறிவிப்பு கொண்டு வரவில்லை. அங்கு தற்போதுள்ள ஏற்பாடே தொடர வேண்டும் என்று தான் கூறியிருக்கிறார்.

இவ்வாறு நிக்கி ஹாலே தெரிவித்தார்.

"அமெரிக்காவின் அறிவிப்பு ஐ.நா பாதுகாப்புச்சபையில் தீர்மானங்களின் அடிப்படையில் இல்லை. அந்தப் பிராந்தியத்தில் அமைதி ஏற்பட இந்த அறிவிப்பு உதவாது. இஸ்ரேல் - பாலஸ்தீன் இடையேயான பேச்சு வாரத்தை மூலமே இதற்குத் தீர்வு காண முடியும்" என்று அமெரிக்காவின் அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி, சுவீடன் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் முடிவு சர்வதேச சட்டங்களுக்கு விரோதமானது என்று ஐ.நா.வுக்கான பாலஸ்தீன் பார்வையாளர் ரியாத் மன்சூர் கூறினார்.

இதற்கிடையே பேசிய இஸ்ரேல் தூதர் டேனிடேனன்: "அமெரிக்காவின் துணிச்சலான முடிவுக்கு இஸ்ரேல் நன்றி தெரிவிக்கிறது. ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹாலே ஆகியோருக்கு நன்றி. ஜெருசலேமிலுள்ள மலைக் கோயிலில் அகழாய்வில் கிடைத்த கி.பி. 67-ம் ஆண்டைச் சேர்ந்த நாணயத்தில் "புனித ஜெருசலேம்" என்று பொறித்துள்ளது. கி.பி. 70இல் ஜெருசலேமில் யூதக் கோயில் அழிக்கப்பட்டது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு யூதர்கள் தங்கள் தாயகத்தைவிட்டுத் துரத்தப்பட்டனர்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# ஐ.எஸ்.பிடியிலிருந்து விடுதலை! ஈராக்கிற்கு அமெரிக்கா பாராட்டு



(வோஷிங்டன்)

ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைமைப் பீடமாகயிருந்த ஈராக் நாட்டை அவர்களிடம் இருந்து முழுமையாக விடுவித்துள்ள அந்நாட்டின் அரசுக்கு அமெரிக்கா பாராட்டு தெரிவித்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் மேலோங்கி இருந்த போது ஈராக்கிலுள்ள மொசூல் மற்றும் அதை சுற்றியுள்ள நகரங்கள் அவர்களது கட்டுப்பாட்டிலிருந்தது. தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை தனி நாடாகவும், தலைமை பீடமாகவும் அறிவித்து, இஸ்லாமிய என்ற பெயரில் ஆட்சி செய்து, அட்டூழியத்தில் ஈடுபட்டு வந்தனர். அவர்களின் ஆதிக்கத்தை ஒடுக்க ஈராக் இராணுவத்துக்கு அமெரிக்கா கை கொடுத்தது. அமெரிக்க விமானப் படையின் உதவியுடன் ஐ.எஸ். தீவிரவாதிகள் வசமிருந்த மொசூல் நகரம் சமீபத்தில் முழுமையாக மீட்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் வசம் இருந்த மேலும் சில நகரங்கள் படிப்படியாக கைப்பற்றப்பட்டன. இந்த நிலையில் அவர்கள் வசம் இருக்கும் கடைசி நகரமான தல் அபர் பகுதியை மீட்க தாக்குதல் நடத்துமாறு ஈராக் இராணுவத்துக்கு அந்நாட்டி பிரதமர் ஹைதர் அல்-அபாடி கடந்த ஒகஸ்ட் 20 ஆம் திகதி உத்தரவிட்டார்.

இதையடுத்து, முன்னதாக மீட்கப்பட்ட மொசூல் நகரில் இருந்து 80 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தல் அபர் நகருக்குள் இராணுவ டாங்கிகளுடன் ஏராளமான வீரர்கள் புகுந்தனர்.

இந்நிலையில், ஈராக் நாட்டை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியிலிருந்து முழுமையாக மீட்டு விட்டதாகவும், தீவிரவாதிகளின் பிடியில் இருந்து நாடு விடுவிக்கப்பட்டதாகவும், சிரியா - ஈராக் எல்லையோரத்தில் இருந்து அவர்கள் ஒழிக்கப்பட்டதாகவும் ஈராக் பிரதமர் ஹைடர் அல்-அபாடி நேற்று முன்தினம் அறிவித்தார்.

இதையடுத்து, ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலைமை பீடமாக இருந்த ஈராக் நாட்டை அவர்களிடம் இருந்து முழுமையாக விடுவித்துள்ள அந்நாட்டின் அரசுக்கு அமெரிக்கா பாராட்டு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, அமெரிக்க அரசின் தொடர்பாளர் ... செய்தி குறிப்... காட்டுமிராண்... இடங்களையு... அவர்களால் ... இருந்து துடை...

மீண்டும் ... வேறு தீவிரவ... வகையில் நா... இதற்காக ... நேசநாட்டுப் ப... துணையாக ... ளது.



# ஜெயலலிதா ம... கொச்சைப்படு... ஏ.கே.போஸ் ...



(மதுரை)

ஜெயலலிதா மரணத்தை கொச்சைப்படுத்தும் டாக்டர் சரவணன் மீது நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுப்பேன் என்று ஏ.கே.போஸ் எம்.எல்.ஏ. எச்சரித்தார்.

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட ஏ.கே.போஸ் வெற்றி பெற்றார். இவர் தாக்கல் செய்த வேட்பு மனுவில் வைக்கப்பட்டு இருந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கைரேகை குறித்து தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணன் சர்ச்சை எழு... இருந்தார்.

இது குறித்து நீதிமன்றத்தில் வழக்கு... தொடர்ந்துள்ளார். மேலும் வழக்கு தொடர்ப... வும், கைரேகை குறித்தும் அவர் சில கருத்து... களை நேற்று முன்தினம் தெரிவித்தார். இத... ஏ.கே.போஸ் எம்.எல்.ஏ. கண்டனம் தெரி... துள்ளார்.

திருப்பரங்குன்றம் இடைத்தேர்தல் கடந்... ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற்றது. இ... தேர்தலின்போது எங்கள் கட்சியின் பொது... செயலாளர் அம்மா வைத்தியசாலையில் அ... மதிக்கப்பட்டு கையெழுத்திட முடியாத சூழ்நி... ஏற்பட்டது.

எனவே சுயநினைவோடு அரசு டாக்... முன்னிலையில் அவர் கைரேகையை ப... செய்தார். இதில் எந்தவித முரண்பாடும் இல்...

# வெளிநாடு



## ழ்கடலில் தேட
## டர் போராட்டம்

டத்தில் ஈடுபட்டனர்.

கடற்படை கரையோரங்களில் மட்டும் தேடுதலை மேற்கொள்வதாகவும் நடுக்கடலில் இறங்கி தேடும் பணியை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி, நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் கடலினுள் இறங்கி போராட்டத்தை மேற்கொண்டனர்.

அத்துடன், எங்கள் உறவுகளை மீட்கும் வரை போராடுவோம், உடல்களும் படகுகளும் ஆழ்கடலில் மிதப்பதாக கூறுகிறார்கள், அப்படியாயின் கடற்படை அது குறித்து எதுவும் தெரிவிக்காதமை ஏன்? என்ற கோஷங்களை எழுப்பி மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

ஒகி புயலின் தாக்கத்தினால், காணாமல் போயுள்ள மீனவர்களை மீட்டுத் தருமாறு கூறி, மீனவர்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ட்ரம்பிற்கு எதிராக இஸ்தான்புல்லில் ஆயிரக்கணக்கானோர் பேரணி





(இஸ்தான்புல்)

ஜெருசலேம் விவகாரம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற பிரமாண்ட பேரணி நடைபெற்றது. மத்திய கிழக்கு நாடுகள் மட்டுமன்றி, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளும், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, மலேசியா போன்ற ஆசிய நாடுகளும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளன. ட்ரம்பின் இந்த முடிவு உலகின் ஒட்டுமொத்த அமைதியை சீர்குலைப்பதாக உள்ளது என பல்வேறு நாட்டு தலைவர்கள் கண்டனம் தெரிவித்து விமர்சித்துள்ளனர்.

இந்நிலையில், துருக்கி நாட்டின் இஸ்தான்புல் நகரில் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் பெரும் திரளாக ஒன்றுகூடினர். அவர்கள் ஜெருசலேம் விவகாரம் தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்புக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர். மேலும், ஜெருசலேம் எங்களுடையது, இஸ்ரேலை விட்டு வெளியேறு என ட்ரம்புக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியபடி ஊர்வலமாக சென்றனர். பொதுமக்களின் பேரணியை முன்னிட்டு பொலிஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். (இ-7)



க்க அரசின் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஹேத்தர் நாவ்ரெட் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், 'ஐ.எஸ். தீவிரவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான கட்டுப்பாட்டில் இருந்த இடங்களையும், மக்களையும் மீட்டதன் மூலம் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசு ஈராக்கில் இருந்து துடைத்து எறியப்பட்டுள்ளது.

மீண்டும் அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளோ, வேறு தீவிரவாத இயக்கங்களோ தலைதூக்காத வகையில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இதற்காக அமெரிக்கா தலைமையிலான நேசநாட்டுப் படைகள் ஈராக் அரசுக்கு எப்போதும் துணையாக இருக்கும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# அமெரிக்காவின் மீது பொருளாதாரத்தடை அரபு நாடுகளுக்கு லெபனான் கோரிக்கை

(கெய்ரோ)

ஜெருசலேம் விவகாரத்தில் அமெரிக்காவின் மீது பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து அரபு நாடுகள் பரிசீலிக்க வேண்டும் என லெபனான் வெளியுறவு அமைச்சர் ஜெப்ரான் பாஸ்சில் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தலை நகராக ஜெருசலேமை அங்கீகரித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், டெல் அவிவ் நகரில் உள்ள அந்நாட்டு தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார். உலக அளவில் எதிர்ப்பை கிளப்பியுள்ள ட்ரம்பின் இந்த அறிவிப்பு, பாலஸ்தீனம் - இஸ்ரேல் எல்லையில் கலவரத்தை உண்டாக்கியுள்ளது.

ஒட்டுமொத்த அரபு நாடுகளும் ட்ரம்பின் முடிவுக்கு எதிர்ப்பை பதிவு செய்துள்ளன.

தனது முடிவை ட்ரம்ப் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஐரோப்பிய நாடுகளும் கருத்து தெரிவித்துள்ளன. இந்நிலையில், இவ்விவகாரம் குறித்து ஆலோசிப்பதற்காக எகிப்து தலைநகர் கெய்ரோவில் அரபு நாடுகள் கூட்டமைப்பின் அவசரக் கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தில் பேசிய லெபனான் வெளி யுறவுத் துறை அமைச்சர் ஜெப்ரான் பாஸ்சில், "ஜெருசலேம் விவகாரத்தில் அமெரிக் காவின் முடிவு குறித்து நடவடிக்கைகள் நாம் எடுப்பது அவசியமாகிறது. அமெரிக்காவுக்கு எதிராக தூதரக ரீதியிலான எதிர்ப்பை பதிவு செய்வது, அரசியல் ரீதியான விவாதத்தை முன்னெடுத்து செல்வது, இதை அடுத்து நிதிமற்றும் பொருளாதார தடைகளை கொண்டு வருவது ஆகியவற்றை பரிசீலிக்க வேண்டும்" என வலியுறுத்தினார்.

இதேவேளை எகிப்தில் உள்ள கோப்டிக் கிறிஸ்தவ தலைவர் (போப்), அமெரிக்க துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் உடனான சந்திப்பை இரத்துச் செய்துள்ளார். (இ-7)

## தா மரணத்தை
## ப்படுத்துவதா?
## ாஸ் கண்டனம்



சர்ச்சை எழுப்பி

த்தில் வழக்கும்
ழக்கு தொடர்பாக
வர் சில கருத்துக்
ரிவித்தார். இதற்கு
ண்டனம் தெரிவித்

ந்தேர்தல் கடந்த
டைபெற்றது. இந்த
ட்சியின் பொதுச்
சாலையில் அனு
டியாத சூழ்நிலை

டு அரசு டாக்டர்
ரேகையை பதிவு
ண்பாடும் இல்லை.

ஆனால் இடைத்தேர்தல் தோல்வியை தாங்கிக் கொள்ள முடியாத தி.மு.க. வேட்பாளர் டாக்டர் சரவணன் தேவையற்ற குற்றச்சாட்டுகளை பரப்பி வருகிறார்.

நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து விட்டு நீதிமன்றில் பிறப்பிக்கும் உத்தரவுகளை அவமதிக்கும் முறையில் கருத்து தெரிவித்து வருகிறார்.

உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை டாக்டர் சரவணன் அரசியல் ஆக்குகிறார். இதுகுறித்து சட்டவல்லுநர்களுடன் ஆலோசித்து அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடருவேன்.

ஒன்றரைக் கோடி தொண்டர்களின் தெய்வமாக போற்றப்படும் மறைந்த முதலமைச்சர் அம்மா மரணத்தை கொச்சைப்படுத்தும் வகையில் பேசுவதை டாக்டர் சரவணன் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

இதே நிலை தொடர்ந்தால் எங்கள் கட்சியின் மேலிடத்தின் அனுமதி பெற்று அவர் மீது சட்டப்படி உரிய நடவடிக்கை எடுப்பேன் என அவர் மேலும் எச்சரித்தார். (இ-7)

### ஜெருசலேம் விவகாரம்

# ட்ரம்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் இஸ்ரேல் ராணுவம் துப்பாக்கிச்சூடு

## பாலஸ்தீனர்கள் இருவர் பரிதாபமாகப் பலி!



(ஜெருசலேம்)

ஜெருசலேம் விவகாரம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெற்ற பேரணியில் இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பாலஸ்தீனர்கள் சுட்டு கொல்லப்பட்டனர்.

கிறிஸ்தவர்கள், யூதர்கள் மற்றும் முஸ்லிம் மதத்தினருக்கு புனித நகராக இருக்கும் ஜெருசலேம் தற்போது இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. மத்திய கிழக்கு போரின் போது பாலஸ்தீனிடம் இருந்து ஆக்கிரமிக்கப்பட்ட இந்த நகரை இஸ்ரேல் தனது தலைநகர் என கூறி வருகிறது. ஆனால் இதை எந்த நாடுகளும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதற்கிடையே, ஜெருசலேமை இஸ்ரேல் தலைநகராக அங்கீகரிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சில தினங்களுக்கு முன் அறிவித்து டெல் அவிவ் நகரில் உள்ள அமெரிக்க தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றியமைக்க உத்தரவிட்டார். ட்ரம்ப் முடிவுக்கு மத்திய கிழக்கு நாடுகளும், ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளும் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளன.


இந்நிலையில், இஸ்ரேல் நாட்டுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையில் உள்ள காஸா எல்லையில் பாலஸ்தீனர்கள் நேற்று முன்தினம் திரளாக ஒன்றுகூடினர். அவர்கள் ஜெருசலேம் விவகாரம் தொடர்பாக ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்புக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பியபடி ஊர்வலமாக சென்றனர்.

அவர்களை தடுக்கும் விதமாக இஸ்ரேல் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருந்தனர். அப்போது பேரணியில் ஈடுபட்டவர்கள் ட்ரம்ப் உருவப் படத்தை தீயிட்டு எரித்தனர். இதை தடுக்க முயன்ற இராணுவத்தினர் மீது அவர்கள் தாக்குதல் நடத்தினர்.

இதைத்தொடர்ந்து, இராணுவத்தின பேரணியில் பங்கேற்றவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர். முதல் கட்டமாக இரண்டு பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், கலவரம் ஏற்படுவதை தடுக்கும் வகையில் இராணுவத்தினர் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். (இ-7)

# கட்சிக்கு எதிராக செயற்படுபவர்களை இனியும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை



(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிக்கு உழைக்காத ஸ்ரீல.சு.க. உறுப்பினர்களுக்கு எதிராக கட்சியின் அரசியல் யாப்புக்கு அமைவாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீல.சு.கட்சியை பிரிப்பதற்கோ, பலவீனப்படுத்துவதற்கோ யாருக்கும் தான் இடமளிக்கப் போவதில்லையெனவும் ஜனாதிபதி கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் கட்சிக்கு எதிராக செயற்படும் போது தான் இனியும் பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன் எனவும் ஜனாதிபதி எச்சரித்துள்ளார். (இ-7)

# இலங்கைக்கான மலேசியத் தூதுவர் திடீரென திருப்பி அழைக்கப்பட்டார்

(கொழும்பு)

மலேசியப் பிரதமர் இலங்கைக்குப் பயணம்மேற்கொள்ளவுள்ள நிலையில், கொழும்பிலுள்ள தமது தூதுவரை மலேசிய அரசாங்கம் திருப்பி அழைத்துள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி இரவு கொழும்பு வரும், மலேசியப் பிரதமர் நஜிப் ரசாக் 19ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

மலேசியப் பிரதமரின் பயணத்துக்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில், கொழும்பிலிருந்த மலேசிய தூதுவர் வான் சைதி வான் அப்துல்லா திடீரென மலேசிய அரசினால் திருப்பி அழைக்கப்பட்டுள்ளார்.

தீவிரமான காரணங்களினாலேயே மலேசியத் தூதுவர் திருப்பி அழைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதிலும், திருப்பி அழைக்கப்பட்டமைக்கான காரணம் தெரியவரவில்லை.

இந்த நிலையில் மலேசியப் பிரதமரின் பயண ஒழுங்குகளைக் கவனிக்க, மலேசிய வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வரவுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)


# இலங்கைக் கடற்படைக்கு 67 வயது

(கொழும்பு)

இலங்கை கடற்படை நேற்று முன்தினத்துடன் தனது 67 ஆவது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்துள்ளது.

இது தொடர்பில் கடற்படை பல்வேறு சமய நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது.

கடற்படைப் பிரிவின் பயிற்சிப் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் திமுது குணவர்தனவின் தலைமையில் சமய நிகழ்வுகள் இடம் பெற்றதாக கடற்படை ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.



கடந்த 1950 இல் இலங்கை கடற்படை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ‘ரயில்வே திணைக்களத்தை இழுத்துமூட வேண்டிவரும்’

## ஊழியர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

பணியாளர்கள் தமது வேலையை இழந்தவர்களாகக் கருதப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த போதும் ரயில்வே ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதாக இல்லை.

“ரயில்வே ஊழியர்கள் சர்வ சாதாரணமாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். இது மிகவும் ஆபத்தான ஒரு சூழல். பல்லாயிரக் கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்,” என்று போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சின் செயலாளர் டி.எஸ். விதானகே தெரிவித்துள்ளார்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் பணிக்குத் திரும்புவதற்கு இன்று திங்கட்கிழமை வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் அதற்குள் வேலைக்குத் திரும்பாதவர்களை பணிநீக்கம் செய்ய பொறுப்பதிகாரிகள் முடிவெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் செயலாளர் இந்திக ருவன் பத்திரண தெரிவிக்கும்போது,

தற்போது 2000 ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், இந்த எண்ணிக்கை நாளை பத்தாயிரமாக மாறும் என்றும் எச்சரித்துள்ளார்.

“எங்களை பணியைவிட்டு விலக்கும் அமைச்சின் முடிவை வரவேற்கிறோம்.

ஆனால் அரசு அப்படிச் செய்யுமானால் ரயில்வே திணைக்களத்தை இழுத்து மூட வேண்டிவரும்” என்று கடுமையாக எச்சரித்துள்ளார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### நான்கு பேரைக் கேட்பது உண்டா?

மற்றவர்களிடம் அபிப்பிராயம் கேட்பது கேவலம் என்றும் நம் திறமைக்கு இழுக்கு என்றும் எண்ணுவது பலரது இயல்பாக இருக்கிறது.

“நான்கு பேரிடம் கருத்துக் கேட்டால இன்னும் குழப்புவார்கள். எனவே நாம் எடுப்பது தான் சிறந்த முடிவு” என்று பேசும் இவர்கள் எத்துக்குத்தாக ஒரு பிரச்சினையில காலை உள்ளே விட்டு விட்டுத் தவிப்பார்கள்.

மிக அந்தரங்கமான விடயங்களை ஆலோசனை கேட்டது நல்லது. இது கேவலம் இல்லை. இது ஒரு சௌகரியம்.

எனக்குத் தெரிந்து ஒரு நண்பர் தேக்கு மரத் திட்டத்தின் அடிப்படையில் ஏகப்பட்ட பணத்தை ஒரு நிறுவனத்தில் கொண்டு போய்க் கொட்டினார். அதைப் பலர் சொன்ன அபிப்பிராயம் பயமுறுத்துவதாக இருக்கவே, இப்பேது உட்கார்ந்து வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஒரு தொழிலில் இறங்குகின்றோம் என்றால் அந்தத் துறையில் உள்ளவர்களின் எக்ஸ்பர்ட் ஒப்பீனியனைப் பெறாமல் இறங்குவது ஆபத்து. நான் ஏன் கேட்க வேண்டும்? எவனையாவது போய் நான் என்னத்திற்குக் கேட்பது? என் பணம் நான் போடுவேன். வேறு யார் இதில் அபிப்பிராயம் சொல்ல? என்று விதண்டாவதம் செய்கிறவர்கள் கடைசியில் யார் என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகிறார்கள்.

அந்த ஊர்க்காரர்களை அபிப்பிராயம் கேட்காமல் தன் பெண்ணை மிக அவசரப்பட்டுத் திருமணம் செய்து கொடுத்த ஒருவர் இப்போது அந்தக் குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு அதிர்ச்சி அடைந்து போயிருக்கின்றார். முதலிலேயே கேட்காமல் போய் மோசம் போனேனே என்கிறார்.

எதிலும் விழுந்தடித்துப் வேகமாகவும் முடிவெடுத்துவிடாமல், ஆற அமரச் சிந்திக்க வேண்டும். நான்கு பேர் கூறும் அபிப்பிராயத்தைக் கேட்டு முடிவு எடுத்தவர்கள் பின்னால் வருத்தப்பட்டதாக வரலாறு இல்லை.

ஒரு செயற்பாட்டில் உள்ள பல கண்ணோட்டங்களையும் தெரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் விருப்பம் என்று ஒன்றை மட்டும் மனத்திற்கொண்டு அது கொடுக்கும் வேகத்திற்கு ஏற்ப ஓடுகிறவர்கள் இடறி விழுவது நிச்சயம்.

பலரிடம் அபிப்பிராயம் கேட்பது கேவலம் என்று எண்ணுகிறவர்கள் தங்களது தவறான முடிவால் பலரிடம் கேவலப்படுவதை எப்படி நியாயப்படுத்தப் போகிறார்கள்?

**லேனா தமிழ்வாணன்**

# பல தொழில்நுட்பப் பிரச்சினைகளை தீர்க்கவே உள்ளூராட்சி மன்ற தேர்தல் சீர்திருத்த சட்டமூலம்

## அமைச்சர் பைஸர் விளக்கம்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் பல தொழில்நுட்ப பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் இந்த திருத்தம் மேற்கொள்ளப்படுவதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் சீர்திருத்த சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய இந்த திருத்தம் முன் வைக்கப்படுகின்றது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இங்கு உரையாற்றுகையில்,

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவது தமது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து உள்ளூராட்சிமன்ற தேர்தல் சீர்திருத்த சட்டமூலம் 88 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 137 பேரும், எதிராக 49 பேரும் வாக்களித்தனர். 8 பேர் வாக்களிப்பதில் இருந்து தவிர்த்து கொண்டனர். (இ-7)

## கடவுச் சொற்களை மறக்கும் எம்.பிக்கள்

# நாடாளுமன்றில் 20 வீதத்திற்கும் குறைவான மடிக்கணனிகளே பயன்படுத்தப்படுகின்றன



(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களின் ஆசனங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள மடிக்கணனிகளில் 20 வீதத்திற்கும் குறைவானவை மாத்திரமே பயன்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

டிஜிட்டல்துறை அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் தமது அமைச்சுக்கான நிதி ஒதுக் கீடு மீதான விவாதத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், இதனை விடுத்து இன்னமும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள், கடதாசிகளில் எழுதிவந்தே தமது உரைகளை ஆற்றுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கடவுச்சொற்களை மறந்து விடுகின்றனர். எனினும் அவர்களுக்காக கைவிரல் அடையாளங்களுடன் வசதி கள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-7)

## இராணுவச் சிப்பாய் மின்சாரம் தாக்கி பலி

(கொழும்பு)

பனாகொட இராணுவ முகாமில் கடமையாற்றிய சிப்பாய் ஒருவர் நேற்றுக் காலை மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

முகாமில் இருக்கும் தடாகத்தில் மின் கோளாறை சரி செய்து கொண்டிருந்த போதே அவர் இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இவர் பன்னிப்பிடிய - பெலன்வத்தை பகுதியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாய் எனத் தெரிய வருகிறது.

சடலம் ஹோமாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-7)

## உணவுப் பொருட்களின் விலையை நிலையாக வைத்திருக்க நடவடிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலையை நிலையான மட்டத்தில் முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

ரின் மீனின் விலையைத் தவிர ஏனைய அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாக அந்தச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் லங்கா சதோச ஊடாக குறைந்த விலையில் உயர்தரத்திலான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்ய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

கூடுதலான விலைக்குப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை சுற்றிவளைக்கும் நடவடிக்கைகளில் நுகர்வோர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர் என அச்சங்கம் தெரிவித்துள்ளது. (இ-7)

# பட்ஜெட்டை எதிர்க்கட்சியினரால் எதிர்க்க முடியாமல் போய்விட்டது

## பிரதியமைச்சர் ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்



(கொழும்பு)

எதிர்வரும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சியால் யதார்த்த ரீதியாக எதிர்க்க முடியாமல் போய்விட்டது என, கொள்கை வரைவுத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் டாக்டர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தின் இறுதி நாளான நேற்று முன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"அரசுகள் முன்வைக்கும் வரவு-செலவுத் திட்டங்கள் எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பைப் பெறுவது இயல்பானதுதான். ஆனால், இம்முறை அவ்வாறான யதார்த்தமான எதிர்ப்பை நாம் காணவில்லை. இது குறித்து நிதியமைச்சர், பிரதி நிதியமைச்சர் மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகள் திருப்தி கொள்ள வேண்டும்.

பியர் விவகாரம் கடுமையான விமர்சனங்களுக்கு ஆளாகிவருகிறது. ஒரு சில கொள்கைகள் அடிப்படையில் வரிகள் விதிக்கப்படுகின்றனவே தவிர, மக்கள் மது அருந்த வேண்டுமா?, வேண்டாமா? என்பதை அது முடிவு செய்வதில்லை. வெளிநாடுகளிலும் இந்த நடைமுறை இருக்கிறது" எனக் கூறினார். (இ-7)

## மைத்திரியின் மகளுக்கு ஏற்பட்ட ஆசை



(கொழும்பு)

இலங்கையில் பாரிய மாற்றம் ஒன்றை தனது தந்தையான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏற்படுத்தியுள்ளதாக, அவரின் மகள் சத்துரிகா சிறிசேன தெரிவித்துள்ளார்.

சத்துரிகா சிறிசேனவினால் எழுதப்பட்ட "ஜனாதிபதி தந்தை" என்ற புத்தகத்தை பொல நறுவை மக்கள் மத்தியில் வெளியிடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றிய சத்துரிகா சிறிசேன, தனது தந்தை இலங்கை சமூகத்தில் புதிய மாற்றம் ஒன்றை அறிமுகம் செய்த விசேட தலைவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மக்களின் சிரேஷ்ட தலைவராக எனது தந்தை இருக்க வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன் என சத்துரிகா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் பிளவடைய வேண்டியதில்லை

## துமிந்த திஸாநாயக்க கூறுகிறார்



(கொழும்பு)

கிராமங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதர வாளர்கள் பிளவடைய வேண்டியதில்லை என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிளவடைந்து சென்றவர்கள் பின்னால் செல்வதனை விடவும் சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிப்போரை ஒன்றிணைப்பதே அவசியமானது என அவர் தெரிவித்தார்.

எனவே அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# மெய்ப்பொருள் நாயனார் குருபூசைத் தினம் இன்று

சிவனடியாரிடத்திலும்சிவ வேடத்திலும் மிகுந்த பக்தி உடையமெய்ப்பொருள்நாயனாரது குரு பூசைத் தினம் கார்த் திகை 25ஆம் நாள் (11/12/2017) திங்கட்கிழமை நாடெங்கிலும் உள்ள சைவ மக்களால் கொண்டாடப் படுகின்றது. மலைய மான் நாட்டிலே திருக்கோவனூரிலே ஓர் ராஜா இருந்தார். விபூதி, உருத்திராட்சம் முதலிய சிவ வேடங்களையே மெய்ப்பொருள்என்றுமதிப்பவர். அதனால் அவருக்கு மெய்ப்பொருள் நாயனார் என்று பெயரானது. அவர் தமது இராச்சியத்தை நீதி தவறாது ஆண்டு வந்தார். சிவாலயங்களிற் பூசை மற்றும் திருவிழாக்களை எந்த வித குறையுமின்றி மிகவும் சிறப்பாக நடத்தி வந்தார். சிவனடியார் களை அன்பாக உபசரித்து அவர்களுக்கு வேண்டிய பொன், பொருள் எல்லாவற்றையும் கொடுத்து. வந்தார். இப்படி சிறப் பாகராச்சியம்நடக்கும்போது முத்திநாதன் என்னும் ஓர் அரசன்அந்தமெய்ப்பொருள் நாயனாரோடு பல முறை சண்டை செய்து தோற்றுப் போனான். அவர் நாயனாரைச் சண்டை செய்து வெல்ல முடியாதென்பதை உணர்ந்து அவரை வஞ்சனையால் வெல்வதற்கு முய ற்சி செய்தான். நாயனார் சிவனடியாரிடத்தில் மிக்க அன்புள்ளவரென்பதை முத்திநாதன் அறிந்திருந்தான். ஒருநாள் அவன் விபூதியை உடம்பு முழுவதும் பூசிச் சடைகளை முடித்துக் கட்டி காவியுடை அணிந்து ஒரு புத்தகப் பையுள்ளே ஓர் ஈட்டியை மறைத்துக் கொண்டு நாயனாரது அரண்மனைக் குச் சென்றான். மாளிகையில்காவற்காரன் அவனைச் சிவனடியார் என நினைத்து எந்தவித சோதனையும் செய்யாது உள்ளே போக விட்டான். கடை வாயிலில் நின்ற தத்தன் என்னும் சேவகன் சுவாமி ராஜா தற்பொழுது நித்திரையில் இருக்கின்றார் எழும்பும் சமயம் செல்லல் நல்லது என்றான்.

அதற்கு முத்திநாதன் நான் அவருக்கு ஞானநூல் படிப்பிக்கப் போகின்றேன். என்னைத் தடுக்க வேண்டாம் என்று கூறி உள்ளே போனான். அங்கேயிருந்த நாயனாரின் மனைவியார் அவரை எழுப்பினார். அவர் எழுந்து வந்த வரை சிவனடியார் என்று நினைத்துக் கும்பிட்டு சுவாமி இங்கே எழுந்தருளிய காரணம் யாது? என்று வினவினார். அதற்கு முத்திநாதன் வேறு எவரிடத்திலும் இல்லாத ஓர் ஆகமத்தை உமக்கு போதிப்பதற்கு கொண்டு வந்தேன் என்றான். நாயனார் மிக மகிழ்ந்து சுவாமி அடியேனுக்கு அதைப் போதித்தருளல் வேண்டும் என்று சொல்லி சிவனடியாரை ஆசனத்தில் இருத்தி தாம் கீழே இருந்தார். நாயனார் கண்களை மூடி முத்திநாதனை வணங்கிக் கொண்டிருக்கையில் அவன் புத்தகத்தை எடுப்பது போல் தான் மறைத்து வைத்திருந்த ஈட்டியை எடுத்து நாயனாரைக் குத்தினான்.

அதனைக் கண்ணுற்ற தத்தன் ஓடிவந்து கைவாளினாற் சிவனடியாராக வந்த முத்திநாதனை வெட்டப்போனான். அப்போது மெய்ப்பொருள் நாயனார் தத்தனைப் பார்த்து தத்தா! இவர் சிவனடியாராதலால் இவருக்கு ஒரு துன்பமும் செய்யாதே என்றார்.

தத்தன் நாயனரைப் பார்த்து சுவாமி அடியேன் செய்யக்கூடிய ஏவல் யாது? என்றார். நாயனார் வழியிலே ஒருவரும் இவருக்கு துன்பம்செய்யாதபடி இவரை அழைத்துக் கொண்டு போய்நம் ஊர் எல் லையில் விட்டுவா என்றார். சிவனடியார் ஓர் இடையூறுமின்றிப் போய் விட்டார் என்ற செய்தி அறியவேண்டும் என விரும்பிய நாயனார் உயிருடன் இருந்தார். முத்திநாதன் ராஜாவைக் கொன்ற செய்தியை அறிந்த ஊர்மக்கள் முத்திநாதனைக் கொல்ல வந்தார்கள். இருப்பினும் தத்தன் இச் சிவபக்தருக்கு ஒரு துன்பமும்செய்யக்கூடாதென ராஜா கட்டளையிட்டார் என்று சொல்லி அவர்களைத் தடுத்தார்.

தத்தன் முத்திநாதனை ஊர் எல்லையில் விடுத்து நாயனார் முன் வந்து நின்று சுவாமி சிவபக்தருக்கு இடையூறு ஒன்றும் நேராதபடி கொண்டு போய் விட்டேன் என்றான். அப்போது மெய்ப்பொருள்நாயனார் இன்றைக்கு நீ செய்த உபகாரத்தை வேறு யார் செய்ய வல்லவர் என்று சொல்லி தத்தனை பரிவுடன் பார்த்தார். பின்பு அவர் தம்முடைய குமாரர்களையும் மந்திரிமார்களையும் அழைப்பித்தார். வேதாகமங்களிற் சொல்லியபடி விபூதி மேல் வைத்த அன்பை வளர்க்கும் வண்ணம் அவர்களுக்குப் போதித்து நடராசப் பெருமானை தியானித்துக் கொண்டிருக்கையில்உடனே நடராசப்பெருமான் தோன்றி அவரை தம்முடைய திருவடியிலே சேர்த்தருளினார்.

எனவே சைவ சமயத்தவராகிய நாங்களும் அவருடைய வழியைப் பின்பற்றி சைவசமயத்தை மேன்மை பெறச் செய்ய ஆக்கபூர்வமான பங்களிப்பை மேற்கொள்ளுதல் வேண்டும்.

-கந்தையா கனகசபை-

## நெல்லியடி மீன் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

(கரணவாய்)

நெல்லியடி மீன்சந்தைப் பகுதி பெரும் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுகின்ற நிலையில் இது குறித்து பிரதேச சபையோ, சுகாதாரப் பகுதியினரோ கவனிப்பதில்லை எனப் பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மீன் சந்தைக்கு வரும் பெரும்பாலானோர் மீன் வாங்கும் போது அதனை வெட்டியே வாங்கிச் செல்கின்றனர்.

இந் நிலையில் சந்தை பெரும் சுகாதாரச் சீர்கேட்டுடன் காணப்படுவதாலும் நாய், பூனைகளின் நடமாட்டம்காணப்படுவதால்மீனினை வெட்டி வாங்கச் செல்லும் பொதுமக்கள் அச்சமடைய வேண்டிய நிலை காணப்படுகின்றது.

எனவே பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-60)




அல்வாய் மனோகரா முன்பள்ளியின் வருடாந்த கண்காட்சி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. முன்பள்ளி நிலையத் தலைவர் க.ஜெயதர்சன் தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சி நிகழ்வில் வடமராட்சி வலய கல்விவலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறார்களின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்ட கண்காட்சிப் பொருட்களைப் பார்வையிட்டார். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)

## பண்பாட்டு இயக்கத்தின் காரியாலயத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் காரியாலயத்திறப்பு விழா இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் 68, மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள காரியாலயத்தில் சி.யுகேந்திரன் தலைமையில் இடம்பெறும். அதேவேளை தை மாதம் 27ஆம் திகதி உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் விழாவும் இடம்பெறவுள்ளது. (இ-107)

## பசில் குறித்து எட்டு கட்சிகள் மகிந்தவிடம் முறைப்பாடு

(கொழும்பு)

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தொடர்பில் எட்டு கட்சிகள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகளுக்கு வேட்பு மனு வழங்குவதில் பசில் ராஜபக்ஷ பாரபட்சம் காட்டுவதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மஹஜன எக்சத் பெரமுன, தேசிய சுதந்திர முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி மற்றும் தேச விடுதலை மக்கள் முன்னணி ஆகியன இவ்வாறு முறைப்பாட்டு செய்துள்ளன.

அத்துடன், பசில் ராஜபக்ஷ, மலர்மொட்டு தரப்பிற்கு கூடுதல் சலுகை வழங்கி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களான சீ.பி.ரட்நாயக்க மற்றும் குமார வெல்கம ஆகியோரிடம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்நிலையில் வேட்பு மனு ஒதுக்கீடு தொடர்பில் ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மூடப்படும் அபாயநிலையில்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மூடப்படும் நிலைக்கு செல்லலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாரிய கடன் செலுத்துகை திட்டத்தில் இருந்து மீளாத சந்தர்ப்பத்தில் இது நடந்தே தீரும் என்று மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

இதனை தடுக்க அரசாங்கம் நிதியில்லாமல் புத்தாக்க நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஏற்கனவே ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், அரச வங்கிகளிடம் இருந்து பெற்ற பாரிய தொகை கடன்களை இன்னும் மீளச் செலுத்தவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் செலவீனக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமானால் உயர் மட்டத்தில் அதிகளவான சம்பளத்தை பெற்றுக்கொள்ளும் அதிகாரிகள் மட்டத்தில் அது செயற்படுத்தப்பட வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## ரயில் சேவை அத்தியாவசிய சேவை வர்த்தமானிக்கு பாராளுமன்று அங்கீகாரம்

(கொழும்பு)

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புக்கு பாராளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரயில் சேவையை அத்தியாவசிய மக்கள் சேவையாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சபை முதல்வர் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த அறிவிப்புத் தொடர்பில் பாராளுமன்றத்தின் விருப்பத்தைக் கோருமாறு அவர் சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார். இதற்கு அமைய அவசர வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் நடத்தப்பட்டது.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் வர்த்தமானி அறிவிப்புக்கு ஆதரவாக 127 பேர் வாக்களித்தனர். 54 பேர் எதிராக வாக்களித்தனர். 11 பேர் வாக்களிப்பில் தவிர்த்துக் கொண்டனர். (இ-7)




அம்பன் அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலை அதிபர் வே.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாணசபை உறுப்பினர் கே.தர்மலிங்கம் பரிசில் வழங்குவதையும் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும் பிரதம விருந்தினருக்கு அதிபர் நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: கரணவாய் செய்தியாளர்)



பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தர பாடசாலையின் முத்தமிழ் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் ஆர்.நடராஜன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படங்கள்: மகாலிங்கம்)

# 'வடக்கின் மக்களுக்காக எழுவோம்' யாழில் தமிழ் முஸ்லிம் மாநாடு

(யாழ்ப்பாணம்)

"வடக்கின் மக்களாக எழுவோம்" எனும் தொனிப் பொருளில் தமிழ் முஸ்லிம் ஐக்கிய மாநாடு நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி முஸ்லிம் ஆதரவாளர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாநாட்டில், மாநாட்டின் கொள்கை பிரகடனம் வெளியிடப்பட்டதனை தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றது.

, இந்த நிகழ்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வடமாகாண சபை உறுப்பினர்களான அ.அஸ்மின், ஆர்னோல்ட், த.குருகுலராஜா,பரம்சோதி, பசுபதிப் பிள்ளை உட்பட பொதுமக்கள் பலர்கலந்து கொண்டனர்.(இ-9)







# மைத்திரியுடன் இணையத் தயார் அனைத்தையும் மறக்கவும் தயார்

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போதைய அரசாங்கத்திலிருந்து விலகினால் அவருடன் தொடர்ந்தும் செயற்படத் தயாராக இருப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அப்படிச் செய்தால், அவருடன் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஏனைய அனைத்தையும் மறக்கத் தயார் எனவும் மகிந்த தெரிவித்தார்.

கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் இல்லத்தில் அநுராதபுரம் மாவட்டத்திற்கான வேட்புமனுக்களில் கையெழுத்திடும் நிகழ்வில் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் உடன்படிக்கைகளை செய்துக்கொண்டால், கூட்டு எதிர்க்கட்சியும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றது என்பது போலாகிவிடும் என்பதால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அரசாங்கத்தில் இருந்து விலகுமாறு கோருவதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7).

# பட்டமளிப்பும் ஒளிவிழாவும்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பு Blooming buds pre school day care centre, மானிப்பாய் வட்டுக் கோட்டை Butterfly pre school day care center ஆங்கில மொழிமூலமான பாலர் பாடசாலைகளின் பட்டமளிப்பு, ஒளிவிழா நிகழ்வுகள் பண்டத்தரிப்பு பிரான்பற்று அருனமுதீஸ்வரி திருமண மண்டபத்தில் இன்று திங்கட் கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெறும். (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1275

Search for people, places and things


### சியாம்




### சாருஜன்




### சமிதா




### சௌந்தர்ராஜன்




### ராமு




### வித்யாசாகர்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொகுதி நிர்ணயம் தொடர்பான முன்மொழிவுகள்

(இவைகள் கட்டுரை ஆசிரியரின் தனிப்பட்ட முன்மொழிவுகள்)

கல்முனை பிரதேச செயலகப் பிரிவு- 44632

கல்முனை (தமிழ்) பிரதேச செயலகப் பிரிவு- 29800

சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவு- 25461

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 99893 ஆகும்.

இத் தொகுதியில் முஸ்லிம்கள் 72.20% மாகவும் தமிழர்கள் 26.86%மாகவும் ஏனையோர் 94% மாகவும் இருக்கின்றனர்.

### சம்மாந்துறை தேர்தல் தொகுதி

இத் தொகுதிகள் அடங்கும பரப்புகளும், இதன் மக்கள் தொகையும் பின்வருமாறு,

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 98784.

| பிரிவு (சம்மாந்துறை தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவுகள் அடங்கும் கிராம அதிகாரிகள் பிரிவு | |
| 39 C நிந்தவூர் 24 | 579 |
| 41 A நிந்தவூர் 11 | 1258 |
| 41 B நிந்தவூர் 12 | 968 |
| 41 நிந்தவூர் 01 | 1439 |
| 40 நிந்தவூர் 02 | 1180 |
| 39 நிந்தவூர் 03 | 1643 |
| காரைதீவு பிரதேச செயலகப் பிரிவு | 16339 |
| சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவு | 60465 |
| இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவு | 14383 |
| | 98784 |

இத்தொகுதியின் கீழ் நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழ்வரும் கிராம அதிகாரி பிரிவுகளை சம்மாந்துறை தொகுதியுடன் இணைக்க எடுக்கும் முயற்சிக்கு நிந்தவூர் மக்கள் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. இதேபோல் காரைதீவு பிரதேச செயலகப் பிரிவையும் சம்மாந்துறையுடன் இணைக்க எடுக்கும் முயற்சிக்கும் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. அட்டாளைச் சேனை தேர்தல் தொகுதியும் கல்முனை தேர்தல் தொகுதியும் மிக கூடிய மக்கள் தொகையைக் கொண்டுள்ளதால் நிந்தவூரை அட்டாளைச் சேனையுடனோ காரைதீவை கல்முனையுடனோ இணைக்க குடித்தொகை அளவு இடமளிக்க முடியாதுள்ளது கவனத்திற் கொள்ளத்தக்கது.

### திருக்கோயில் தேர்தல் தொகுதி

இத் தேர்தற் தொகுதிக்குள் கூடுதலான மக்கள் தமிழர் என்பதால் இதற்கு பொத்துவில் என பெயர் சூட்டுவதிலும் பார்க்க திருக்கோயில் என அழைப்பதே சிறந்தது. இத் தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பரப்புகளும், மக்கள் தொகையும் பின்வருமாறு,

ஆலையடி வேம்பு பிரதேச செயலகப் பிரிவு -22458

திருக்கோயில் பிரதேச செயலகப் பிரிவு -25277

பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவு -34809

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 82544 ஆகும்.

மாவட்ட தேர்தல் தொகுதியின் சராசரி மக்கள தொகையின் -10% த்தின் தொகை 83495 ஆக இருக்கின்றது. இத் தொகுதி குறைந்த மக்கள் தொகை நிபந்தனையிலும் பார்க்க 951 பேர் குறைவாக இருக்கின்றனர். இந்த சிறு எண்ணிக்கையை தேர்தல் நிர்ணயக் குழு கவனத்தில் எடுக்காது விடலாம்.

குறித்த மக்கள் தொகைக்குள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை கட்டாயம் நிறைவேற்ற வேண்டுமென்ற நிலைப்பாட்டில் தேர்தல் நிர்ணயக் குழு இருந்தால் பின்வரும் மூன்று மாற்று வழிகளைக் கடைப்பிடிக்கலாம்.

லகுகல பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட PP04/ பானமை வடக்கு கிராம அதிகாரி பிரிவையும் (1297 மக்கள் தொகை) PP 04 தெற்கு கிராம அதிகாரி பிரிவையும் (1269 மக்கள் தொகை) திருக்கோயில் தேர்தல் தொகுதியுடன் இணைக்கலாம். இக்கிராம அதிகாரி பிரிவுகள் திருக்கோவில்- பொத்துவிலுடன் மிக நெருங்கிய தொடர்புடையன. இவ்விரண்டு பிரிவுகளிலும் தமிழ் மக்கள் சிறுபான்மையாக வாழ்கின்றனர். மேலும் இங்கு தமிழ்/ சிங்கள மக்களிடையே மிகவும் நெருக்கமான சமூக உறவும் கலப்பு திருமணங்களும் கலப்பு கலாசார பண்பும் காணப்படுகின்றன. இவ்இரண்டு பிரிவுகளின் மொத்த மக்கள் தொகை 2566 ஆகும். இத்தொகை குறையும் மக்கள் தொகையை நிறைவு செய்ய போதுமானது.

லகுகலை பிரதேச செயலகப் பிரிவை முழுமையாக திருக்கோவில் தேர்தல் தொகுதிக்குள் கொண்டு வருவது 2ஆது வழியாகும். இப்பிரிவு 1947 இல் இருந்து 1989 வரையும் பொத்துவில் தேர்தல் தொகுதியின் ஒரு பகுதியாக இருந்துள்ளது.

மேலும் இன்றும் இப் பிரிவு மக்கள்தாம் பொத்துவில் தொகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொத்துவில் நகரத்தையே தங்களுக்குரிய சேவைகள் பொருட்களைப் பெறும் இடமாகக் கருதுகின்றார்கள். லகுகலை பிரதேச செயலகப் பிரிவின் மக்கள் தொகை 8914 ஆகும்.

மூன்றாவது மாற்றுவழி அக்கரைப்பற்று பிரதேச சபையின் கீழ் இருக்கும் ஆலையடி வேம்பு பிரதேச செயலகப் பிரிவை அண்டியிருக்கும் 5 கிராம அதிகாரி பிரிவுகளை திருக்கோவில் பகுதிக்குள் உள்வாங்குவது. மக்கள் தொகை 6730 ஆகும்.

மேற்குறிப்பிட்ட மூன்று மாற்று வழிகளில் ஏதாவது ஒன்றை தெரிந்தெடுத்தாலும் பல பிரச்சினைகள் ஏற்படும். இதனால் தகுதி காண் எண்ணிக்கைக்கு குறை வான 951 மக்கள் தொகையை விசேட நிலைப்பாடாகக் கொண்டு விலக்கழிப்பதே சிறந்த ஏற்பாடாகும்.

### தெஹியத்தகண்டி தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதி முன்னர் மக்கள் தொகை குறைந்த ஒரு சில பழைய குடியிருப்புகளை கொண்ட பிரதேசமாக இருந்தது. 1990 களில் இப்பிரதேசம் மகாவலி ஒழுங்குக்குட்பட்டதாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

1960க்கு முன்னர் இத் தொகுதி பிரதேசம் மட்டக்களப்பு தேர்தல் தொகுதிக்குள்ளும் 1960-1989 க்கும் இடைப்பட்ட காலத்தில் அம்பாறை தேர்தல் தொகுதிக்குள்ளும் இருந்தது. முதல் முறையாக இப்பிரதேசம் கிழக்கு மாகாண சபைக்கு ஒருதேர்தல் தொகுதியைப் பெறுகின்றது.


இத் தேர்தல் தொகுதிக்குள் அடங்கும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு, இத்தொகுதி முற்றும் முழு மையாக சிங்கள மக்களைக் கொண்டது.

### உகனை தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதிக்கள் அடங்கும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

| பிரிவு (தெஹியத்தி கண்டி தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| தெஹியத்திகண்டி பிரதேச செயலகப் பிரிவு | 60178 |
| படியத்தலாவ பிரதேச செயலகப் பிரிவு | 18290 |
| மகாஓயா பிரதேச செயலகப் பிரிவுக் குள் வரும் கிராம அதிகாரிகள் பிரிவு | |
| 144 A/1 கிடாபொல | 913 |
| 144 A கெக்கிரிகேன | 1611 |
| 137 லகுகல | 1193 |
| 137 A/1 பம்பதெனியா | 1641 |
| 144 B1 போகமுயாயா | 247 |
| 144 உனுவத்துற வுலுல | 1686 |
| | 85795 |

இத்தொகுதிக்குள் தமிழ் முஸ்லிம் மக்கள் வாழும் நாவிதன் வெளி பிரதேச செயலகப் பிரிவு உள்வாங்கப்பட வேண்டியுள்ளது. நாவிதன் வெளி பிரதேச செயலகப் பிரிவை இதன் அருகில் இருக்கும் கல்முனைத் தொகுதியு டனோ அல்லது சம்மாந்துறை தொகுதியுடனோ இணைக்க முடியாதுள்ளது. அவ்விரு தேர்தல் தொகுதிகள் மிகக்கூடிய மக்கள் தொகையைக் கொண்டுள்ளன. தேர்தல் தொகுதி நிர்ணய விதியை மாற்றாது நாவிதன்வெளிப் பிரிவை கல்முனையுடனோ அல்லது சம்மாந்து



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

| பிரிவு (உகன தேர்தல் தொகுதி) | மக்கள் தொகை |
|---|---|
| உகன பிரதேச செயலகப் பிரிவு | 58325 |
| நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவு | 18727 |
| மகா ஓயா பிரதேச செயலகப் பிரிவுக்குள் வரும் கிராம அதிகாரி பிரிவுகள் | |
| 145 தெம்பிட்டிய | 780 |
| 145 A பூலாவெல | 608 |
| 144 C பெடிரேக்கா | 655 |
| 144 D தேபொல்பெல | 1317 |
| 144 மகா ஓயா | 1219 |
| 136 A/2 சமகிபுர | 1815 |
| 136 A/1 பொறப்பொல | 939 |
| 136 கலவின்ன | 1506 |
| 136 B பொலேவெட்ட | 1966 |
| 136 A அறந்தலாவ | 1308 |
| | 90589 |

றையுடனோ இணைக்க முடியாது. குறைந்தது நாவிதன் வெளிப் பிரிவின் ஒரு பகுதியைக் கல்முனையுடனும் மறுபகுதியை சம்மாந்துறையுடன் இணைக்கவே மக்கள் விரும்புகின்றனர். இந்தக் கோரிக்கை பற்றி மாகாண தேர்தல் நிர்ணயக் குழுவே முடிவு எடுக்க வேண்டும். உகனப் பிரிவிலும் மகா ஓயாப் பிரிவிலும் முழுமையாக சிங்கள மக்கள் வாழ்கின்றார்கள். நாவிதன் வெளிப்பிரிவில் தமிழர்கள் 65 வீதமும் முஸ்லிம்கள் 34 வீதமாகவும் சிங்களவர் ஒரு வீதமாகவும் உள்ளனர்.

### அம்பாறை தேர்தல் தொகுதி

இத்தேர்தல் தொகுதிக்குள் வரும் பரப்புகளும் மக்கள் தொகையும் பின்வருமாறு,

அம்பாறை பிரதேச செயலகப் பிரிவு 43829

தமன பிரதேச செயலகப் பிரிவு 38692

லகுகல பிரதேச செயலகப் பிரிவு 8914

இத்தேர்தல் தொகுதியின் மொத்த மக்கள் தொகை 91435

இத்தேர்தல் தொகுதியில் 98 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் சிங்களவராவர். (தொடரும்)

# ஊழல் மோசடிகளை ஒழிக்க பாரிய வேலைத்திட்டம் ஒன்றை அரசு முன்னெடுத்துள்ளது



(கொழும்பு)

ஊழல் மற்றும் நிதி மோசடியை ஒழிப்பதற்காக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டதாக சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஊழல் மோசடிகளை ஒழிப்பதற்காக அரசாங்கம் பாரிய வேலைத்திட்டமொன்றை மேற்கொண்டுள்ளது. நிதி மோசடியை ஒழிப்பதற்காக பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த பிரிவின் ஊடாக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது வரை 13 வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக 93 பிரச்சினைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் சிக்கல் வாய்ந்தவையாகும். சில கொடுக்கல் வாங்கல்கள் வேறு நாடுகளில் இடம்பெற்றுள்ளன. அவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் குறித்து ஆராய்வதற்காக அந்த நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

உள்நாட்டு விசாரணைக் குழுக்களுக்கு விசேட அறிவை பெற்றுக்கொடுக்க வேண்டியுள்ளது. விசாரணை நடவடிக்கைகளுக்கு மனித வளங்களும் குறைவாக உள்ளன.

எனினும், அனைத்து சவால்களையும் வெற்றிகொண்டு இந்த விசாரணைகளில் முன்னேற்றம் காணப்பட்டு இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல் அமைப்பின் 19ஆவது திருத்தத்தின் கீழ் நாட்டில் சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுவப்பட்டன. இவற்றில் பொலிஸ் ஆணைக்குழுவும் ஒன்றாகும். இதன் மூலம் பொலிஸ் அதிகாரிகளால் அரசியல் அழுத்தங்கள் இன்றி தமது சேவைகளை நிறைவேற்ற முடிந்துள்ளது.

இந்த மாற்றத்தை மக்கள் கண்டுகொள்ள முடியும் என்று சட்டம் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)



யாழ்.ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்து உதவிப் பணிப்பாளர் ச.ரவி, பாடசாலை அதிபர் சோ.ஸ்ரீகிருஸ்ணா ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் சிறார்களின் கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சக்தி)

## நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள் மீறப்பட்டுள்ளன

### ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் நேர நடைமுறைகளின் மூலம் நாடாளுமன்ற வரப்பிரசாதங்கள் மீறப்பட்டுள்ளதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றஞ் சாட்டியுள்ளது.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நாடாளுமன்ற விவாதத்தின் போதே, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்குவது தொடர்பான நாடாளுமன்ற விவாதம், தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக இடம்பெற்றதாலேயே அவர் இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதேவேளை, கூட்டு உடன்படிக்கைக்கு அமைய, அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பணிகளை நேற்று முன்தினம் சீனா உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சோதிட நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம்

### அநுரகுமார கோரிக்கை



(கொழும்பு)

ஊடகங்களில் சோதிட நிகழ்ச்சிகளை நடத்தி மக்களை பிழையாக வழிநடத்த வேண்டாம் என ஜே.வி.பி கோரியுள்ளது. பணம் சம்பாதிக்கும் நோக்கத்தை முதனிலையாகக் கொண்டு போலிப் பிரசாரத்தில் ஈடுபடுவோரை அனுமதிக்கக்கூடாது என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் ஊடகங்களில் சோதிட நிபுணர்கள், அழகுக் கலை நிபுணர்கள் என்ற பெயரில் நிகழ்ச்சி நடத்துவோருக்கு எதிராக அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு நிகழ்ச்சி நடத்துவோரின் நிகழ்ச்சிகளுக்கு கீழே இது கட்டணம் செலுத்தப்பட்டு ஒளிபரப்புச் செய்யப்படும் நிகழ்ச்சி என்றேனும் ஒளிபரப்புச் செய்யப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)



வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் புதிதாக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை திறப்பு விழாவும் நடைபெற்றது. பாடசாலை அதிபர் தங்கவேலு செல்வக்குமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்நிகழ்வு இடம் பெற்றது. பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் மற்றும் மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா, கடற்படை அதிகாரி உள்ளிட்ட விருந்தினர்களை மாலை அணிவித்து அழைத்து வரப்பட்டதையடுத்து பிரதம விருந்தினர் திருவள்ளுவரின் சிலையைத் திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாணவர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்களை வழங்கினர். (படங்கள்:-மகாலிங்கம்)




# பெரிய பெரிய ஆசை...!

(09.12.2017 தொடர்ச்சி)

இந்த ஊர் ஜமீன்தாரா ஆகணும். அப்பத்தான் நம்மை எல்லாரும் மதிப்பாங்க. நீங்க அந்த மரத்திடம் போய் சொல்லி ஜமீன்தாரா ஆக்கச் சொல்லுங்க, என்றாள்.

விறகுவெட்டி மறுத்தான். ஆனால் மனைவியின் பிடிவாதம் வேறுவழியில்லாமல் மரத்திடம் போனான்.

மரம் முன்பாக விறகுவெட்டி போனதுமே, என்ன ஜமீன்தாராகனுமா? என்று கேட்டது.

அது என் மனைவியோட ஆசை என்றான். சரி. வீட்டிற்கு போ, என்றது மரம். விறகுவெட்டி வீட்டிற்கு திரும்பினான்.

அந்த நாட்டு ராஜா, அவனை ஜமீன்தாராக்கியசெய்தி காத்திருந்தது. கொஞ்ச நாள் சென்ற பின் ஜமீன்தார் வாழ்க்கையிலும் சலிப்புத் தட்டிப் போக அந்த நாட்டுக்கே ராஜா ஆக்கிட மரத்திடம் இன்றே போய்க் கேளுங்கள் என்றாள் அவன் மனைவி.

அவனும், வேண்டாம் இந்த வாழ்க்கையில் என்ன குறை கண்டாய் என்று சொல்லிப் பார்த்தான்.

அவளின் பிடிவாதம் அவன் மீண்டும் மரத்தின் முன் வந்து நின்றான்.

ராஜாவாக்கிப் பார்க்க ஆசை வந்துவிட்டதா? உன் மனைவிக்கு என்று கேட்டது மரம்.

உன் மனைவியின் ஆசைப் படியேநீ ராஜா ஆவாய்! ஆனால் ஒரு நிபந்தனை. உன் மனைவிக்கு இந்த ராஜா வாழ்க்கையிலும் சலிப்புத் தட்டி என்றைக்காவது விறகு வெட்டி வாழ்க்கையே மேல் என்று எப்போது எண்ணினாலும் நீ மறுபடியும் விறகு வெட்டியாகிவிடுவாய் என்று சொல்லி அனுப்பியது மரம்.

வீட்டுக்கு வந்தான்.

அரண்மனையின் பட்டத்து யானை மாலையுடன் வீட்டு முன் நின்றது. விறகுவெட்டி இப்போது



அந்த நாட்டு ராஜா!

ராஜாவாகப் பொறுப்பு ஏற்றதும் இராசாங்க அலுவல் அதிகமாக இருந்தது. அதனால் விறகு வெட்டி ராஜா தனது மனைவியிடம் பேசக்கூட நேரம் இல்லாமல் போனது. பகலில் அமைச்சர்கள், அதிகாரிகள் என்று எந் நேரமும் ஓய்வின்றி இருந்தான். இரவில் நகர்வலம், ஒற்றர்களுடன், படைத் தலைவர்களுடன் ஆலோசனை இப்படியாக ராஜா இரவு எந்த நேரத்தில் வந்து படுப்பார்என்றே தெரியாது.

காலையில் மனைவி எழுந்திருக்கும் முன்பு நீராடி கோட்டை கொத்தளங்களைப் பார்வையிடப் போய்விடுவார், ராஜா.

அதனால் கொஞ்ச நாளில் ராஜ வாழ்க்கையும் விறகுவெட்டியின் மனைவிக்கு வெறுத்துப் போக பேசாமல் "விறகுவெட்டி குடும்ப வாழ்க்கையே மேல்" என்று வாய்விட்டே சொன்னாள்!

அன்று எதிரி நாட்டு மன்னன் படைஎடுத்து வந்து அந்த நாட்டைக் கைப்பற்றினான்.

விறகுவெட்டி தலை தப்பினால் போதும் என்று மனைவியை அழைத்துக் கொண்டு தான் முன்பு வசித்த ஊருக்கே ஓடி வந்துவிட்டான்.

இப்போது, விறகுவெட்டி காட்டுக்குப் போய் முன்பு போல் விறகு வெட்டி சந்தோசமாக வாழ்க்கை நடத்தினான். அவன் மனைவியும் பேராசையை விட்டுவிட்டு கிடைப்பதை வைத்து சந்தோஷமாக வாழ்க்கை நடத்தப் பழகிக் கொண்டாள்.

நீதி:- தம்பி, தங்கைகளே! நமக்குக் கிடைத்ததை வைத்து சந்தோசமாக இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

உங்களிடம் இருக்கும் வசதி வாய்ப்பை விட கூடுதல் வசதி வாய்ப்பு உள்ளவர்களைப் பார்த்து நமக்கு அவர்களைப் போல இல்லையே என்று ஏங்கக்கூடாது!

உங்களை விட வசதி வாய்ப்புக் குறைந்தவர்களை எண்ணிப் பார்த்து அவர்களைவிட நாம் சந்தோஷமாக இருக்கிறோமே என்று எண்ணுங்கள். அதே நேரத்தில் காலம் கரைத்துவிட முடியாத கல்வியை நீங்கள் கருத்தாக கற்றால், பிற்காலம் உங்களுக்கு நற்காலமாய் மலரும்! என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

முற்றும்.




- ❖630- 10,000 போர்வீரர்களுடன் முகம்மது நபி மக்கா நோக்கிச் சென்றார்.
- ❖861- அப்பாசியாவின் கலீபா அல்-முத்தவாக்கி துருக்கியப் படையினரால் படுகொலை செய்யப்பட்டார்.
- ❖969- பைசாந்தியப் பேரரசர் இரண்டாம் நிக்கபோரசு அவரது மனைவி தியோபானோவினாலும், அவளது காதலனாலும் (பின்னாள் பேரரசர் முதலாம் ஜான்) படுகொலை செய்யப்பட்டார்.
- ❖1282- வேல்சின் கடைசி பழங்குடி இளவரசர் கடைசி லெவெலின் கொல்லப்பட்டார்.
- ❖1792- பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி தேசத் துரோகக் குற்றச்சாட்டுகளுக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.
- ❖1816- இந்தியானா ஐக்கிய அமெரிக்காவின் 19வது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- ❖1907- நியூசிலாந்தின் நாடாளுமன்றக் கட்டடம் முற்றாகத் தீக்கிரையானது.
- ❖1927- கம்யூனிச செம்படையினர் சீனாவின் குவாங்சௌவில் கிளர்ச்சியை ஏற்படுத்தி, நகரின் பெரும் பகுதியைக் கைப்பற்றி குவாங்சௌ சோவியத்தை அறிவித்தார்கள்.
- ❖1936- ஐக்கிய இராச்சியத்தின் மன்னர் எட்டாம் எட்வர்டு முடிதுறந்தார்.
- ❖1937- எஸ்தோனியாத் தலைவர் ஜான் ஆன்வெல்ட் ஸ்டாலின் ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- ❖1937- இத்தாலி உலக நாடுகள் சங்கத்தில் இருந்து வெளியேறியது.
- ❖1946- ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் அமைக்கப்பட்டது.
- ❖1958- அப்பர் வோல்ட்டா பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ❖1962- கனடாவில் கடைசி மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- ❖1964-சே குவேரா ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றினார். இவர் உரையாற்றிக் கொண்டிருந்தபோது ஐ.நா. கட்டடத்தின் மீது குண்டுத் தாக்குதல் இடம் பெற்றது.

பிறப்புகள்

- ❖1781- டேவிட் புரூஸ்டர், இசுக்கொட்டிய இயற்பியலாளர், கணிதவியலாளர், வானியலாளர் (இ. 1868)
- ❖1789- மிரோன் வின்சுலோ, அமெரிக்க மதப்பரப்புனர் (இ. 1864)
- ❖1803- ஹெக்டர் பேர்லியோஸ், பிரான்சிய இசையமைப்பாளர் (இ. 1869)
- ❖1911- நகிப் மஹ்ஃபூஸ், நோபல் பரிசு பெற்ற எகிப்திய எழுத்தாளர் (இ. 2006)
- ❖1969- விசுவநாதன் ஆனந்த், இந்திய சதுரங்க வீரர்
- ❖1969-மாக்ஸ் மார்டினி, அமெரிக்க நடிகர், இயக்குநர்
- ❖1980- ஆர்யா, தமிழ்த் திரைப்பட நடிகர்

இறப்புகள்

- ❖384- முதலாம் தாமசுஸ் (திருத்தந்தை) (பி. 305)
- ❖1241- ஒகோடி கான், மங்கோலியப் பேரரசர் (பி. 1186)
- ❖1937-ஜான் ஆன்வெல்ட், எசுத்தோனிய அரசியல்வாதி (பி. 1884)
- ❖1977- ஹன்டி பேரின்பநாயகம், இலங்கைத் தமிழ்க் கல்விமான், சமூக சேவையாளர், அரசியல்வாதி (பி. 1899)
- ❖2002- நானி பல்கிவாலா, இந்திய அரசியல்சட்ட நிபுணர், பொருளியல் அறிஞர் (பி. 1920)
- ❖2004- எம். எஸ். சுப்புலட்சுமி, கர்நாடக இசைப் பாடகி (பி. 1916)

சிறப்பு நாள்

- ❖குடியரசு நாள் (புர்க்கினா பாசோ, 1958)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 160 | 110 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 55 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 320 | 600 | 300 |
| தக்காளி | 100 | 100 | 80 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 30 | 30 | 40 | 60 |
| கோவா | 100 | 150 | 80 | 160 | 120 |
| கரட் | 180 | 300 | 200 | 240 | 200 |
| பூசணி | 60 | 100 | 40 | 100 | 60 |
| புடோல் | 120 | 100 | 60 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 120 | 60 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 320 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 110 | 160 | 180 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 100 | 60 |
| பயற்றங்காய் | 180 | 200 | 120 | 200 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 240 | 240 | 200 |
| பீற்றூட் | 120 | 200 | 150 | 200 | 140 |
| கறிமிளகாய் | 450 | 400 | 320 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 350 | — | 160 | 320 | 400 |
| போஞ்சி | 180 | 250 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 90 | 100 | 140 |
| கீரை - 1பிடி | 80 | 50 | 40 | 40 | 50 |
| தேசிக்காய் | 60 | 40 | 50 | 100 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 75 | 60-100 | 100 |
| இராசவள்ளி | — | — | 300 | 300 | — |
| வெங்காயப்பூ | 350 | — | 300 | 240 | 250 |
| முள்ளங்கி | 80 | — | 60 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 80 | — | 40 | 40 | 40 |
| வல்லாரை | 30 | — | 15 | 25 | 40 |
| ஈரப்பலா | 80 | — | 70 | 120 | 80 |

தன் சிந்தனையைப் பற்றி இறுதிவரையில் சொல்ல அஞ்சாதவன்தான் உண்மையில் சுதந்திரமான மனிதன். ~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் - செல்வா யாராலும் காப்பாற்ற முடியாது - கடவுள்

தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றார் தந்தை செல்வநாயகம். இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களை ஏமாற்றியதன் காரணமாக அப்படியொரு முடிவுக்கு தந்தை செல்வநாயகம் வந்தார்.

அன்று தமிழ் அரசியல் தலைமைகள் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இருந்தது.

ஆனால் இன்று தமிழ் அரசியல் தலைமைகள் மீது அவநம்பிக்கையைத் தவிர வேறு எதுவுமில்லை என்றாயிற்று.

தமிழ் மக்கள் சார்ந்த, தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட, தமிழ் மக்கள் தங்களின் உயிரைத் தியாகம் செய்த ஒரு விடயத்தை தமிழ் அரசியல் தலைமை அணுகிய முறை தமிழ் மக்களிடம் மிகுந்த வேதனையைத் தந்துள்ளது.

விடுதலைப் போராட்டம் தோல்வியில் முடிந்திருக்கலாம். அதற்காக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்தவர்கள்; அவர்களின் குடும்பங்கள்; விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு படையினரால் விசாரணை செய்யப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டு முன்னாள் போராளிகள் என்ற பெயருடன் இருக்கக்கூடியவர்கள் என ஏகப்பட்டவர்கள் மௌனமாக இருக்கின்றனர்.

போராட்டம் தோல்வியில் முடிந்ததால் மௌனம் ஒன்றுதான் ஒரே வழி என்பது அவர்களின் தவிர்க்க முடியாத தீர்மானமாயிற்று.

நிலைமை இதுவாக இருக்க, தேர்தல் என்பதனூடாக, முன்பு அரசியலில் ஈடுபட்டவர்கள் என்பதற்காக தமிழ் மக்கள் வாக்களித்து குறிப்பிட்டவர்களை மக்கள் பிரதிநிதிகளாக்கி விட, அவர்கள் சிங்கள ஆட்சியாளர்களோடு சேர்ந்து தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டனர்.

அரசாங்கத்துடன் சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்றால் அதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால் அது பற்றி தமிழ் மக்களுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

சர்வதேச விசாரணை அவசியம் என்று தமிழ் மக்கள் நினைத்தபோது, அதனை வலியுறுத்துவதே தமிழ் அரசியல் தலைமையின் தலையாய கடமையாக இருக்க வேண்டும்.

ஆனால் இவை எதனையும் செய்யாமல், கொழும்பில் குந்தியிருந்து ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகத் தீர்மானம் எடுத்திருந்தால் தமிழ் மக்கள் நடுத்தெருவில் நிற்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பது தெட்டத்தெளிவான உண்மை.

மக்கள் பிரதிநிதிகள் எனும்போது அவர்கள் மக்களுடன் கலந்துரையாட வேண்டும். மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து சர்வாதிகாரப் போக்கில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் பிரச்சினையை கையாள நினைத்தமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்ட மிகப்பெரும் தவறு எனலாம்.

இப்போதுகூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை என்பது தேர்தலுக்கான சமாளிப்பேயன்றி அது விசுவாசமான ஒற்றுமையல்ல என்பதே உண்மை.

இந்த முறை தேர்தலோடு எல்லாருடைய ஒற்றுமையும் தமிழ் மக்களுக்கானதா அல்லது அவரவர் பதவிக்கும் சுயலாபத்துக்குமானதா என்பது தெரிந்து விடும்.

அப்போதுதான் தமிழ் மக்களுக்குத் தெரியவரும் தமிழரை கடவுளாலும் காப்பாற்ற முடியாதென்று.

## மரணமடைந்தவரின் ஏ.ரி.எம் அட்டையிலிருந்து பணம் திருட்டு

மரணமடைந்தவரின் ஏரிஎம் அட்டையினைத் திருடி கணக்கில் இருந்த 84 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த நபர் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளனர்.

துன்னாலைப் பகுதியில் வசித்துவரும் குடும்பஸ்தர் ஒருவர் எழுதுமட்டுவாழ் பகுதியில் உள்ள தோட்டத்துக்கு சென்ற சமயம் கடந்த 2ஆம் திகதி மாரடைப்பு ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்தார்.

அவரிடம் இருந்த ஏரிஎம் காட் உட்பட ஆவணங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த ஏரிஎம் அட்டை காணாமல் போனமையினை அடுத்து வீட்டார் வங்கிக்கு சென்று பார்த்தபோது 84 ஆயிரத்து 500 ரூபாய் நிலுவையில் இருந்த பணம் மறுநாள் 3 ஆம் திகதி இரண்டுதடவையாக 84 ஆயிரம் ரூபாய் எடுக்கப்பட்டமை தெரியவந்தது.

இது தொடர்பில் நேற்று மாலை நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாட்டினை அடுத்து நெல்லியடிப் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (மு-60)

## இளம் யுவதி சடலமாக மீட்பு

நெடுங்கேணி பளம்பாசிப பகுதியில் இளம் யுவதி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை குறித்த யுவதி தனது வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பளம்பாசியினை சேர்ந்த 20 அகவையுடைய யோகானந்தராசா கம்சிகா என்ற யுவதியே இவ்வாறு தவறான முடிவை மேற்கொண்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

சம்பவம் அறிந்து குறித்த பகுதிக்கு விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார் சடலத்தை மீட்டு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

மருத்துவமனையில் சட்ட மருத்துவரின் மரண விசாரணை அறிக்கையின் பின்னர் நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (மு-281)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




### தொப்புள் கொடியை என்ன செய்வது?

சிசுவின் தொப்புள் கொடி விழுந்த பின்பு அதை வீட்டு முற்றத்தில் வாசலுக்கு நேராக புதைக்கவேண்டும் என்பது ஆசாரம். குழந்தை பிறந்த 20 அல்லது 28 நாட்களில் குழந்தைக்கு கொடிகட்டுவது என்ற ஒரு சடங்கு செய்வார்கள். சரடு பஞ்சலோகத்தால் ஆனதாக இருக்க வேண்டும். கறுப்புக் கயிற்றில் பஞ்சலோக முத்துக்களைக் கோர்த்து குழந்தைக்குக் கட்டிவிடுவார்கள்.

அன்றைய தினம் காலையில் குழந்தையைக் குளிப்பாட்டி கண்களில் கையெழுதி பொட்டு வைத்து அழகுபடுத்துவார்கள். அந்த முகூர்த்தத்தில் குத்து விளக்கேற்றி தலை வாழை இலையில் அவல், பூ, பழம், சர்க்கரை, தேங்காய் ஆகியவற்றை வைத்து குத்துவிளக்கின் அருகில் குழந்தையின் தந்தை, தாய்மாமன் அல்லது தாய் யாராவது ஒருவர் குழந்தையை மடியில் படுக்க வைத்து குலவையிட்டு குறிப்பிட்ட நல்ல நேரத்தில் குழந்தையின் இடுப்பில் அந்தப் பஞ்சலோகச் சரடைக் கட்டவேண்டும்.

அதன்பிறகு அரைஞான் கொடி முதலியவற்றை குழந்தைக்கு அணிவிக்கலாம். குழந்தைக்குப் பெயர் சூட்டலாம். இந்தச் சடங்கு முடிந்தவுடன் தாய் குழந்தையை வாசல் மற்றும் சமையலறைக்குள் கொண்டு செல்வாள். (தொடரும்)

## தேர்தலுக்கு முகவர்களை நியமித்தது தமிழ் அரசு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் அரசுக் கட்சி மாவட்ட ரீதியில் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் விபரங்களை, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளது.

வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களுக்குமாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களின் விபரங்களை தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார்.

இதன்படி, யாழ்ப்பாணம் - மாவை.சோ.சேனாதிராசா, கிளிநொச்சி - சி.சிறீதரன், மன்னார் - இ.சாள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு - சாந்தி சிறிஸ்கந்தராசா, வவுனியா - ப.சத்தியலிங்கம் ஆகியோர் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (மு-1)

## கடல் அலையில் சிக்கி ரஷ்ய பயணி உயிரிழப்பு

(காலி)

ஹிக்கடுவ கடலில் குளித்துக்கொண்டிருந்த ரஷ்ய உல்லாசப் பயணி (வயது-52) ஒருவர் திடீரென எழுந்த அலையில் சிக்கி உயிரிழந்தார். ஹிக்கடுவ - திரணகமவில் உள்ள சுற்றுலா விடுதியொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சில நாட்களுக்கு முன் உல்லாசப் பயண நிமித்தமாக இலங்கை வந்த அவர், சம்பவத்தின்போது உக்ரேன் நாட்டைச் சேர்ந்த தனது மனைவியுடன் கடலில் குளித்துக் கொண்டிருந்ததாகவும் திடீர் அலையில் இருவரும் இழுத்துச் செல்லப்பட்டபோதும் மனைவி மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டதாகவும் விடுதிப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட அவரது உடல், காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (மு-1)

## மன்னார், மட்டு. நீதிபதிகளின் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

(மல்லாவி)

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜாவினதும் மட்டக்களப்பு கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகவுள்ள மா.கணேசராஜாவினதும் வருடாந்த இடமாற்றங்கள் இடைநிறுததப்பட்டுள்ளதாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

இலங்கை நீதிச் சேவை ஆணைக்குழுவினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் கீழ் உள்ள நீதிமன்றங்களில் கடமையாற்றி வரும் நீதிபதிகளுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கப்பட்டிருந்த வருடாந்த இடமாற்றத்திற்கு அமைவாக மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக தற்போது கடமையாற்றி வரும் மா. கணேசராஜா மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் இடமாற்றங்கள் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது இவர்களுக்கான இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (மு-15)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனிதன், வாழ்வில் உயர்வில் ஈசன்



கடவுள் எனப் படுபவனே மனிதனானான்,
கருத்தியங்கி, கருத்துயர்ந்து, கருத்தறிந்தான்
கடவுளாய் அனைத்துமே கண்டு விட்டான்
காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்
கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்
கருத்துணர்ந்த நூல்கள் பல எழுதிவைத்தான்
கடவுள் ரகசியமதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்ததெனக் கொண்டான் ஞானி.

எந்தத் தத்துவத்தைக் கடவுள் என்று சொல்லுகிறோமோ, அதுவே அதன் பரிணாம உச்சத்தில் மனிதனாகவும் இருக்கிறது.

மனிதன் தன் அறிவை இயக்கி, அறிவை உயர்த்தி, அறிவையும் அறிந்து விட்டான். அவ்விளக்க நிலையில் தானே எல்லாமாய் இருக்கும் நிலையையும் கண்டுவிட்டான். காண்பவனே மூலமாகவும் முடிவாகவும் இருக்கும் ஏக நிலையைக் கண்டு கொண்டான்.

இந்த நிலையை அறிந்தவன் அறியாதவர்களுக்கு உணர்த்தும் சிறந்த நோக்கத்தோடும், பொதுவாக அறிவைப் பண்படுத்தும் பொருட்டும், ஆராயத் தூண்டும் பொருட்டும், பல நூல்களும் எழுதினான்.

மூலாதாரத் தத்துவத்தின் இரகசியத்தை அறியா நிலையில் - அறிய வேண்டிய நிலையில் - உள்ள யாவருக்கும் அறிய ஆவன செய்வதைத் தன்னிலை விளக்கம் பெற்ற ஞானிகள் தங்கள் கடமையாக் கொண்டார்கள். தம்மையறிந்தவுடன் ஞானிகளின் கடமை தீர்ந்து விடவில்லை.

அரூபமான பேராதார சக்தி நிலையில், ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை நோக்குகிறான். கோடானு கோடி உருவங்களில், தானே பல்வேறு திறத்தவனாய், வேறுபாடாய், உயிரியக்கம் அறிவியக்கமாய், அறிவியக்க நிலையிலும் பல தரப்பட்டதாய், அறிவு நிலையாய், அறிவு நிலையிலும் பல்வேறு துறைகளாய், அளவினதாய், இருப்பதை உணருகிறான்.

# திருக்குமரன் விளையாட்டுகழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்ட சுற்றுப்போட்டியொன்றை திருக்குமரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

48 அணிகள் பங்குபற்றுகின்ற இந்தச் சுற்றுப்போட்டியில், தற்போது முதற்சுற்று ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன.

7 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில், உரும்பிராய் அண்ணா ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதியது. இதில் அண்ணா ஸ்ரார்ஸ் அணி. 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

8 ஆம் திகதி, மயிலங்காடு ஞானமுருகன் அணியும், அராலி ஏ எல் விளையாட்டுக்கழக அணியும் மோதவிருந்தன. எனினும், அராலி அணி வருகை தராமையால், ஞானமுருகன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

9 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணியும், துறையூர் ஐயனார் அணியும் மோதின. ஆட்ட நேரத்தில் இரண்டு அணியும் தலா ஒவ்வொரு கோல்களைப் பெற்றிருந்தன. வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நடாப்பட்டு. அதில் ஐயனார் அணி 5:4 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# சமரபாகு நியூட்டன் உதைபந்தாட்டம் காலிறுதியில் கலைமதி-கரணவாய் கொலின்ஸ்

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில், அணிக்கு 7 பேர் கொண்ட கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று கழக விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் வடமராட்சியைச் சேர்ந்த 40 அணிகள் பங்குபற்றுவதுடன், அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நொக்கவுட் முறையில் நடைபெற்று வருகின்றன. நொக்கவுட் முறையில் ஆட்டங்கள் இடம் பெற்று, தொடர்ந்து காலிறுதி யாட்டம் லீக் முறையில் இடம் பெறவுள்ளது.

லீக் முறையில் நடைபெறவுள்ள காலிறுதியாட்டங்களுக்கு, கரணவாய் கொலின்ஸ் மற்றும் கலைமதி ஏ அணிகள் தகுதி பெற்றுள்ளன.

நொக்கவுட் சுற்றின் ஆட்டங்கள் இரண்டு கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றன.


கலைமதி ஏ அணியை எதிர்த்து கலட்டி ஐக்கியம் அணி மோதியது. இதில் கலைமதி ஏ அணி. 10:01 என்ற அபாரமான கோல்கள் எண்ணிக்கையில் வென்றது.

இரண்டாவது போட்டியில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரீ அம்பாள் ஏ அணி மோதியது.

இப்போட்டியில் கொலின்ஸ் அணி. 1:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த இரண்டு அணிகளும், தற்போது லீக் முறையில் நடைபெறவுள்ள காலிறுதியாட்டங்களுக்கு தகுதி பெற்றுள்ளது. (க-26)

# தெ.ஆபிரிக்காவை வென்றால்தான் இந்தியா பலமான அணி- ஸ்மித்



இந்திய அணிக்கு, தென் ஆபிரிக்கா மண்ணில்தான் உண்மையான சோதனை காத்திருக்கிறது என்று தென் ஆபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஸ்மித் கூறியுள்ளார்.

தற்போது இலங்கை அணிக்கு எதிரான தொடரில் விளையாடி வரும் இந்திய அணி, இத்தொடர் முடிந்தவுடன் தென் ஆபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

கோலி தலைமையிலான இந்திய அணி டெஸ்ட் தொடரில் தற்போது வரை 9 வெற்றிகளை பெற்று அவுஸ்திரேலியாவின் சாதனையை சமன் செய்துள்ளது.

தென் ஆபிரிக்க மண்ணில் நடைபெறும் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி வெல்லும் பட்சத்தில், தொடர்ந்து 10 வெற்றிகள் பெற்ற அணி என்ற உலக சாதனையை படைக்கும். இந்திய அணியின் உலக சாதனைக்கு தென் ஆபிரிக்கா முட்டுக்கட்டை போடுமா, அல்லது இந்தியா வெற்றி பெற்று சாதித்து காட்டுமா? என்பது தொடர் முடிந்த பின்புதான் தெரியும்.

இந்நிலையில் இத்தொடர் குறித்து தென் ஆபிரிக்க அணியின் முன்னாள் வீரர் கிரீம் ஸ்மித், தென் ஆபிரிக்காவின் வேகப்பந்து வீச்சு மற்றும் சொந்த மண்ணில் உள்ள திறமை, இந்திய அணிக்கு உண்மையான சோதனையாக இருக்கும்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் ஆக்ரோஷமாக பந்து வீசினால்தான் தென்ஆபிரிக்கா மண்ணில் வெற்றி பெற முடியும் என்று அவர் கூறியுள்ளார். (க)

# குத்திய குத்தில் காது கிழிந்தது



அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் உள்ள சின் சிட்டியில் நேற்று முன்தினம் குத்துச்சண்டை போட்டி நடைபெற்றது. இதில் மெக்சிகோவின் பிரான்சிகோ வர்காஸ் - இங்கிலாந்தின் லிவர்பூலைச் சேர்ந்த ஸ்டீபன் ஸ்மித் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

உலக சம்பியனுக்காக நடைபெற்ற இந்த போட்டியில் மெக்சிகோ வீரர் பிரான்சிஸ்கோ வர்காஸ் ஆதிக்கம் செலுத்தினார்.

இவரது தாக்குதலுக்கு ஸ்டீபன் ஸ்மித்தால் ஈடுகொடுக்க முடியவில்லை.

9ஆவது சுற்றின்போது பிரான்சிஸ்கோ வர்காஸ் குத்தியதில் ஸ்டீபன் ஸ்மித்தின் காது கிழிந்து தொங்கியது. இரத்தம் சொட்ட சொட்ட நின்ற ஸ்டீபன் ஸ்மித்தை பார்த்து ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இருந்தாலும் ஸ்டீபன் ஸ்மித் அடுத்த ரவுண்டிற்கு தயாரானார்.

ஆனால், ரிங் சைடு டாக்டர் அவரை விளையாட அனுமதிக்கவில்லை.

இதனால் போட்டி அத்துடன் நிறுத்தப்பட்டது. இதனால் வர்காஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

வீரரின் காது கிழிந்ததும், ரசிகர்களுக்கு மைக் டைசன் ஹோலிபீல்டிங் காதை கடித்தது தான் ஞாபகத்திற்கு வந்து சென்றது. (க)

# கோலியின் திருமணத்திற்கு சச்சின்,யுவராஜுக்கு அழைப்பு



கோலி திருமணத்துக்கு கிரிக்கெட் உலகிலிருந்து சச்சின் டெண்டுல்கர் மற்றும் யுவராஜ் சிங்குக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்திய கிரிக்கெட் அணி தலைவர் விராட் கோலியும், பிரபல நடிகை அனுஷ்கா சர்மாவும் காதலித்து வருகிறார்கள்.

இருவருக்கும் நாளை இத்தாலியின் மிலான் நகரில் திருமணம் நடக்கவுள்ளதாக கூறப்படுகிறது.

இது குறித்த அறிவிப்பு எதுவும் அதிகாரபூர்வமாக வெளியிடப்படவில்லை. இந்நிலையில் திருமணத்தில் கலந்து கொள்பவர்கள் குறித்த புது தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

அதாவது, கோலி சார்பில் கிரிக்கெட் உலகிலிருந்து சச்சின் டெண்டுல்கர் மற்றும் யுவராஜ் சிங்குக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாம்.

அதே போல கோலிக்கு சிறு வயதில் பயிற்சியளித்த பயிற்சியாளர் ராஜ்குமார் சர்மாவுக்கும் அழைப்பு போயுள்ளது.

திருமண நிகழ்வானது எளிமையாக நடக்கவுள்ளதால் மிக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# ஐ.பி.எல்.தொடரின் போது சர்வதேச போட்டிகள் கிடையாது

## ஐ.சி.சி சம்மதம்

இந்திய கிரிக்கெட் வாரியத்தால் இந்தியன் பிரிமீயர் லீக் (ஐ.பி.எல்.) தொடர் நடத்தப்பட்டு வருகிறது. 20 ஓவர்கள் கொண்ட இந்த லீக்கிற்கு உலகளவில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. ஐ.பி.எல். கடந்த 10 வருடங்களாக ரசிகர்களின் பேராதரவோடு வீறுநடை போட்டு சென்று கொண்டிருக்கிறது.

அடுத்த வருடம் 11 சீசன் நடைபெற இருக்கிறது. ஐ.பி.எல். தொடரை மேலும் வலுப்படுத்தும் வகையில் பிசிசிஐ பல்வேறு முயற்சிகள் எடுத்து வருகிறது. அதிக அளவில பணம் கிடைப்பதால் வெளிநாட்டு வீரர்கள் அதிக அளவில் விளையாடுவதற்கு ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

வருகிற 2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐ.சி.சி. டெஸ்ட் சம்பியன் லீக் தொடரை நடத்த இருக்கிறது. டெஸ்ட் சம்பியன் லீக் தொடர் நடைபெற்றாலும் இரு நாடுகளுக்கு இடையிலான தொடர் நடத்தவும் ஐ.சி.சி. சம்மதம் தெரிவித்துள்ளது.

இதனால் 2020இல் இருந்து உலகளவில் ஐ.பி.எல். நடத்தப்படும்போது மற்ற சர்வதேச போட்டிகள் இருக்காது என எதிர்பார்க்கப்படுகிறது. (க)

# இருபதுக்கு 20 போட்டி வருகிறார் லசித்மலிங்க



இந்தியாவுக்கு எதிரான இருபது-20 போட்டிகளுக்கான இலங்கை அணியின் முன்னோட்ட 20 வீரர்களின் பட்டியலில் மலிங்க மற்றும் ஜீவன் மெண்டீஸ் பெயர் இடம் பெற்றுள்ளது. நடைபெறும் ஒரு நாள் தொடருக்கு பின்னர் இரு அணிகள் பங்கேற்கும் மூன்று இருபது-20 போட்டிகள் நடக்கவுள்ளது. இதற்கான இலங்கை அணியின் முன்னோட்ட 20 வீரர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து அணியில் புறக்கணிக்கப்பட்டு வரும் அனுபவ வீரர்களான லசித் மலிங்க மற்றும் ஜீவன் மெண்டீஸ் பெயர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

போட்டிகள் தொடங்குவதற்கு முன்னர் இதிலிருந்து 15 பேர்கள் மட்டும் விளையாடும் அணிக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

34 வயதான மெண்டீஸ் கடைசியாக இலங்கை அணிக்காக இருபது-20 போட்டிகளில் 2013 இல் விளையாடினார்.

மலிங்கவும் தொடர்ந்து சோபிக்காத காரணத்தால் சில மாதங்களாக அணியில் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## கூட்டு எதிரணி...

நேற்று பிற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதியை சந்தித்த பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீயானி விஜேவிக்கிரம ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்து எதிர்கால அரசியல் பணிகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்தார். (மு-1)

## ஊடகவியலாளர் மீதான...

தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மல்லாவிப் பகுதியில் இருந்து இலக்கத் தகடு மறைக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இளைஞர்களால் பாலைப்பாணிச் சந்திக்கு அண்மித்த பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

இதையடுத்து மாங்குளம் சந்திக்குச் சென்ற குறித்த குழுவினர் உணவகம் ஒன்றின் முன்பாக நின்ற இளைஞரைச் சரமாரியாகத்தாக்கி படுகாயப்படுத்திய நிலையில் குறித்த இளைஞர் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொதுவைத்தியசாலையின் அவசரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை மாங்குளம் பொலிஸார் கைது செய்து முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து, மேற்படி மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

## ரயில்வே ஊழியருக்கு...

இந்தப் பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக, பயணிகளின் பெரும் சிரமத்தினை எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில், பணிப்பகிஷ்கரிப்பை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு தொடருந்து தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. நேற்று முற்பகல் தொழிற்சங்கங்களுக்கு இடையில் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தும் வர்த்தமானியை வெளியிட்ட போதிலும் பணிப்பகிஷ்கரிப்பை தொடர்வதற்கு தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தமது கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுதரும் வரையில் தாம் சேவைக்கு சமுகமளிப்பதில்லை என அவை கூறியுள்ளன. தொடருந்து சேவையை, அத்தியாவசிய மக்கள் சேவையாக பிரகடனப்படுத்தி வெளியிடப்பட்ட வர்த்தமானி, அறிவிக்கப்பட்டுள்ளதால், சேவைக்கு சமுகமளிப்பதற்காக ஊழியர்களுக்கு இன்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இன்று சேவைக்கு சமுகமளிக்காதவர்கள் சேவையைவிட்டு இடைவிலகியவர்களாக கருதப்படுவர் என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ஜீ.எஸ் விதானகே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-1)

(மற்றொரு செய்தி உள்ளே)

## வாள்வெட்டுக் குழு...

யாடுமாறு கோரியதால் தங்களால் முறைப்பாடு செய்ய முடியாமல் போய்விட்டது என வீட்டார் கூறினர்.

இதேவேளை ஒரு மாதத்திற்கு முன்னர் இதே வீட்டில் இதே போன்ற ஒரு தாக்குதல் சம்பவம் நடைபெற்ற நிலையில் அந்த சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் தற்போது அது தங்களுடைய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது இல்லை என கூறுவது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போது வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியின் பணிப்பின் பேரில் விசேட நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வரும் நிலையில், மானிப்பாய் பொலிஸாரின் இந்த நடவடிக்கை ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் தெரிவித்தனர். (மு-4)

## படித்த சிங்களவர்...

அண்மையில் றியர் அட்மிரல் சரத் வீரசேகரவால் ஊடகமொன்றுக்கு, விக்னேஸ்வரன் பதவி விலக வேண்டும் என்கின்ற தலைப்பில் வழங்கப்பட்ட நேர்காணல் தொடர்பாக பதிலளிக்க வேண்டிய தேவையுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் தனது கருத்துக்களை வடக்கு மாகாண முதலமைச்சர் மின்னஞ்சலின் ஊடாக வழங்கியுள்ளார்.

அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

**முதலமைச்சர்:** வடக்கு கிழக்கு அல்லது நாட்டின் ஏனைய ஏழு மாகாணங்களிலும் வாழும் மக்கள் தமது தனிப்பட்ட கலாசாரம், மரபு மற்றும் அவர்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தம்மைத் தாமே ஆளும் கூட்டாட்சி நிர்வாக அலகின் மூலம் இந்த நாட்டின் ஒன்றிணைப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் சிங்கள மக்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைத் தொடர்ந்தும் அவர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே றியர் அட்மிரல் வீரசேகர ஒற்றையாட்சி நிர்வாக அலகை விரும்புவது போல் தோன்றுகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த போது இங்கு வாழும் சிறுபான்மை சமூகங்களின் நலன்களையும் பேணுவதாக அரசியல் சாசனத்தின் 29-வது பிரிவை அனுமதித்ததன் மூலம் சிங்களவர்கள் வாக்குறுதி அளித்தனர்.

ஆனால் அடுத்த ஆண்டே அதாவது 1949இல், மலையக தமிழ் மக்களின் வாக்குரிமைகளை சிங்களத் தலைவர்கள் பறித்தனர். இதேபோன்று சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப் பறிக்கும் முகமாக சிங்களம் மட்டும் சட்டம் மற்றும் கல்வித் தரப்படுத்தல் சட்டம் போன்றனவும் நடைமுறைப் படுத்தப்பட்டன. பாரம்பரிய தமிழ் பிரதேசங்கள் கொலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்டன. இவை சிறுபான்மை மக்களைப் பெரிதும் பாதித்தன.

இலங்கை ஒரு ஒற்றையாட்சி நாடு எனவும் ஒற்றையாட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சிங்களவர்கள் பல்வேறு அளப்பரிய தியாகங்களைப் புரிந்துள்ளதாகவும் சரத் தெரிவித்துள்ளார்.

**முதலமைச்சர்:** இது பொய். இவர் வரலாற்றை எங்கே கற்றுக்கொண்டார்? 1833 வரை இந்த நாடு பிரிக்கப்பட்டிருந்தது. தமிழ் பேசும் மக்கள் தமக்கென தனியான ஒரு இராச்சியத்தையும் கிழக்கு மாகாணமானது குறுநில தமிழ்த் தலைவர்களாலும் ஆளப்பட்டன. வடக்கும் கிழக்கும் இணைந்து தமிழ் பேசும் பிரதேசமாக நிர்வகிக்கப்பட்டன. இத்தீவில் மூன்று அல்லது நான்கு தனித்தனியான இராச்சியங்கள் காணப்பட்டன. 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாளன் என்கின்ற தமிழ் மன்னன் இத்தீவு முழுவதையும் ஒன்றிணைத்து தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் வரை ஒருபோதும் இங்கு ஒற்றையாட்சி நிர்வாகம் காணப்படவில்லை.

இந்த நாட்டில் கூட்டாட்சி நிர்வாக அலகு ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாடு பிளவுபட்டு விடும் என றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்திருந்தார்

**முதலமைச்சர்:** தற்போது கூட இந்த நாடு பிளவுபட்டே காணப்படுகிறது. இது சிங்கள பௌத்த தேசம் அல்ல. இங்கு கிறிஸ்தவ மற்றும் இந்து மதங்களைப் பின்பற்றும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவ, பௌத்த மதங்களைப் பின்பற்றும் சிங்களவர்கள், வேடுவர்கள் ஆகிய சகல இன மதத்தினருக்கும் இந்த நாடு சொந்தமானதாகும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பின் மூலம் செயற்கையான ஒற்றுமை ஒன்று இங்கு காணப்படுகிறது. ஒற்றையாட்சி அரசியலமைப்பின் முழுமையான அதிகாரத்தையும் சிங்களவர்கள் கொண்டுள்ளதால் இந்த நாட்டை அவர்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றனர். இதுவே இங்கு பிரச்சினை ஏற்படுவதற்கான காரணமாகும்.

பிரித்தானிய ஆட்சியாளர்கள் சிங்களவர்கள் மீது வைத்திருந்த நம்பிக்கையை சிங்களவர்கள் தவறாகப் பயன்படுத்துவதுடன் சிங்களவர்கள் ஆரம்பத்திலிருந்து தமிழ் மக்களின் உரிமைகளைப் புறக்கணித்து வருகின்றனர்.

சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்து வழங்கப்படுவதாக சேர் ஜோன் கொத்தலாவ தெரிவித்த போது, சிங்கள மட்டும் சட்டம் 24 மணித்தியாலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அறிவித்தார். இதன் மூலம் இவர் பெரும்பான்மை சமூகத்தின் மட்டமான உள்ளுணர்வுகளை வென்றெடுத்ததன் மூலம் 1956இல் இடம்பெற்ற தேர்தலில் வெற்றிபெற்றார். அதாவது, நான் இங்கே மட்டமான உள்ளுணர்வுகள் என ஏன் குறிப்பிட்டுள்ளேன் என்றால், 1958இல் சிங்களவர்களால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன் பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் மக்கள் மீது பெரும்பான்மை சமூகத்தினர் படுகொலைகளை நிகழ்த்தினர்.

இவ்வாறான படுகொலைகள் மற்றும் கிளர்ச்சிகள் போன்றன சிங்கள அதிகாரத்துவத்தாலும் ஏனைய சமூகங்களை சிங்கள சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாமையுமே காரணமாகும். தமிழ் பேசும் மக்கள் உட்பட அனைத்து சமூகங்கள் மத்தியில் சமத்துவத்தையும் கௌரவத்தையும் கூட்டாட்சி நிர்வாக அலகின் மூலம் நடைமுறைப்படுத்த முடியும். மக்கள் தொகையில் அதிகமுள்ள சமூகம் ஒன்று ஒருபோதும் மற்றைய சமூகங்களின் உறுப்பினர்களை விடப் பெரிதாகவோ அல்லது சிறந்ததாகவோ இருக்க வேண்டும் எனக் கருதமுடியாது.

தமிழர் பாரம் பரிய வாழிடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

ஒன்றுபட்ட இலங்கையின் நலனுக்காக இங்கு வாழும் ஏனைய சமூகங்களுடன் பணியாற்றும் போது எமது தனித்தன்மையையும் கௌரவத்தையும் பேணுவதற்கான ஒரு சிறந்த ஏற்பாடாக கூட்டாட்சி காணப்படுகிறது. இதன் காரணமாகவே ஒற்றையாட்சிக்குப் பதிலாக நாங்கள் கூட்டாட்சி நிர்வாக அலகை கோரியிருந்தோம்.

சரத் என்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாகவும் குறிப்பிட்டிருந்தார். அதாவது கூட்டாட்சியை அமுல்படுத்தினால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் வாழமுடியாது எனவும் இதனாலேயே நான் தமிழ் இளைஞர்களிடம் சிங்கள்வர்களைத் திருமணம் செய்ய வேண்டாம் என அறிவுரை கூறியிருந்ததாகவும் சரத் தனது செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

**முதலமைச்சர்:** நான் எனது பின்னணியை நினைத்துப் பெருமைப்படுகிறேன். நான் இந்த நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளேன். இந்த நாட்டில் வாழும் அனைத்து மதங்கள் தொடர்பான அறிவை நான் கொண்டுள்ளேன். பௌத்தம் தொடர்பாக வணக்கத்திற்குரிய நாரதா தேரர் கருத்துரைகளை வழங்கும் போதெல்லாம் நான் வஜிரமயாவிற்கு சென்றிருந்தேன். இந்த நாட்டில் பேசப்படும் மூன்று பிரதான மொழிகளையும் ஓரளவிற்கு அறிந்து வைத்துள்ளேன். நான் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர்கள், மலாயர்கள் மற்றும் ஏனைய இனத்தவர்களுடன் நெருங்கிப் பழகியுள்ளேன்.

நான் ஒரு இலங்கைத் தமிழன் என்று கருதுவேனே தவிர சிறிலங்கன் எனக் கருதுவதில்லை. ஆனால் சிங்களவர்களும் முஸ்லிம்களும் யாழ்ப்பாணத்தில் வசிப்பதற்கான உரிமையைக் கொண்டிருக்கவில்லை என நான் ஒருபோதும் கூறவில்லை. இது தவறானது. அரசின் ஆதரவுடன் தற்போதும் மேற்கொள்ளப்படும் கொலனித்துவத்தை நான் எதிர்க்கின்றேன். தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் இடங்களில் திட்டமிட்ட ரீதியில் சிங்களக் குடியேற்றங்களை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதை நான் எதிர்க்கின்றேன்.

என்னுடைய சொந்தப் பிள்ளைகளே சிங்களவர்களைத் திருமணம் செய்துள்ள போது நான் எவ்வாறு தமிழ் இளைஞர்களிடம் சிங்களவர்களைத் திருமணம் செய்யக்கூடாது எனத் தெரிவித்திருக்க முடியும்.

இலங்கையின் உண்மையான வரலாற்றை நான் அறிந்திருக்க வேண்டும் எனவும் இலங்கை வரலாற்று ரீதியாக சிங்கள நாடாகவே உள்ளதாகவும் சரத் தெரிவித்திருந்தார்.

**முதலமைச்சர்:** இலங்கைத் தமிழ் மக்களின் வரலாற்றை இங்கு கூற வேண்டும். தமிழ் திராவிடர்கள் இந்த நாட்டின் மூலக் குடி மக்களாவர். தமிழர்கள் வரலாற்றின் சில கட்டங்களின் பின்னரே இந்த நாட்டிற்கு வந்தனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவர்கள் அனைவரும் இந்த நாட்டின் மூலக் குடிமக்களான திராவிடத் தமிழர்களாகவே கருதப்படுகின்றனர். ஒரு பாடசாலையில் பல்வேறு வகுப்புக்களில் மாணவர்கள் இணைகின்றனர். ஆனால் இவர்கள் அனைவரும் அதே பாடசாலையின் பழைய மாணவர்களாகவே கருதப்படுகின்றனர்.

இதேபோன்றே வடக்கு கிழக்கில் உள்ள அனைத்துக் குடிமக்களும் திராவிடத் தமிழர்களாவர். 44 ஆண்டுகளாக ஆட்சி செய்த தமிழ் மன்னனான எல்லாளன் காலத்திலேயே இலங்கை ஒரு தலைமையின் கீழ் ஆளப்பட்டது. அதற்கு முன்னர் இந்த நாடானது பல்வேறு சுயாதீன மாநிலங்களைக் கொண்டிருந்தது.

ஒரு மன்னன் இந்த நாட்டிலிருந்த அனைத்து இராச்சியங்களையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து அவற்றை ஒன்றாக இணைத்திருக்காவிட்டால் ஒருபோதும் ஒன்றுபட்ட இலங்கை உருவாகியிருக்காது.

பிரித்தானியாவின் கொலனித்துவத்தின் கீழ் இலங்கை உட்பட்டிருந்த காலப்பகுதியில் அதாவது 1833ல் பல்வேறு நிர்வாக அலகுகள் ஒன்றிணைக்கப்பட்டு ஒற்றையாட்சி கொண்டு வரப்பட்டது. இன்றுவரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பெரும்பான்மை தமிழ் பேசும் மாகாணங்களாக உள்ளதால் கடந்த காலங்களில் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழ் பேசும் மக்களின் குடியியலில் மாற்றம் கொண்டு வருவதற்கான திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டன. தற்போதும் இந்த நடவடிக்கைகள் இராணுவப் படைகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன.

1970களில் சிறிமாவோவின் ஆட்சி இடம்பெற்ற போது திருகோணமலையைச் சூழவும் சிங்கள கொலனித்துவங்கள் இடம்பெற்றன. இவ்வாறு குடியேற்றப்பட்டவர்களை நான் 1970களில் சந்தித்தேன். அரசாங்கமே தங்களை தமிழ் மக்களின் பிரதேசங்களில் குடியேற்றுவதில் விருப்பம் கொண்டிருந்ததாகவும் ஆனால் தமக்கான போதியளவு பாதுகாப்போ அல்லது வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

சிங்களவர்கள் மத்தியில் தெற்கில் வாழும் 58 சதவீத தமிழ் மக்கள் தொடர்பாக றியர் அட்மிரல் சரத் சுட்டிக்காட்டியிருந்தார்.

**முதலமைச்சர்:** அவர்கள் ஒரு நாட்டின் கீழ் வாழ்கின்றனர். ஆகவே தாம் வடக்கிலா அல்லது தெற்கிலா வாழவேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிக்க முடியும். கொழும்பிலுள்ள தமிழர்களோ அல்லது வடக்கு மற்றும் கிழக்கிலுள்ள சிங்களவர்களோ பலவந்தமாக வெளியேற்றப்பட முடியாது. இது கூட்டாட்சி தொடர்பான பிழையான கருத்தாகும். சிங்கள மக்கள் மத்தியில் கூட்டாட்சி தொடர்பாக தவறான புரிந்துணர்வு காணப்படுகிறது.

அரசியல்வாதியல்லாத ஒவ்வொரு படித்த சிங்களவனும் இந்த நாட்டில் அனைத்து சமூகங்களும் சமத்துவத்துடனும், கௌரவத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்கு அனுமதிக்கும் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகளைக் கொண்ட கூட்டாட்சி நிர்வாக அலகை வரவேற்கிறார்கள் என்றார் முதலமைச்சர். (மு-1)

# வாளுடன் வந்தவர்கள் பொலிஸாரை தாக்கினர்!

(வவுனியா)

வவுனியா, பசார் வீதியில் மோட்டார் சைக்கிளில் வாளுடன் வந்த இருவர் கடமையில் நின்ற போக்குவரத்து பொலிசாரை தாக்கிவிட்டு தப்பியோடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றிரவு 9 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தர்மலிங்கம் வீதி வழியாக வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று பசார் வீதி வழியாக வவுனியா நகரை நோக்கிச் சென்றுள்ளது. இதன்போது பசார் வீதியில் இருந்து மில் வீதிக்கு செல்லும் சந்தியில் போக்குவரத்து கடமையில் இருந்த இரு போக்குவரத்து பொலிஸார் குறித்த மோட்டார் சைக்கிளை மறித்துள்ளனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் போக்குவரத்து பொலிஸாரை காலால் எட்டி உதைந்துள்ளார்.

இதனையடுத்து போக்குவரத்து பொலிஸார் ஒருவர் நிலை தடுமாறி கீழே வீழ்த்துள்ளார்.

போக்குவரத்து பொலிஸார் கீழே வீழ்ந்ததும் மோட்டார் சைக்கிளை வேகமாக செலுத்திய போது குறித்த மோட்டர் சைக்கிளில் பின்பக்கத்தில் இருந்தவர் தவறி கீழே விழுந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்ட இரண்டு வாள்களும் இதன் போது கீழே விழுந்துள்ளன. கீழே விழுந்த இளைஞன் தப்பியோடி விட போக்குவரத்து பொலிஸார் இரு வாள்களையும் மீட்டுள்ளனர்.

இதேவேளை, அவ்வீதியில் உள்ள சிசி டிவி கமராவை பரிசோதித்தால் குறித்த மோட்டார் சைக்கிளை கண்டு பிடிக்க முடியும் என பொலிஸார் தெரிவித்தனர். (மு-250,281)

## யாழில் 50 பவுண்...

ஆராதனைக்காக வீட்டிலுள்ளவர்கள் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், வீட்டின் கூரையை பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் தமது கைவரிசையை காட்டியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (மு-1)

## சுரேஷ் அணியுடன்...

வைத்து ஈ.ரோஸின் பொது செயலாளர் ராஜேந்திரன் இதனை தெரிவித்தார்.

இதனிடையே, குறித்த புதிய கூட்டணியானது வடக்கு கிழக்கு உள்ளிட்ட சில பகுதிகளில் போட்டியிடவுள்ளதாக, இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடுவதினால், தமக்கு பாதிப்பு ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எண்ணுவதாக சுரேஷ் பிரேமசந்திரன் இதன் போது குறிப்பிட்டமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (மு-1)

யாழ்ப்பாணத்தில் 10 வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் நிலையத்தினால்
IELTS A1 B1, IELTS - ACC, Spoken English மற்றும் Diplomo in English
ஆகிய பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
(C-657)
தொடர்புகளுக்கு :- 077 536 7818
British College of Higher Studies

## புதிய அரசியலமைப்பு வரும்...

வித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மனித உரிமைகள் மற்றும் அரசியலமைப்புத் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிகாரப்பகிர்வானது அரசியல்வாதிகளுக்கானது என்றால், இலகுவாகவே நாங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யப் போவதில்லை.

அதற்குக் காரணம் அதிகாரங்கள் மக்களிடத்தில் இருக்கவேண்டும். மக்களுடைய பிரதிநிதிகள் ஆட்சி செய்யவேண்டும் என்பதனாலேயே நாங்கள் மக்களுக்கு அதிகாரங்கள் கிடைக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

எனவே ஒழுங்கான முறையில் அரசியலமைப்புச் சட்டத்தில் அதிகாரங்கள் பகிரப்படுகின்ற வரையில் ஆட்சி அதிகாரங்களை மத்திய அரசுடன் நாங்கள் கையாள மாட்டோம் என்ற கொள்கையுடன் இருக்கின்றோம் என எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்துள்ளார். (மு-1)

## இளைஞர்களை...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் , ஆயுத போராட்டம் என்பது கேவலமான ஒன்றல்ல. தமிழ் மக்களின் உரிமைக்காக போராடி உயிரிழந்தவர்களை கொழும்பில் இருந்து வந்தவர் கொச்சைப்படுத்த முடியாது.

ஆயுத போராட்டத்திற்கு இளைஞர்களை அழைத்து சென்றதில் பெரும் பங்கு தமிழரசு கட்சிக்கும் உண்டு. இடையில் அரசியலுக்கு வந்தவர்களுக்கு அது பற்றி தெரியவில்லை.

தமிழர்களின் உரிமை பிரச்சினைகளை சர்வதேச தரத்திற்கு கொண்டு சென்றவர்கள் ஆயுதமேந்தி போராடி மரணித்தவர்களும், ஆயுத போராட்டத்தில் ஈடுபட்டவர்களுமே.

எனவே சுமந்திரன் தன்னால் இந்த தமிழ் மக்களுக்கு எதையாவது பெற்று தர முடிந்தால் பெற்றுக்கொடுக்கட்டும். இல்லை என்றாலும் பரவாயில்லை.

போராட்டத்தை கொச்சைப்படுத்தாமல் இருக்க வேண்டும். என மேலும் தெரிவித்தார். (மு-1)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-622)
UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

## வாள்வெட்டு...

யில் அமைந்துள்ள வீடொன்றில் பல இலட்சம் ரூபாய் பெறுமதி மிக்க பொருட்களை அடித்து நொறுக்கியுள்ளதோடு, வீட்டில் இருந்த நகை மற்றும் பணம் ஆகியவற்றையும் திருடி சென்றுள்ளது. இந்த சம்பவம் நேற்று இரவு ஒன்பது மணியளவில் நடைபெற்றுள்ளது.

குருசுமதவடி உயரப்புலம் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் குடும்பஸ்தரும், பத்து வயதுக்கு குறைந்த அவரது இரு பிள்ளைகளும் மற்றும் அவரது மைத்துனரும் இருந்துள்ளனர். இதன் போது மானிப்பாய் வீதி வழியாக இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆறுபேர் வீதிகளால் வந்தவர்களுக்கு வாள்களை காட்டி கொண்டு வந்து மேற்படி வீட்டிற்குள் புகுந்துள்ளனர்.

இதன்போது வாள்களை கண்டவுடன் அங்கிருந்த குடும்பஸ்தர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். வீட்டில் இரு சிறு பிள்ளைகளும் இருந்துள்ளனர். அங்குவந்த வாள்வெட்டுக் குழு இரு பிள்ளைகளையும் வாள்களை காட்டி வெருட்டி ஒரு மூலையில் இருத்தி விட்டு, வீட்டில் இருந்த தொலைக்காட்சி 2, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி, குளிர்சாதன பெட்டி, அலுமாரி, மேசை, ஜன்னல் என வீட்டில் காணப்பட்ட அனைத்து பொருட்களையுமே வாள்களாலும் கோடரிகளாலும் அடித்து உடைத்துள்ளனர்.

சுமார் 10 நிமிடங்கள் வரை அந்த வீட்டில் நின்று கொண்டு அட்டகாசம் புரிந்துள்ளனர். பின்னர் அங்கிருந்து தப்பியோடி, மீண்டும் வீதிகளால் சென்றவர்களுக்கு வாள்களை காட்டி மிரட்டி விட்டு சென்றுள்ளனர்.

இதன் பின்னர் குறித்த வீடு உருக்குலைந்து காணப்பட்டது. குறித்த வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து செல்லும் போது அலுமாரியில் இருந்த நாற்பதாயிரம் பணம் மற்றும் ஐந்து பவுண் நகையையும் திருடி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் உடனடியாக மானிப்பாய் பொலிஸாருக்கு தெரிய படுத்திய போதிலும் அங்கு வந்த மானிப்பாய் பொலிஸார், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் சம்பவம் நடைபெற்ற பிரதேசம் யாழ். பொலிஸ் நிலையத்துக்கு உரியது என கூறிவிட்டு சென்றுள்ளனர்.

இதன் பின்னர் 119 அவசர அழைப்புக்கு தொடர்பு கொண்ட போதிலும் அவர்கள் சிங்களத்தில் உரை 23☛

## யாழ். மண்ணைவிட்டு...

ளார்.

வருடாந்த விருந்துபசார விழாவும் இடமாற்றலாகும் உத்தியோகத்தர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் நேற்று யாழ்.மேல் நீதிமன்றில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யாழ்ப்பாணத்தில் ஒரு பழக்கம் இருந்து வருகிறது.

வந்தவரை வரவேற்பதும் இல்லை; செல்பவரை வாழ்த்துவதும் இல்லை. நான் மேல் நீதிமன்ற நீதிபதியாக வந்த போது சட்டத்தரணிகள் கூட என்னை வரவேற்கவில்லை. வேறு மாவட்டங்களில் அமோக வரவேற்புகள் நடைபெற்றது.

அரச கடமையாற்ற வருகிறார்கள், போகிறார்கள் என எண்ணக்கூடாது. ஒரு குடும்பமாக இருக்க வேண்டும். நீதிமன்றில் கடமையாற்றுபவர்கள் ஒரு குடும்பமாக இருக்க வேண்டும். அதுவே எனது சேவையின் நோக்கம். பொறுப்புணர்வுடன் தமது கடமைகளை செய்ய வேண்டும். தம்மையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு நான் வருகை தந்ததற்கான நோக்கம் நிறைவேறிவிட்டது. அந்த பொறுப்பை நிறைவேற்றிவிட்டேன். மட்டக்களப்பு மாவட்டத்தை நேசிக்கிறேன் அங்கு சென்று அங்குள்ள மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன்.

அதற்கான இடமாற்றம் விரைவில் எனக்கு வரும். கிழக்கு மாகாணத்தில் இதுவரை நான் வேலை செய்யவில்லை. இந்த மண்ணை யாரும் ஆளலாம். ஆனால் அங்கு சென்று நல்லது செய்ய ஆவலாகவுள்ளேன் என மேலும் தெரிவித்தார். (மு-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## திருமதி புவனேஸ்வரி கந்தையா



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி கந்தையா நேற்று (10.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பொன்னாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தையாவின் பாசமிகு மனைவியும் கணேசலிங்கம், ஆனந்தலிங்கம், காந்தலிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் புஸ்பராணி, மிசோலா, ஞானமதி, அமரர் குணரத்தினம் ஆகியோரின் மாமியாரும் விதுசா, ஜெலிக், வனசா, பவிசன் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2017) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

MBCS லேன்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(1681)
தகவல்:- குடும்பத்தினர்
மகன் (வான் சிறி)

வேலைவாய்ப்பு
O/L, A/L முடித்து விட்டீர்களா?
இன்றே இணையுங்கள்
முகாமைத்துவ பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு
- பயிற்சிக்காலம் 6 மாதம் மட்டுமே
- பயிற்சியின் போது 12000/= - 15000/=
- பயிற்சியின் பின்னர் 45000/= மேல்
- வயதெல்லை 18 - 28
நேர்முகத்தேர்வில் தகைமைக்கேற்ற பதவி உயர்வு வழங்கப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே விரையுங்கள்.
தொடர்புகளுக்கு :-
077 802 1371 / 077 999 4807
(1680)

K.M.M. திருமணசேவை
(யாழ்ப்பாணம், சுவிஸ்)
எம்மிடம் உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். அத்துடன் ஜனன ஜாதகம், குறிப்பு, பலன்கள், கணணி மூலம் கணித்துத் தரப்படும்.
T.P : 021 223 2222 (Jaffna)
076 8351932 (Viber)
0041768185443 (Switz)
அலுவலக நேரம் : திங்கள் - வெள்ளி
8.00am - 4.30 pm
சனி - 9.00am - 1.00 pm
முகவரி - ஞான வைரவர் கோவிலடி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(1667)

வாடகைக்கு விடப்படும்
தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு அமைதியான சூழலுடன், தேவையான வசதிகளுடன் கட்டடம் வாடகைக்கு உண்டு.
இடம்: Sirambiyady Lane (Off Stanley Road) Jaffna.
தொடர்புகளுக்கு :-
077 536 7818
(C-657)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.